உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹு மார்கழி-மீ 2-உ (16—12—1934) | மலர் 17.

## வெளிவேஷங்களைதல்

(சுத்தமல்லி தோழர் அ. சிதம்பரநாதன்)

"மாங்காய்ப்பாலுண்டு" என்ற மெட்டு.

கண்ணிகள்.

(1) விஞ்ஞானக் கொள்கையின்
விளக்கத்தைத் தெரிவோர்க்கு
அஞ்ஞான மேதுக்கடி? குதம்பாய்
அஞ்ஞான மேதுக்கடி?

(2) மதியோடு வாழ்க்கையை
மாண்புற அமைப்போர்க்கு
விதியென்ப தேதுக்கடி? குதம்பாய்
விதியென்ப தேதுக்கடி?

(3) மண்ணாசை யோடிங்கே
மறைவோமென் றுணர்வோர்க்கு
விண்ணாசை யேதுக்கடி? குதம்பாய்
விண்ணாசை யேதுக்கடி?

(4) கவனத்தோ டுழைத்துத்தன்
கருமத்தை முடிப்போர்க்கு
அவன்செய லேதுக்கடி? குதம்பாய்
அவன்செய லேதுக்கடி?

(5) குடும்பமா யுலகோரைக்
குறிப்பிடுந் தோழர்க்கு
கடும்பகை யேதுக்கடி? குதம்பாய்
கடும்பகை யேதுக்கடி?

(6) அஞ்சாமை யுடன்வாழ
அருகதையுடையோர்க்கு
வஞ்சக மேதுக்கடி? குதம்பாய்
வஞ்சக மேதுக்கடி?

(7) சுதந்தர வாழ்க்கையைத்
துயரின்றி யமைப்போர்க்கு
மதமென்ப தேதுக்கடி? குதம்பாய்
மதமென்ப தேதுக்கடி?

(8) வந்திடும் பிணிநீங்க
மருந்துகொள் மாந்தர்க்கு
மந்திர மேதுக்கடி? குதம்பாய்
மந்திர மேதுக்கடி?

(9) மனிதாபி மானமே
மாண்பெனக் கொண்டோர்க்கு
இனிபேத மேதுக்கடி? குதம்பாய்
இனிபேத மேதுக்கடி?

(10) சுயமரி யாதையின்
தூய்மையை யுணர்ந்தோர்க்கு
பயமென்ப தேதுக்கடி? குதம்பாய்
பயமென்ப தேதுக்கடி? (விஞ்ஞான)

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 |
| விவாக விடுதலை | 0-4-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 |
| மனித உற்பவம் | 0-8-0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| The Right of Temple Entry (Eng-'lish.) | 1-0-0 |
| The Crux of the Indian Problem (Eng-'lish.) | 1-0-0 |
| உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| சாமிகளின் அடிமை | 0-12-0 |
| லோகல்போர்டுஆக்ட்(சென்னை) | 2-0-0 |
| பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| பெண்ணுரிமைக் கீதங்கள் | 0-1-0 |
| சமதர்மக் கீதங்கள் | 0-0-6 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "சமதர்மம்."

ஆசிசிரியர்:— வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும்; சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

---

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளிவருகிறது.

| | |
|---|---|
| வருட சந்தா ரூ. | 3—0—0 |
| 6 மாதம் ,, | 2—0—0 |
| 3 மாதம் ,, | 1—4—0 |

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

---

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டுஇரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

### மாதர் சுதந்திரம்.

இது பண்டிதர் சாமி சிதம்பரனூர் அவர்களால் எழுதப்பட்டதாகும். இந்நூலில் பெண்கள் எவ்வெவ்வழிகளில் சுதந்திரம் பெறவேண்டும் என்பதும், பெண்கள் சுதந்திரத்துக்கு ஆண்கள் எவ்வளவு முட்டுக்கட்டையாய் இருக்கிறார்கள் என்பதும், பெண்கள் எப்படி தங்கள் சுதந்திரத்துக்கு பாடுபட வேண்டும் என்பதும் விளக்கமாக்கப்பட்டிருக்கிறது.

விலை அணு 8.

### மனித உற்பவம்,

இது தோழர் சிங்காரவேலு B. A., B. L., அவர்களால் எழுதப்பட்டது. பிரபஞ்ச உற்பத்தி—ஜீவராசிகள் சூரிய சந்திரன் உற்பத்தி—மனிதர்கள் எப்படி உண்டானார்கள் என்னும் விஷயங்களும் மனிதர்கள் ஜீவன்கள் பூர்வ சரித்திரம் இன்னது என்றும், இனி ஏற்படப்போகும் மாறுதல் என்ன என்றும் சரித்திரம்—விஞ்ஞானம் ஆகியவைகளை ஆதாரமாய் கொண்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணு 8.

### சாமிகளின் அடிமை.

இந்நூல் அமரிக்க சீர்திருத்த மாது மிஸ். மேயோ அம்மையால் எழுதப்பட்ட தேவதாசிகள் என்னும் ஆங்கிலப்புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. 170-பக்கம் கொண்டதாய் நல்ல கிளேஸ் காகிதத்தில் தெளிவானஎழுத்தில் பதிக்கப்பட்டது. ஏற்கனவே 1—8—0 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இப்போது விலை அணு 8.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

## குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# மதமொழிக்கும் உலகப் புரட்சி.

## ஜோசப் மெக்காபி எழுதியதின் மொழிபெயர்ப்பு.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இன்றைக்கும் பரிணாம வாதிகளுக்கும் ஆதிகர்த்தா கொள்கைக்காரர்களுக்கும் சண்டை அதிகமாக இருக்கிறது. அது "ஜீனிஸிஸ்" என்னும் முதல் புத்தகத்தை ஆதரிப்பதற்காகும். அது தவறுதலான ஒரு ஆதரிப்பாகும். சரியான கல்வி அறிவு பெற்ற மதாபிமானிகள் ஒவ்வொருவராலும் வெகு காலத்திற்கு முன்னமேயே அது கைவிடப்பட்டது. பண்டைக் கால பேபிலோன் சரித்திரத்தின் தொகுப்பு என்று ஒவ்வொரு படிப்பாளியாலும் தெரிந்து கொள்ளப் பட்டிருக்கும் விஷயத்திற்காக லட்சாதி லட்சம் அமெரிக்கர்கள் சினந்து சண்டை செய்வதென்றால் அது வேடிக்கையான விஷயம்தான். இவ்விஷயத்தைப் பற்றி யதார்த்தமாகவே தெரியாதிருக்கும் ஆஸ்திகர்களுக்கு உண்மையைத் தெரிந்து கொள்ளும் காலம் வரும். அப்போது அவர்கள் பரிணாமம் கடவுளை மறந்து விடுகிறது என்ற கூப்பாட்டோடு நின்று கொள்வார்கள்.

இது உண்மைதான். இதை மறுக்கும் அமெரிக்கா விஞ்ஞானிகளுக்கு மரியாதை கிடையாது. ஆனால் ஆஸ்திகர்களுக்கு அவ்வாறில்லை. சரித்திரம் கடவுளைப் பற்றிச் சொல்வதில்லை. அதேபோல அது நாஸ்திகத்திற்குக் கொண்டுபோகிறது. வான சாஸ்திரமும், அப்படியே செய்கிறது. லாப்லேஸ் என்னும் வான சாஸ்திரியை நெப்போலியன், அவருடைய வான சாஸ்திரத்தில் கடவுள், எங்கே இருக்கிறார் என்று கேட்டதாகவும் அதற்கு அவர் தான் கடவுளென்றவை எதுவும் இல்லாமலே தனது நூலை முடித்ததாகவும் சொல்லப்படுகிறது. அக்கதை உண்மையென்று தோன்றவில்லை. ஆயினும் அது நவீன வான சாஸ்திரத்தின் நல்ல விளக்கமாகும். பூகர்ப்ப சாஸ்திரப் புத்தகங்களில் நாஸ்திகத்தைப் பரிணாமம் அவ்வளவாக ஆதரிக்கவில்லை. விஷயத்தின் பக்குவமற்ற நிலைமையும், பயங்கரமான கொடுமையும், இரத்தப்பெருக்கும், வீண் விரையமும், அபிவிருத்தி மந்தமும் கோடிக்கணக்கான வருஷங்களாக இருந்து வந்தன. இவைகளே நாஸ்திகத்தை வளர்க்கலாயின. உள்ளது சிறத்தல் என்னும் பரிணாமத்தை விலக்கி விட்டாலும் இவ்விஷயங்களின் பலன்களிலிருந்து தப்பமுடியாது.

ஆனாலும் பரிணாமத்திற்கேற்பட்ட எதிர்ப்பினால் உலக அபிப்பிராயம் தாக்கப்பட்டது. நூற்றைம்பது வருஷங்களாக பகுத்தறிவு இயக்கம் இருந்து வருவதால் உலகம் அதற்குத் தயாராகவே இருந்தது. கல்வி அபிவிருத்தி, படிப்பின் மலிவு, தொழிலாளிகளின் அதிகமான ஓய்வு, அவர்களுடைய அதிகப்பட்ட கூலிகள் ஆகிய சௌகரியங்கள் பத்தொன்பதாவது நூற்றாண்டில் உண்டாயின. இவைகளால் புதிய மகா ஜனங்கள் உண்டாகலானார்கள். மக்களிடத்தில் புதிய அறிவு வளரலாயிற்று. விஞ்ஞானம் வெகு நன்றாய்ப் பிரகடனஞ் செய்யப்பட்டது. பாதிரிகளின் சமுதாய ஒழுக்கத் தவறுதல் காரணமாக அவர்கள் எதிர்க்கப் படுவதை ஜனங்கள் ஆதரித்தார்கள். இங்கிலாந்தில் ஹக்ஸ்லேயும், ஜெர்மனியில் ஹாக்கெலும், டார்வினி கொள்கையை எடுத்து, அதை மனிதனுக்குச் சம்பந்தப் படுத்தி ஆராய்ச்சி செய்தார்கள். உலகம் மிகுந்த பரபரப்பை அடைந்தது.

பேபிலோன் கட்டுக் கதைகளைக் கண்டுபிடித்த சிலாசாசன ஆராய்ச்சி பைபிளுக்குத் தீங்கு விளைத்தது போல வேறு எதுவும் செய்யவில்லை. அது வெறும் கற்பனையல்ல. அப்படியிருந்தும் ஆதிகர்த்தா கொள்கையினர் அவைகளைப் பற்றி ஒன்றும் கேள்விப்படாதவர்கள் போலவே தோன்றுகிறார்கள். ஆனால் "உள்ளது சிறத்தல்" என்னும் பரிணாமக் கொள்கையால் ஏற்பட்ட பலன் மிகவும் அபாயகரமானதாக இருந்தது. மனிதன் கீழான பிராணியிலிருந்து உயர்ந்தவன் என்றால் ஆத்மாவுக்கு அதிகமான இடமில்லை. உயிரின் அபிவிருத்தி அவ்வளவு மெதுவாகவும் அவ்வளவு தடைபட்டதாகவும், இரத்தச்செலவுக்குட்பட்டதாகவும் இருந்தால் மனமானது கடவுளை அதிலிருந்து விலக்கி விடவே எண்ணங்கொண்டது. ஹக்ஸ்லேயுக்கு நாஸ்திகம் என்ற வார்த்தையில் விருப்பமில்லை. நாஸ்திகம் என்றால் பொதுவாய்க் கடவுளே இல்லையென்று அர்த்தம் எனக் கருதப்படுவதால், வேறு வழியில் அதை ருசுப்படுத்தவும் முடியாதிருப்பதால், அவர் "அக்ஞஸ்டிக்" என்ற வார்த்தையைக் கற்பித்தார். அதாவது மனிதனுக்குக் கடவுள் இருக்கிறாரா என்ற விஷயம் தெரியாது என்பதாம். அல்லது கடவுள் இருப்பது ருசுவாகவில்லை என்று அர்த்தம். எல்லாக்காலத்திலும் படித்த மக்கள் நாஸ்திகம் என்ற வார்த்தையை உபயோகிக்கப் பின் வாங்குகிறார்கள். அவர்கள் "அக்ஞஸ்டிசம்" என்னும் வார்த்தையைச் சாதாரணமாய் உபயோகிக்கிறார்கள். ஜெர்மனியில் ஹாக்கெல் "மானிஸ்ட்" என்ற வார்த்தையைக் கற்பித்தார். அவ்வார்த்தைக்கு ஏகசக்தி கொள்கை என்பதாகும். அவ்வார்த்தையை லட்சக்கணக்கானவர்கள் உபயோகிக்கிறார்கள்.

இப்படியிருக்க "உள்ளது சிறத்தல்" என்னும் பரிணாமக் கொள்கை உலகமெங்கும் பரவலாயிற்று. வான சாஸ்திரம் முன்னேற்றம் அடையவே உலகங்கள் "உள்ளது சிறத்தல்" என்னும் விதிப்படியே இயங்குகின்றன என்ற உண்மை மிகவும் விளக்கமாயிற்று. சரித்திர காலத்திற்கு முந்திய மனிதனுடைய வாழ்க்கை விபர சாஸ்திரத்தால் உலக முழுவதும் ஆயிரக் கணக்கானவர்கள் தோன்றி அதைப் பற்றி சிந்தனை செய்யலானார்கள். லட்சக்கணக்கான வருஷங்களாக மனிதன் பரிணாம விதிக்கு உட்பட்டே வந்திருக்கிறான் என்பதற்கு ஏராளமான சாக்ஷியம் ஏற்பட்டது. பூகர்ப்ப சாஸ்திரம் வாழ்க்கைச் சரித்திரத்தின் அநேக குறைகளைப் பூர்த்தி செய்தது. இவ்விஷயங்களைப் பொது ஜனங்களுக்குக் காட்ட ஒவ்வொரு பெரிய பட்டணங்களிலும் காட்சி சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. நீங்கள் பெரிய காட்சிசாலை முழுவதும் அலைந்து கவனித்துப் பார்த்தால் "உள்ளது சிறத்தல்" என்னும் இயற்கை விதி வெறும் சித்தாந்தம் அல்லவென்று தோன்றும். காட்சி சாலைப்பொருள் ஒவ்வொன்றிலும் அவ்விதியின் செயல் காணப்படும்.

சமுதாயக்காரர்கள் சமுதாயஸ்தாபனங்களையும், அரசியல் ஸ்தாபனங்களையும் பரிணாமத்தின் படி அபிவிருத்தி செய்ய ஆரம்பித்தார்கள். பல மத ஆராய்ச்சி நிபுணர்கள் உலக மதங்களையெல்லாம் பரிணாம விதிப்படி ஒன்று சேர்த்தனர். அவ்வேற்பாட்டில் கிறிஸ்து மதமும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. ஒழுக்க நியதிகளும் பரிணாமத்தால் தான் ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவைகளின் உற்பத்தியும் வளர்ச்சியும் தேடிக்கண்டுபிடிக்கப்பட்டன. மனிதனுடைய மனதிற்குத் தெரிந்த ஒவ்வொன்றும் பரிணாமத்தின் பலனேயென்றும் இன்றைக்கும் பரிணாம நிலை இருந்து வருகிறது என்றும் உண்மையில் ருசுவாய் விட்டது.

இப்பொழுது இருப்பவையெல்லாம் வெறும் தோற்றமே யாகும். இயங்கும் படக்காட்சி மத்தியில் நின்று போனால், அதைக்காண்போர்கண் முன் ஒரே படம் சலனமின்றியிருக்கும். உலக விஷயத்திலும் அப்படித்தான் என்று காண்கிறோம். அது முடிவில்லாமல் நீண்ட ஒரே படம். வித்தியாசமுள்ள லட்சக்கணக்கான மற்ற படங்கள் முன்னமேயே சென்று விட்டன. இனியும் அனேக லட்சம் படங்கள் தொடர்ந்துவரும். ஆனால் காலத்தின் ஆடும் படம் ஒரு தலைமுறை ஒரே ஒரு படத்தை மட்டும் பார்க்கக்கூடிய படி, அவ்வளவு மெதுவாய்ச் சுழலுகிறது.

பழைய காலத்துப் படங்கள் பண்டைக் காலப் பேரறிவாளர்கள் கனவிலும் கண்டறியாத மிகப்பெரிய விஷயத்தைப்பற்றியதாக இருந்தன. ஆரிஸ்டாட்டில் அல்லது ஆர்க்கிமிடில் தெரிந்த விஷயங்களை நாம் அறிந்திருக்கும் விஷயங்களோடு ஒத்துப் பார்க்கையில் அவர்கள் அறிந்தது குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் ஆரம்ப வாசகப் புத்தகத்தை ஒத்திருந்தது. விஞ்ஞானம் அனுபவத்தால் வாழ்க்கை மாற்றங்களை உண்டாக்கும் விஷயம் உலகத்திற்குத் தனது உண்மையான சக்தியைக்காட்டிற்று. இந்த விஞ்ஞானிகள் விஷயங்களைக் கற்றறிவதற்கு நம்பத் தகுந்த புது வழிகளைக் கண்டுபிடித்திருக்க வேண்டுமென்று ஜனங்கள் உணர்ந்தார்கள். விஞ்ஞானத்தின் பலனாய், இயந்திர வேலைகள் மின்சார சிற்பம், "கார்கள்", கப்பல்கள், ஆகாய விமானங்கள், கடைகள் முதலியவைகளில் மலிவான புதிய சுகிப்பிற்குரிய பொருள்கள் கிடைக்கின்றன. விஞ்ஞானத்தின் உதவியால் நம்முடைய வீடுகளும் போஜன விடுதிகளும் நாம் பிரமிக்கும் படியான பிரகாசமடைகின்றன. விஞ்ஞானம் எவ்வளவு உபயோகமுள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியும். உலகம் விஞ்ஞானக் காலத்தை அடைந்தது. விஞ்ஞானமும் மதமும் எப்போதும் போராட்டத்திலேயே இருக்கும்படி நேர்ந்து விட்டது. உலகத்திலுள்ள மதநூல் ஆசிரியர்கள் எல்லாம் விஞ்ஞானத்தைக்கோபிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்களுடைய கோபமெல்லாம் அவர்களையே பாதித்தது.

### அக்த்வனி

### 6-ம் அத்தியாயம்

சுமார் ஐந்து ஆயிரம் விஞ்ஞானிகள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் அமெரிக்காவிலுள்ள சர்வ கலாசங்கங்கள், உயர்தரக் கல்லூரிகள், இதர ஸ்தாபனங்கள் ஆகிய விடங்களிலுள்ள விஞ்ஞான ஆசிரியர்களாவார்கள். பள்ளிக்கூடங்களிலிருந்து பரிணாமத்தை தள்ளி விடுவார்கள் என்ற பயத்தினால் சில ஆசிரியர்கள் விஞ்ஞான மதத்திற்கு முழுதும் உடன்பாடாகவே இருப்பதாக எழுதித் தங்களுடைய கையெழுத்திட்டுப் பொது ஜனங்களுக்கு விளம்பரங்கள் வெளியிட்டார்கள். ஏனென்றால் பரிணாமம் மதத்தைக்கெடுத்து விடுமென்று நினைத்தார்கள். விளம்பரம் வெளியிட்டவர்கள் ஐயாயிரம் விஞ்ஞானிகளில் இருபது பேருக்கும் குறைந்தவர்களாவார்கள். மற்றவர்களுடைய மௌனம் அவர்களுடைய கருத்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# சம்சயத்தைக் குறித்து சம்பாஷணை.

## கிறிஸ்தவ பாதிரியும்—சம்சயவாதியும்.

### தோழர் சாரல்ஸ் பிராட்லா எழுதியது.

(கோலாலம்பூர் தோழர் ஆர். இராமநாதன் மொழிபெயர்த்தது)

கிறிஸ்தவ பாதிரி:—நம்பிக்கை தான் நேர்மையான வழி. உங்கள் சம்சயவாதம் சரியாயிருப்பின், நீங்கள் இறந்ததும், நீங்களும், உங்கள் சம்சயவாதமும் ஒழிகின்றது. ஆனால் உங்கள் சம்சயவாதம் தவறானதாயிருந்தால், நீங்கள் நிரந்தரமான சித்திரவதைக்குட்படுவீர்கள்.

சம்சயவாதி:— ஒருக்காலுமில்லை' எனது கட்சி சரியாயிருப்பின், நான் இறந்த பிறகும் எனது கொள்கை உலகில் பலமாக வேரூன்றி, மனித சமூகத்தின் முற்போக்கைத் தடைப்படுத்தும் மூட நம்பிக்கைகளை ஒழிக்கப்போராடுமாறு மக்களைத் தூண்டும்.

கி. பா:—ஆனால் உங்கள் கட்சி தவறானதாயிருக்கலாம். ஆகவே நம்பிக்கை தான் நேர்மையான வழி.

ச. வா:—எந்த நம்பிக்கை? நான் எல்லா மதங்களின் கோட்பாடுகளையும் ஒப்புக்கொள்ள வேண்டுமா?

கி. பா:—இல்லை. அது இயலாத காரியம். நீங்கள் உண்மையான கிறிஸ்தவ மதத்தைத்தான் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ச. வா:—ஏன் உண்மையான யூத மதத்தை ஒப்புக்கொள்ளலாகாது?

கி. பா:—ஒரு புது விதி இயேசு மூலம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ச. வா:—ஏன் உண்மையான இஸ்லாம் மதத்தை ஒப்புக்கொள்ளக்கூடாது?

கி. பா:—முகம்மது போராட்டக்காரர்.

ச. வா:—முகம்மது தீர்க்கதரிசியென்றும், "குரான்" தெய்வீக அறிக்கையென்றும் 20 கோடி மக்கள் நம்புகின்றனர்.

கி. பா:—அவர் ஓர் போலி தீர்க்கதரிசி, "குரான்" தெய்வீகத்தன்மை பொருந்தியதென்று கூறுவது வஞ்சகமாகும்.

ச. வா:—அப்படியாயின் முகம்மதை நம்புவது விரும்பத்தக்கதல்ல.

கி. பா:—கண்டிப்பாக விரும்பத்தக்கதல்ல. நீங்கள் கிறிஸ்துவையும், சுவிசேஷங்களையும் தான் நம்ப வேண்டும்.

ச. வா:—புத்தரையும், அவர் உபதேசங்களையும் நம்புவது நன்றல்லவா?

கி. பா:—புத்தமதம் நாஸ்திகத்திற்குச் சமமானது. அவர் உபதேசம் "அழிவு" என்னும் சொல்லின் மாறுபெயராகும்.

ச. வா:—அப்படியிருந்தும் நான்கு கோடி மக்கள் புத்தரையும், அவர் உபதேசங்களையும் நம்புகின்றனர்.

கி. பா:—இயேசுவின் உபதேசம் தான் உண்மையானது.

ச. வா:—திரியேகத்துவத்தில் நம்பிக்கையற்றவர்கள் (Unitarians) நம்பும் இயேசுவையா நீங்கள் குறிக்கின்றீர்கள்?

கி. பா:—திரியேகத்துவத்தில் நம்பிக்கையற்றவர்களா? "தெய்வீகத்தையும், இயேசுவின் புனிதத்தன்மையையும் மறுக்கும் சபிக்கப்பட்ட கூட்டத்தாரை"ச் சுடுவதற்கு சட்டரீதியாக அமைக்கப்பட்டுள்ள சர்ச்சுகளின் விதிகள் இருக்கிறதென்பதை நீங்கள் அறியீர்களா? திரியேகத்துவத்தில் (Trinity) இரண்டாவது ஆளாகிய இயேசுவை கடவுளாக நம்பும் நம்பிக்கை தான் ஸ்திரமானது.

ச. வா:—சிலுவையில் சித்திரித்திருக்கும் திரியேகத்துவத்தையா? அல்லது யாஸ்கோ கதேட்ரலிலுள்ள (Cathedral) தையா?

கி. பா.—புது ஏற்பாடு கற்பிக்கும் திரியேகத்துவத்தை நீங்கள் நம்ப வேண்டும். நீங்கள் குறிக்கும் சித்திரங்கள் தேவ நிந்தனையானதாகும்.

ச. வா;—அண்மையில் புது ஏற்பாட்டை புதுப்பித்தவர்கள் திரியேகத்துவ மூலவாக்கியத்தை, அது புரட்டானதென்று நீக்கவில்லையா?

கி. பா:—நீக்கினும், அது உபதேசத்தின் வன்மையைக் குறைக்கவில்லை. திரியேகத்துவத்தை அனைவரும் நம்ப வேண்டும்.

ச. வா:—சித்திரித்ததல்ல. அதை நினைக்க முடியுமா?

கி. பா:—முடியும்.

ச. வா:—மனிதன் அழிவற்றவனென்று நான் எண்ண முடியுமா?

கி. பா:— ஐக்கியப் பட்டிருக்கும் தந்தை, மகன், புனிதப்பிசாசு ஆகிய மூன்றிலும் நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

ச. வா:— திரியேகத்துவத்தில் மூவர் இருக்கின்றனரா? அவர்கள் மூவரும் கடவுள்களா?

கி. பா:—ஆம் ஆனால் ஒருகடவுள் தான் இருக்கிறார். அவர் உலகை மிகவும் நேசித்ததால், அவர் தன்னால் உண்டாக்கப்பட்ட தனது ஏக புதல்வனை உலகிற்கனுப்பி, அவனை உலகின் பொருட்டு இறக்கும்படி செய்தார்.

ச. வா:—இயேசு ஒருவர் தானா கடவுளால் உண்டாக்கப்பட்ட கடவுளின் புதல்வன்?

கி. பா:—ஆம் எல்லா உலகங்களுக்கும்முன்னர் உண்டாக்கப்பட்டவர்.

ச. வா:—இயேசு கடவுளா?

கி. பா:—ஆம்!

ச. வா:—இயேசுவுக்கு அன்னை இருந்தாரா?

கி. பா:—ஆம்! கன்னிமேரி.

ச. வா:—அவள் எப்பொழுது உலகில் வாழ்ந்தாள்?

கி. பா:—சுமார் 1900 ஆண்டுகட்கு முன்னால்.

ச. வா;—அது எல்லா உலகிற்கும் முன்பா?

கி. பா:—உங்கள் சந்தேகம் உங்களை சம்சய வாதத்திற்கிழுத்துச் செல்லும் விவாதமின்றி நம்புவது தான் சரியான முறை.

ச. வா:—இயேசு இறந்தாரா?

கி. பா:—ஆம்.

ச. வா:—இவர் பூரணமாக இறந்தாரா?

கி. பா:—ஆம்.

ச. வா:—அவர் இறந்தபிறகு உணவருந்தினாரா?

கி. பா:—முதலில் அவர் உயிர் பெற்றெழுந்தார்.

ச. வா. அவருக்கு மீண்டும் உயிர் கிடைப்பதற்கு எவ்வளவு காலம் சென்றது?

கி. பா:—அவர் வெள்ளிக்கிழமை இறந்து, ஞாயிற்றுக்கிழமை விடியற்காலையில் உயிர்பெற்றெழுந்தார்.

ச. வா:—கடவுள் தனக்கு உலகிடத்திலுள்ள அன்பைக் காட்டுவதற்கறிகுறியாக தனது ஏக புதல்வனை இறக்கும்படி ஒன்றரை நாள் அனுமதித்தாரா?

கி. பா:—இது தூஷணமும், பாஷண்டித்தனமுமாகும். இயேசு கல்லறையில் உயிர் பெற்றார் என்று போதிக்கும் சர்ச்சுகளின் போதனையை நம்புங்கள்.

ச. வா:—எந்தச் சர்ச்சு? எபிஸ்கோபலா—பிரெஸ் பிடீரியனா—பிரீ சர்ச்சா—லூதர் சர்ச்சா—கால்வினிஸ்டு சர்ச்சா—ரோமன் கத்தோலிக் சர்ச்சா—மெத்தேடிஸ்டு சர்ச்சா—இதில் எதை நம்புவது நலம்?

கி. பா:—உண்மையான சர்ச்சு ஒன்றுதான்.

ச. வா:—கோலன்ஸோ (Colenso) கூறுகிறபடியா? மாகோனேசி (Mackonochie) கூறுகிறபடியா? அல்லது பிரிவு கவுன்சிலின் நியாய பரிபாலனக் கமிட்டி கூறுகிறபடியா?

கி. பா:—அத்தகைய சந்தேகங்களால் என்னைத் துன்புறுத்தாதீர்கள். எங்ஙனமாயினும் சுவிசேஷங்கள் கற்பிக்கிறபடி இயேசுவை நம்புங்கள்.

ச. வா:—சுவிசேஷத்தின் எந்த மொழிபெயர்ப்பை? ரீம்சினுடையதையா? அல்லது அதிகாரம் பெற்ற ஜெயிம்ஸ் அரசருடைய மொழிபெயர்ப்பையா? அல்லது இற்றைய திருத்தியமைக்கப்பட்ட புது மொழிபெயர்ப்பையா?

கி. பா:—மொழிபெயர்ப்பைக் குறித்து இத்தகைய கேள்விகளைக் கிளப்பாதீர்கள் நம்புங்கள்.

ச. வா:—எவரை—அல்லது—எதனிடத்து?

கி. பா:—பரலோகத்திலிருக்கும் நமது பிதாவாகியகடவுளை நம்புங்கள்

ச. வா:— ஆங்கிலேயருடையவும், சுடேனியர்களுடையவும் —பிரஞ்சுக்காரர்களுடையவும், ஹாவோசினுடையவும்—போயருடையவும், சுலுக்களுடையவும் பிதாவையா?

கி. பா:—எல்லோருடையவும் பிதாவாகிய கடவுளை நம்புங்கள்.

ச. வா:—யுத்தங்களைத் தடுக்கும் வன்மையிருந்தும், அதைத் தடுக்காதிருக்கும் கடவுளையா? நோயைத்தடுக்கும் வன்மையிருந்தும், அதைத்தடுக்காதிருக்கும் பிதாவையா?

கி. பா:—இவைகளெல்லாம் இரகசியங்கள். நம்புவதுடன் திருப்தியடையுங்கள்.

ச. வா:—ஜாவாவிற்கு பூமி அதிர்ச்சியை அனுப்பின கடவுளையா? மார்செல்சுக்கும், டேலனுக்கும் கொள்ளை நோயை அனுப்பின கடவுளையா?

கி. பா:—சம்சயம் ஆபத்தானது. நம்பிக்கை தான் சிறந்தது. ஆதியந்தமற்ற கடவுளை, உங்களுடைய அற்ப அறிவால் அறிய முடியாது.

ச. வா:—கிறிஸ்துவை நம்பாதவர்கள் நிரந்தர சித்திரவதைக்கிலக்காக நேருமா?

கி. பா:—ஆம்.

ச. வா:—இயேசுவைக் குறித்துக் கேள்வியுற்றிராததால், அவரை நம்பாதிருக்கும் லட்சக்கணக்கான மக்களைச்சித்திரவதை செய்வது நீதியாகுமா?

கி. பா:—சுவிசேஷத்தைப் படித்திராதார் இயேசுவை நம்ப முடியாது. அவர்களை கடவுள் மன்னிப்பார். கடவுள் கருணைக்கடல்.

ச. வா:—சுவிசேஷத்தை நன்கு ஆராய்ந்து, அதிலிருந்து பல சந்தேகங்கள் எழுந்து, அதனால் அதை ஏற்க மறுப்பவனை சித்திரவதை செய்வது நீதியாகுமா?

கி. பா:—சர்வ வல்லமையுள்ளவரும், விஷயங்களனைத்தையும் உணரும் சக்தியுடையவருமான கடவுளின் சட்டத்தைக் குறித்து நீங்கள் விவாதிக்கிறீர்கள். அவரை நம்புவதுடன் திருப்தியடையுங்கள்.

ச. வா:—சுவிசேஷத்தைப் படித்தறியாத சம்சய வாதிகள் கடவுளின் ஆக்கினைக்குத் தப்புவார்களா?

கி. பா:—கடவுள் கருணைக் கடலென்று நான் கூறியுள்ளேன். சுவிசேஷங்களைப் படித்திருந்தும், அதை

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க

# நடைமுறையில் பகுத்தறிவு.

## மனித சமூக முன்னேற்றத்திற்குச் சுயேச்சையான எண்ணமும் செயலும் தேவை.

### பகுத்தறிவு வாதியின் கடமைகள்.

(லட்சுமணபுரி வைஸ் சான்ஸலர் Dr. R. P. பராஞ்சிபை M. A., P. H. D., அவர்கள் கல்கத்தா சர்வகலாசாலையில் நிகழ்த்திய கமலாப்பிரசங்கத்தின் ஒரு பகுதி தோழர் வயஸ் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.)

ஆகாரத்தைச் சமைத்துச் சாப்பிடும் மிருகம் மனிதன் மட்டுமே. இதனால் மனிதனைச் சமைக்கும் மிருகமெனச் சில தத்துவ சாஸ்திரிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேறு சிலர், மனிதனை ஆராய்ந்து பார்க்கும் பிராணியென அழைக்கின்றார்கள். ஏனெனில், தனது பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்து விவாதிக்கும் மிருகம் மனிதன் மட்டுமே. இந்த இருவித வர்ணனைகளையும் ஒன்று சேர்த்து, மனிதன் தனது காரணங்களைச் சமைத்துக் கொள்ளும் மிருகமென ஒரு கலாசாலைப் பரிசோதகர் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில், அவரது மாணவர்கள் எவ்விதமாவது கணக்குகளின் விடைகளை அறிந்து வைத்துக் கொண்டு, புதிதாகக் கண்டு பிடித்து விட்டதாகப்பாசாங்கு செய்தார்களாம் மனிதனுக்கு ஆராய்ந்து பார்க்க முடியுமென்றாலும், ஆராய்ந்து பார்க்குமாறு அவனைப் பயிற்றுவிக்க முடியுமென்றாலும், இம்முயற்சியில் அதிகப் பிரயத்தனம் தேவைப்படுமாதலால், பெரும்பாலான மக்கள் மனமார ஆராய்ந்து பார்ப்பதை விட்டு, பொதுவாகத் தங்களைச் சுற்றிலும் பரவியுள்ள அபிப்பிராயங்களை அப்படியே ஒப்புக் கொண்டு விடுகிறார்கள். தனி மனிதர்களுடைய சாதாரணச் செய்கைகளைக்கவனித்தால் அவை பெரும்பாலும் மற்றவர்களைப் பார்த்து 'காப்பி யடிப்பவையாகவே இருக்கின்றன. மனமார ஆராய்ந்து பார்ப்பதற்கு அங்கு சிறிதும் இடமில்லை. அபிப்பிராயங்களை முடிவு செய்து வெளியிடும் போதும், அவற்றைக் கையாளும் போதும், சீர்தூக்கிப் பார்ப்பது எவ்வளவோ முக்கியமானது. மனித சமூகம் இம்முறையைக் கைக்கொள்ளக் கற்றுக்கொள்ளும் போதுதான் அது துரிதமாக முன்னேற முடியும்.

தனது பகுத்தறிவின்படி மனப்பூர்வமாக வாழ்வது எளிதன்று. பழைய பாதை வழியாகவே போய்க் கொண்டிருந்தால் எண்ணங்களும், வார்த்தைகளும், செயல்களும், துன்பத்திற் கொண்டு விடுவதில்லை. சிறு விஷயங்களிற் கூட, ஒருவன் தனக்குச் சரியென்று பட்டபடி நடக்கும் போதுபிறரால் பயித்தியக்காரப் பட்டஞ் சூட்டப்படுவதுமன்றி, வேறு பல துன்பங்களுக்கும் ஆளாகின்றான். பண்டைக் காலத்தில் மதத்துவேஷம் நிகழ்த்திய கொடுஞ் செயல்களெல்லாம், மத விஷயங்களில் ஏற்கனவே ஒப்புக் கொள்ளப் பட்டிருந்த அபிப்பிராயங்களை மீறித் தங்கள் மனச் சாட்சிப்படி சிலர் நடக்கத் தைரியமாக முன் வந்ததால் ஏற்பட்டவைதான். இந்தக் காலத்திலுங் கூட, மனச் சாட்சிப்படி நடப்பவனுக்குக் கஷ்ட நஷ்டங்கள் இல்லாமற் போகவில்லை. சர்வாதிகாரிகள் எங்கும் தோன்றும் இக்காலத்தில் மனப்பூர்வமான பகுத்தறிவு வாதிக்குப் பெருஞ்சங்கடங்கள் ஏற்படுமென்பதிலேயமில்லை. ஒரு சர்வாதிகாரியுடையவோ, அல்லது மகாத்மாவுடையவோ உத்தரவுகளுக்கு மனச்சாட்சி கீழ்ப்படிய வேண்டுமென்று முன் யோசனையுடன் தீர்க்கமாகச் சொல்லப்படும் இக்கால உணர்ச்சிக்கு இன்று நான் எடுத்துக்கொண்டுள்ள விஷயம் முற்றும் பொருத்



டாக்டர் பராஞ்சிபை.

தமற்றதென்றே சொல்ல வேண்டும். ஆனால் தற்காலத்தில், சுயேச்சையான எண்ணமும், சுயேச்சையான செயலும் வேண்டும் என்பதை எடுத்துக் கூற வேண்டுமென்பதற்காகவே இவ்விஷயம் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

எந்தப் பிரச்சினை மீதும் சீர்தூக்கிப் பார்க்கும் சிந்தனையை அமுல் நடத்துவதே உண்மையான பகுத்தறிவு வாதியின் கடமையாகும். இந்தப்பொது விதிக்கு விலக்கு எதுவுமில்லை. முன்னர் இவ்விஷயத்தைப் பற்றி நிகழ்ந்துள்ள தர்க்க வாதங்களுக்கு அவன் மதிப்புக் கொடுப்பது இயற்கையே. ஆனால்இதிலேற்படும் தீர்ப்பு அவனது சொந்தமாகவேயிருக்கும். மத சம்பந்தமான அல்லது வேறு விதமான பிரமாணம எதுவும் அவனது சுயேச்சையான முடிவைப் பாதிக்கக் கூடாது. மேலும் எந்தத் தனி நபருடையவும் முடிவின் மீதும் எந்த சமூகமும் எந்த விதமான கட்டுப்பாட்டையும் சுமத்தக் கூடாது. விஞ்ஞான ஆராய்ச்சியில் இந்த விதமான சுயேச்சை அபிப்பிராயத்திற்கு இடங்கொடுக்கப் படுகின்றது. முன் காலத்திலிருந்த பெரியார்களென்பதற்காகவோ, அல்லது முன் காலத்திலேற்பட்ட சாஸ்திரங்கள் என்பதற்காகவோ எந்த விஞ்ஞானியும் தனது சொந்த அபிப்பிராயங்களை வெளியிடப் பயப்படுவதில்லை. ஆனால், சமுதாய அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகளில், நடைமுறையிலிருக்கின்ற கருத்துக்களுக்கிசைந்தவாறு அபிப்பிராயம் திருப்பிவிடப் படுகிறது. பொருளாதார பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கும் பொழுது, பகுத்தறிவு விவாதங்களை தேசியக் கொள்கை அமிழ்த்தி விடுகின்றது. சரித்திர ஆராய்ச்சியிலும், தேசபக்தியையொட்டியே முடிவுகள் செய்யப்படுகின்றனவென்பதும், காரணங்கள் பின்னரே கண்டுபிடிக்கப் படுகின்றனவென்பதும் யாவரும் அறிந்ததே. இரு தேசங்களுக்கிடையே நடைபெற்ற யுத்தத்தைப்பற்றி இரு தேசங்களும் முற்றும் நேர்மாறான வரலாறுகளை எழுதுவதைக் காண்கின்றோம். ஒரு தேசத்துக்குச் சாதகமான நிகழ்ச்சிகளை அத்தேசத்தார் வற்புறுத்தியும், பெருமைப்படுத்தியும், எழுதுவதும், பாதகமான நிகழ்ச்சிகளைத்திரித்தோ, அல்லது லேசாகச் சொல்லியோ எழுதுவதும் வழக்கம். முஸ்லீம் சரித்திராசிரியர்கள் சிவாஜியை 'மலை எலி' என்றும், மகாராஷ்டிரர்கள் அவரை பெரிய தேசீய வீரரென்றும் அழைக்கின்றார்கள். நீதி நியாய விஷயங்களிலும், சில விஷயங்களைப்பற்றித் தர்க்கிப்பதே கூடாதென ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது கொள்ளப்பட்டுள்ள ஒழுக்கசம்பந்தமான கருத்துக்களெல்லாம் மிக அடிப்படையானவையென்றும், அவற்றைப் பற்றி ஆராய்வதே உசிதமாகாதென்றும் கருதப்படுகிறது. இத்தகைய நீதிக் கொள்கைகள் பல மதக் கோட்பாடுகளாக மாறிவிட்டன. இவற்றின் உண்மையைப் பற்றி ஆராய்வது பயங்கரமான பாவச் செயலாகும். ஆகவே, மணம், மணரத்து, கர்ப்பத்தடை, மலடாக்குதல் இவைபோன்ற விஷயங்களைப்பற்றி சாங்கோபாங்கமாக விவாதிப்பது என்பதில் போதிய கவனம் செலுத்தப் படுவதில்லை. அரசியல் பிரச்னைகளைப்பற்றிய விவாதத்திலும் பகுத்தறிவு முறை பற்றிய விசாரணையைக் கடைசியாக ஒதுக்கி வைக்கப்படுகிறது. கட்சி விசுவாசம், தேசபக்தி, தலைவர் பக்தி, சுயநலம் முதலிய அம்சங்கள் தான் ஒருவனுடைய தீர்ப்பை உருப்படுத்துகின்றனவே யன்றி, விஷயத்தின் யோக்கிய தாம்சங்களல்ல. 1920ல், சட்டசபைகளில் புகுவதோ, அல்லது தேர்தல்களில் ஓட்டுச் செய்வது கூட தேசத் துரோகமாயிருந்தது. ஆனால் இச் சமயம் தேச பக்தியின் சிறந்த அடையாளமாகப் போகின்றது.

இந்த இருவித அபிப்பிராயங்களும் அதே மகாத்மாவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சட்டசபைகள் என்று உச்சரிப்பதே மதத் துரோகமாயிருந்தது சில வருஷங்களுக்கு முன்; ஆனால், சென்ற வருஷம் ஆலயப்பிரவேச மசோதாவுக்குச் சாதகமாகச் சட்டசபைப் பிரசாரம் செய்வது நியாயமானதாகவே யிருந்தது. மிஸ்மேயோவைப்புகழும் அமெரிக்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# கர்ப்பாட்சியின் அவசியம்

## அது சாத்தியமா?

## அதன் நன்மைகள்.

இந்தியா பிரிட்டிஷார் ஆளுகைக்குள் வருவதற்கு முன்பு அதன் ஜனத்தொகை மிக மெதுவாயே அதிகமாகி வந்ததுவென யூகிக்க வேண்டியிருக்கிறது. இந்தியா பிரிட்டிஷ் ஆட்சிக்குள் வந்தபின் வெகு சொற்ப காலத்திற்குள் அதன் ஜனத்தொகை இருமடங்கு அதிகமாக வளர்ந்திருக்கிறது. 1921 முதல் 1931க்குள் 3 கோடியே 4 லெட்சம் ஜனங்கள் இந்தியாவில் அதிகமாகி விட்டனர். இந்தியாவில் வருஷம் ஒன்றுக்கு 50 லட்சம் ஜனங்கள் அதிகமாகி வருகின்றனர். 1941ல் இந்தியாவின் ஜனத்தொகை சுமார் 46 கோடியாய் விடுமென்பது நிச்சயம்.

இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையில் இரண்டு கேள்விகள் கிளம்புகின்றன. இந்தியர்களின் தற்கால வாழ்க்கையின் நிலைமை திருப்திகரமானதாக இருக்கிறதாவென்பது ஒரு கேள்வி.

கிராம வாசிகளில் 100க்கு சுமார் 60 பேர் வீதம் சத்தற்ற உணவு அருந்தி வருகிறார்கள். பெரும்பான்மையான மக்கள் இன்னும் உணவில் போஷணை சக்தி மிக மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. சென்ற பத்து வருஷ காலத்தில் 100க்கு 22 கிராமங்கள் வீதம் பற்பல சமயங்களில் பஞ்சத்தால் தாக்குண்டிருக்கின்றன. இந்தியாவில் கணவன் மார்களோடு மணவாழ்க்கை ஆரம்பம் செய்யும் பெண்களின் சராசரி வயது 14. முதல் முதலாகத் தாயாகும் பெண்களின் சராசரி வயது-16. பிரசவத்தில் இறந்து போகும் பெண்களின் விகிதம் ஒரு மைலுக்கு 24 என்று தெரிகிறது. இத்தகைய போக்கில் ஜனத்தொகையும் அபிவிருத்தியாகிக் கொண்டே போனால் மக்கள் மகா பயங்கரமான கேவல வாழ்க்கைக்கு இறங்கிவரும்படி நேர்ந்துவிடும்.

இந்தியாவில் மக்களின் வாழ்க்கையும், அவர்களுடைய சுகாதாரத் திட்டங்களும் செழித்தோங்கி வருகின்றவைவா, வென்பது இரண்டாவது கேள்வி.

இந்தியாவில் உணவுப் பொருள்கள் அபிவிருத்தியாவதை விட ஜனபிவிருத்தி வெகு துரிதமாய் நடைபெற்று வருகிறது.

உலக மக்களுக்குத் தேவையாயிருக்கும் அளவுக்கு மேலேயே உலகில் உணவுப் பொருள்கள் உற்பத்தியாகின்றனவென வைத்துக் கொண்டாலும் அதனாலும் இந்தியாவுக்கு விமோசனம் கிடைத்து விடும் என்று எதிர் பார்க்க முடியாது. நவீன போக்குவரத்துக்குரிய சாதனங்களால் உலகின் பிற பாகங்களிலிருந்து உணவுப் பொருள்களை இந்தியாவுக்கு இறக்குமதி செய்யலாம் என்று யாரும் நினைத்தல் கூடும். ஆனால் உணவுப்பொருளை இந்தியாவில் அங்ஙனம் மலிவாக்கினால், இந்தியாவின் ஜனத்தொகை இன்னும் வெகு துரிதமாய் அதிகமாகிப் பிரச்சினையை மகா கஷ்டமானதாக்கிவிடும் என்பதில் எள்ளளவு சந்தேகமுமில்லை.

ஆனால் ஜனப்பெருக்கத் துன்பத்தைப் போக்குவதற்கு வழியில்லையென்று நினைத்தற்கு ஆதாரம் சிறிதுமில்லை. இத்தீங்கைப் போக்க நாம் நம்மாலான முயற்சி செய்து பார்த்து எவ்விதமான தோல்வியையும் நாம் கண்டதில்லை.

நாம் இயற்கையின் போக்குக்குத் தலைகுனிந்து இடந்தருதல் கூடாது. இயற்கை செய்து கொண்டு போகும் கொடிய தீங்குகளின் தன்மையை நாம் உள்ளவாறு அறிந்து கொள்ளப் பின் வாங்குதல் கூடாது. அதை நாம் முழு பலங்கொண்டு எதிர்த்து நன்மை காண முயற்சித்தல் வேண்டும். இயற்கையை அடக்கி ஆண்டால் அது ஒரு உயர்தரச் சேவகனாகவிருக்கும். இயற்கைக்கு நாம் அடிமையாகி விட்டால் அது இரக்கமற்ற கொடுங்கோல் அரசனாய் விடும்.

மகா முக்கியமான இவ்விஷயத்தை குடிகளே கவனிக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் நினைப்பதும் அரசாங்கத்தாரே கவனிக்க வேண்டுமென்று குடிகள் நினைப்பதும் தவறு. நாம் கவனிக்கும் காலம் வரையில் இயற்கை தன் சங்காரத் தொழிலை நிறுத்தி வைக்கப் போவதில்லை. ஆதலால் கருப்ப ஆட்சியே விமோசனம் அளிக்கத்தக்கது என அறிகிறோம். கருப்ப ஆட்சியைப் பிரமச்சரியத்தாலும், தாமத விவாகத்தாலும், தடுப்பு முறைகளாலும் கைக்கொள்ளலாம். இந்தியர் ஒவ்வொருவரும் தத்தமக்கு உசிதமான எந்த முறையையேனும் கருப்ப ஆட்சியின் பொருட்டு அனுஷ்டிக்கலாம். இது விஷயத்தில் மற்ற தேசத்தினர் எங்ஙனம் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைப் பற்றி இந்தியர் கவனித்து வரவேண்டும்.

ஜனப்பெருக்கத்தின் தீங்கின் இயல்பு இந்தியாவில் ஒரு காலத்தில் தெரிந்திருந்ததாக அறிகிறோம்.

ஜனத்தொகைப் பிரச்சினை அரசியல் கட்சிக் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டது. அது ஜாதிமதக் குரோதமற்றது. கர்ப்ப ஆட்சி விஷயம் நோய் தடுக்கும் முறையிலும், விவசாய விஷயத்திலும், தன சாஸ்திரப் போக்கிலும், தொழிலபிவிருத்தியிலும், கல்வித்துறையிலும், வர்த்தக வழியிலும், சமுதாயச் செயல்களிலும் மிக நெருங்கிய சார்பு பெற்றிருக்கிறது. இவ்வுண்மையை மக்கள் யாவரும் பரிஷ்காரமாய் அறிந்து கொள்ளும்படி செய்யவேண்டும்.

### அமெரிக்காவில் சட்டம்.

அமெரிக்காவிலுள்ள கர்ப்பாட்சி இயக்கப் பிரபலஸ்தராகவிருக்கும் தோழர் மார்க்கட் சாங்கர் அம்மாள் என்பவர் கர்ப்பாட்சி சம்பந்தமாக அமெரிக்க ஐக்கிய மாகாண சட்டங்களில் கீழ்க்கண்டவைகளையும் சட்டங்களாகச் சேர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அங்கு ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். அதன் விவரம் "அமெரிக்கன் வீக்லி" என்னும் பத்திரிகையில் வெளியிடப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு பெண் பிள்ளையும் சர்க்கார் அனுமதி பெற்றே ஒவ்வொரு குழந்தையையும் பெற வேண்டுமென்பது மசோதாவின் நோக்கம். அம்மசோதாவுக்கு "அமெரிக்கன் பேபி கோடு" என்று பெயர். மக்களின் கர்ப்பாட்சி சம்பந்தமாகத் தேவையாகும் வசதிகள் அனைத்தையும் சர்க்கார் மக்களுக்கு ஆங்காங்கு செய்து கொடுக்க வேண்டிய கடமையை யேற்றுக்கொள்ள வேண்டுமென்று மசோதா சிபார்சு செய்கிறது. பெற்ற குழந்தைகளை வைத்துக் காப்பாற்றி அவைகளுக்கு ஏற்ற கல்வி முதலியவைகளைத் தகுந்தபடி கொடுத்து பராமரிக்கும் சக்தியற்றவர்களுக்குக் குழந்தை பெறும் உரிமை தரக்கூடாது என்பது மசோதாவின் கருத்து. புத்தி சுவாதீனமற்றவர்களுக்கும், தீராத கொடு நோய் பட்டிருப்பவர்களுக்கும் குழந்தை பெறும் சுதந்திரம் அளிக்கப்படக்கூடாது என்பதும் அந்த மசோதாவின் நோக்கம். தேசத்தில் கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களின் அளவுக்கேற்ப ஜனத்தொகையை சர்க்கார் மட்டுப்படுத்தி வரவேண்டுமென்றும் அது வற்புறுத்துகிறது. தேச மக்களின் வாழ்க்கைத் திட்டம் தாழ்ந்து போகாமலிருக்கும்படி சர்க்கார் விழிப்புடன் இருந்து பார்த்து வரவேண்டுமென்பது அதன் கோரிக்கை.

இந்த உண்மைகளை வற்புறுத்தியே விவசாய ராயல் கமிஷன் ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் ஒரு பகுதியைக் கீழே குறிப்பிட்டிருக்கிறோம்.

விவசாயிகள் தங்கள் சொந்த வாழ்க்கைத் திட்டங்களை உயர்த்திக் கொள்ள முன் வந்தாலொழிய, விவசாயத்தில் எவ்விதமான அபிவிருத்தியும் ஏற்படுவதற்கு வழியில்லை. அவர்கள் தங்களுடைய மனோசக்தியையும், தேக சுகத்தையு மேற்படுத்திக்கொள்ளும் நிலைமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். விஞ்ஞான சாஸ்திரங்களாலும், அநுகூலமான சட்டங்களாலும், உயர்ந்த ஆட்சி முறையாலும் ஏற்படக் கூடிய முழு நன்மைகளையும் விவசாயிகள் அடைந்து கொள்ள லாயக்குள்ள நிலைமைகள் செய்து வைக்கப்பட வேண்டும். குடியானவர்களுடைய சுற்றுப்புற வாழ்க்கையும் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு அநுகூலமானதாயிருக்க வேண்டும். ஆகவே விவசாயத் துறையின் எல்லா அபிவிருத்திக்கும் விவசாயிகளின் அநுகூல நிலைமைகளின் ஆக்கமே பிரதான காரணமாகும். இந்த முடிவு அங்கீகரிக்கப்பட்டால் கிராம வாழ்க்கையின் புனருத்தாரணம் புதிய மேம்பாட்டையுடையதாக விருக்கும். அதனால் தேச மக்களின் க்ஷேமம் பரந்த முறையில் முற்போக்கடைந்து வரும். அதனால் தேசத்தின் வருவாயும் அதிகப்படுவதற்கு இடமுண்டாகி விடும். நாட்டுப்புற வாழ்க்கைப் பொது நிலைமையின் தன்மை உயர்வாக்கப்பட்டாலே மக்கள் வாழ்க்கையின் உயரிய நிலைமைக்கு ஆசையேற்படும். இத்தகைய அபிவிருத்திச் சாதனத்தை யேற்படுத்தி வைக்க வேண்டிய பொறுப்பு சர்க்காரிடமே இருக்கிறது என்பதை நாம் அழுத்தமாய்ச் சொல்லப் பின் வாங்கமாட்டோம். மேலே கூறப்பட்ட நிலைமையை உண்டாக்க வேண்டுமானால் ஒரு தேசத்தில் விளையும் உணவுப் பொருள்களின் அளவுக்குச் சரியானபடி ஜனங்களின் எண்ணிக்கைகளும் அமைந்திருக்க வேண்டிய தவசியமாகும். மக்களின் தொகை அந்த அளவுக்கு அதிகமாகிப் போனால், அவர்களுடைய வாழ்க்கைத்திட்டம் குறைந்து போவது இயல்பேயாகும். ஆதலால் மக்களுடைய வாழ்வு நிலை எந்தத் துறையில் முன்னேற்றமடைய வேண்டுமென்றாலும் அவர்களின் தொகை மிதமிஞ்சிப் போதலுக்கு இடந்தராது இருக்க வேண்டியது அவசியமாகிறது. அப்படிப்பட்ட அனுகூலமான நிலையேற்பட்டு விட்டதானால் மனிதர்களுடைய வாழ்க்கையில் துன்பமற்ற சந்தர்ப்பமே யேற்படாது. உலகத்தில் ஏற்படக் கூடிய புதிய புதிய விஞ்ஞான சாதனங்களும், சட்ட அனுகூலங்களும், அரசியல் நன்மைகளும் இந்திய மக்கள் ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்குமென்பது சந்தேகமில்லை.

(குமரன்)

### அறிக்கை

"ஸயன்ஸ்" பத்திரிகை பிரசுரிக்க அதிகாரிகள் ஸெக்யூரிடி கேட்டபடியால், அதனை வருகிற ஜனவரி மாதம் பிரசுரிக்க முடியாத விஷயத்தை நமது தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அதன் ஆசிரியர் தோழர் ம. சிங்காரவேலுஎழுதுகிறார்.

# ஜஸ்டிஸ் கட்சியின் கொரடாமீது நம்பிக்கை இல்லாத் தீர்மான நிகழ்ச்சிகள்.

## கட்சி அறிக்கை.

சமீபத்தில் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில், ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களான சர். ஆர். கே. ஷண்முகம் அவர்களும், தோழர் ஏ. ராமசாமி முதலியாரும் தோற்றதற்குக்காரணம் ஷை கட்சி அங்கத்தினர் சிலர் செய்த துரோகம்தானென்று எங்கும் சொல்லப்பட்டு வந்தது. இது சம்மந்தமாக, ஜஸ்டிஸ் சட்டசபைக் கட்சி காரியதரிசி (சீப் விப்) செட்டிநாடு குமார ராஜா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்று கொண்டுவரப்பட்டு, அதைக் குறித்து ஆலோசிக்க 11-12-34-ந்தேதி காலை 10 மணிக்கு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பொப்பிலி ராஜா மாளிகையில் ஜஸ்டிஸ் சட்டசபைக் கக்ஷி கூட்டம் கூடியது. இந்தக்கூட்டத்தை நடத்தியேதீரவேண்டுமென்று சிலரும் சிற்சில காரணங்களுக்காக அதை ஒத்திவைக்க வேண்டுமென்று சிலருமாய் அநேக தந்திகளும், கடிதங்களும் சில தினங்களாகவே பறந்தன. எனினும், ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தபடி, இன்று காலை 10 மணிக்கு பொப்பிலி ராஜா தலைமையில் கூட்டம் கூடியது. ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த 52 சட்டசபை அங்கத்தினர்கள் வரை கூட்டத்திற்கு வந்திருந்தனர். செட்டிநாடு குமார ராஜா தோழர் எம். ஏ. முத்தைய செட்டியாரும் கூட்டத்திற்கு வந்திருந்து கடைசி வரை கூட்டத்திலிருந்தார். பின் கண்டவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

### வந்திருந்தவர்கள்.

பொப்பிலி ராஜா, பர்லிகிமிடி ராஜா, வெங்கிடகிரி ராஜா, வெங்கிடகிரி குமார ராஜா, செட்டி நாடுகுமார ராஜா, சர். ஏ. பி. பாத்ரோ, திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார், தோழர்கள் பி. டி. ராஜன். வாசுதேவ பிள்ளை, ஸ்வாமி சகஜானந்தம், டாக்டர். வி. நடேச முதலியார், அப்பாதுரைப்பிள்ளை, ஜகன்னாத ராஜு, ஆர். சீநிவாசன், மோசஸ், பண்டித கானலா ராமமூர்த்தி, நரசா ரெட்டி, ஸ்ரீராமுலு, ஏ. ராமகிருஷ்ண ரெட்டி, பி. வி. ராஜகோபால் பிள்ளை, எம். எம். எம். முருகப்ப செட்டியார், எஸ். ஏ. அண்ணாமலை செட்டியார், ராவ்சாகிப் என். சிவராஜ். ஐ. வி. ஈஸ்வரன் பிள்ளை, தாஜுதீன், பாசுதேவ், எம். பி. ரங்கசாமி ரெட்டி, திவான்பகதூர் எஸ். எல்லப்ப செட்டியார், பானேஜிராவ், சுந்தரராவ் நாயுடு, ராவ்சாகிப் வி. ஐ. முனுசாமி பிள்ளை, ஸ்ரீமதி அலமேலு மங்கைதாயாரம்மாள், பிஞ்சலா சுப்பிரமணியம் செட்டி, ராவ்பகதூர் டி. நரசிம்மஸ்வாமி, துரைசாமி ரெட்டியார், ஜி. ரங்கநாத முதலியார், ஜயராம் நாயுடு, பையாபானி சாகிப், சேஷா ரெட்டி, பய்யப்ப ரெட்டி, தர்மலிங்கம் பிள்ளை, மொயிடு, ஆர். மதனகோபால் நாயுடு, ஷாமனாத், ஐ. சந்தனக் கவுண்டர், யாகையாலி, ராமசந்திர படையாச்சி, வேதாசல முதலியார், மிர்ஜாபூர் ஜமீந்தார், கேசவ ராமமூர்த்தி நாயுடு, தர்மலிங்கம் பிள்ளை.

கூட்டத்தின் நடவடிக்கைகள் அந்தரங்கமாகவே நடத்தப் பட்டன. கூட்டம் முடிந்த பின், நடவடிக்கைகளின் சுருக்கமும், தீர்மானங்களும் மாத்திரம் அதிகாரிகளால் வெளியிட்டிருக்கிறது.

### அதிகாரிகள் அறிக்கை.

ஜஸ்டிஸ் சட்டசபைக் கட்சியின் கூட்டமொன்று 11-12-34ந்தேதி காலை 10 மணிக்கு பிரான்ஸன்பாகில் ஜஸ்டிஸ்கட்சித் தலைவர் கனம் பொப்பிலி ராஜாவின் தலைமையில் நடைபெற்றது. ஜஸ்டிஸ் சட்டசபைக் கட்சி யங்கத்தினர்கள் 52 பேர்கள் வந்திருந்தனர்.

கூட்டுக்கமிட்டி யாதாஸ்தை பரிசீலனை செய்து ஒரு அறிக்கை தயாரிக்க ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டது.

கட்சியின் பிரதம கொறடா (செட்டிநாடு குமாரராஜா) விடம் நம்பிக்கையில்லையென்ற தீர்மானம் பிறகு ஆலோசனைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது. இத்தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமுன் தாம் ஒரு அறிக்கை வெளியிட வேண்டுமென செட்டிநாடு குமாரராஜா கூறினார். இதற்கனுமதியளித்தார்கள்.

பின்தோழர் குமாரராஜா எம். ஏ. முத்தையசெட்டியா பின்வரும்அறிக்கையைக்கூட்டத்தில் சமர்ப்பித்துக் கொண்டார்:—

### குமாரராஜா சமாதானம்.

"தீர்மானம் பிரரேபிக்கப்படுவதற்கு முன்னால் உங்கள் அனுமதியின் பேரில் அதைப்பற்றி சில விஷயங்களைத்தெரிவிக்க விரும்புகிறேன். உங்கள் நம்பிக்கைக்கு நான் பாத்திரனல்லாதவன் ஆகி விட்டபோது, நான் உங்களின் முக்கிய கொறடாவாயிருக்க ஆவலாயில்லையென உங்களுக்கு உறுதி மொழி கூறுகிறேன். அந்த ஸ்தானம் எவ்வளவு முக்கியமானதாயிருந்தாலும் கட்சிக்கு அனுகூலமேற்படுமேயாகில் நான்அதை விட்டு விலகுவது என்கடமையென மதிக்கிறேன். நான் ஒரு முதல்தரமான கொறடாவெனச் சொல்லிக்கொள்ளவில்லை. என்னால் கூடியமட்டும் என் கடமைகளைச் செய்து எல்லோரையும் திருப்திப்படுத்த நான் முயன்றதை நினைக்க எனக்குக்கொஞ்சம் திருப்தி ஏற்படுகிறது. நவம்பர் மாதம் 5ந்தேதி கூட என் பிரபல சிநேகிதர்கள் என்னை மேயராகத் தேர்ந்தெடுத்து என்மீதுள்ள நம்பிக்கையை வெளியிட்டார்கள் என்பதை நினைக்க நான் உண்மையிலேயே பெருமை கொள்கிறேன். சமீபத்தில் நடந்த இந்தியா சட்டசபைத்தேர்தல் வரையில் நீங்களாவது யாராவது, நம்பிக்கையைப் போக்கும்படியான காரியம் நான் செய்ததாகக்கேள்விப் பட்டதே கிடையாது.

### செலவுக்கும் பணம் கொடுத்திருக்கிறேன்.

அதற்கு மாறாக நான் செட்டிநாட்டில் ஸர். ஷண்முகம் செட்டியாரின் தேர்தலுக்காக ஏற்பட்ட செலவையும், சிதம்பரத்தில் தோழர் நடேச முதலியாரின் தேர்தலுக்காக ஏற்பட்ட செலவையும் ஏற்றுக்கொண்டதோடு நவம்பர் மாதம் 3ந்தேதி நான் கட்சித்தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தியா சட்டசபைத் தேர்தலுக்காக அவரிடம் 2500 ரூ. கொடுத்தேன்.

நான்என்னால்கூடியமட்டும் பிரயத்தினப்பட்டும் கூடஇந்தப்பிரரேபணை வரக் காரணமாயிருந்தவர்களையாவது எந்தக்காரணத்திற்காக அவர்கள்என் மீது நம்பிக்கையில்லாத இந்தப்பிரேரணையைக்கொண்டு வந்தார்கள் என்பதையாவது அறிய முடியவில்லை. 'நம்பிக்கையில்லாத்' தீர்மானத்தைப் பற்றிய முதல் செய்தியை 4ந்தேதி தினசரிகள் தான் தெரிவித்தன. கூட்டுக்கமிட்டி அறிக்கையைப்பற்றி ஆலோசிப்பது போன்ற முக்கியமான விஷயங்களுக்காககூட்டம்கூட்டுவதைப்பற்றி பிரதம கொறடா கலக்கப்படவேயில்லை. முழுவிவரங்களைப் பொது ஜனங்கள் அறியும் முன்னரே அவர்களுக்குள் ஒரு தீர்மானம் ஏற்படுத்திவிட வெகு அவசரமாக விஷயங்கள் நடத்தப்பட்டதாகத்தெரிகிறது. 4 வருஷங்களுக்கு முன்னால் இந்த ஸ்தானத்திற்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அதை தைரியமில்லாமல் நான் என் கடமைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

### உண்மையான தொண்டு செய்திருக்கிறேன்.

உங்களுக்கும் எனக்கும்பிரியமான கொள்கைகளுக்காகநான்விடாது கஷ்டப்பட்டு உண்மையாக உழைத்திருக்கிறேன். (இதனால் ஏற்படும் ஏதாவது பிரத்யேகமான உரிமைகளுக்காகவல்லது) இதனால் கட்சிக்கும், தேசத்திற்கும் தொண்டு புரிய வழி ஏற்படுமென்றே நான் இந்த ஸ்தானத்தை மதித்தேன். கட்சித்தலைவராவது, கட்சியில் பொறுப்புள்ள கூட்டத்தாராவது நான் இந்த ஸ்தானத்தை விட்டு விலகி இருப்பதால் கட்சிக்கு அதிக நலமேற்படும் என்ற அபிப்பிராயத்தை யுடையவர்களாய் இருக்கிறார்களென்ற எண்ணம் எனக்குத் தோன்றி யிருந்தால் கூடநான் உடனே சந்தோஷமாகஇந்த ஸ்தானத்தை விட்டு விலகியிருக்கவேண்டும். நீங்கள் இந்தியா சட்டசபைத் தேர்தலுக்கப் புறம் விஷயங்களின் போக்கை ஆவலாகக்கவனித்திருப்பீர்களென்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

### ஜஸ்டிஸ் குற்றச்சாட்டு.

தேர்தல் முடிவு தெரிந்த மறுநாள் முதல் பத்திரிகைகளில் முக்கியமாக 'ஜஸ்டிஸ்' பத்திரிகையில் கட்சியின் சார்பாக நிறுத்தப்பட்ட அபேட்சகர்கள் தோல்வியுற்ற காரணத்தைக் குறித்து அறிக்கைகள் வெளி வந்திருக்கின்றன. இந்தத் தோல்விக்கு காரணங்களாக கட்சியில் துரோகமிருக்கிறதென்றும், கட்சிப் பிரமுகர்கள் கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டார்களென்றும் இரு விஷயங்கள் முதலில் கூறப்பட்டன. அவர்கள் பேரிலும் சென்னையிலுள்ள ஐரோப்பிய வியாபாரிகள் பேரிலும் குற்றம் சுமத்தப்பட்டது. பின் கூறப்பட்டவர்கள் குற்றத்தினின்றும் விலக்கப்பட்டார்கள். "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் வெளியாகும் அறிக்கைகள் தவறில்லாமல் என் துரோகத்தினால் ஸர் ஷண்முகம் செட்டியார் தோல்வியுற்றதாகக் குறித்து வந்தன. கட்சிப் பத்திரிகையினால் அங்கீகரிக்கப்பட்ட அந்தக் குற்றச்சாட்டு விஷமத்தனமானதென்றும், காரணமற்றதென்றும், பொய்யென்றும் நான் கூறுகிறேன். எல்லாருக்கும் தெரிந்த காரணத்தை முன்னிட்டு நான் அப் பத்திரிகையுடனோ அந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்தவர்களுடனோ சச்சரவிட முடியாது. கட்சியினிடம் எனக்குள்ள அபிமானத்தைப் பற்றிச் சந்தேகம் ஏற்படுத்தும் எந்த விஷயத்தையும் செய்யாதிருக்க நான் ஆவலுள்ளவனாயிருந்தேன். ஸர். ஷண்முகம் செட்டியார் இந்தக் குற்றச்சாட்டை மறுக்கக்கூடிய ஸ்திதியிலிருந்தும் அப்படிச் செய்யவில்லை. விஷயத்தைப் பற்றிய உண்மையைத் தெரிந்தவர்கள் கூட பொது மக்களுக்கு உண்மையைத் தெரிவிக்க முன்வரவில்லை. பிறகு பத்திரிகைகளில் இந்த "நம்பிக்கையில்லாத்" தீர்மா

னம் இன்று பிரரேபிக்கப்படும்என்று சமாச்சாரம் வெளி வந்தது. அவ் விஷயத்திற்குத் தேவையில்லாதவிளம்பரம் அதற்குக் கொடுக்கப்பட்டது. நண்பர்களும், விரோதிகளும் அவ் விஷயத்தைப்பற்றிவாதிக்க ஆரம்பித்தார்கள், ஜஸ்டிஸ் தவிர ஆங்கில சுய பாஷை பத்திரிகைகளும் இவ் விஷயத்தைப் பற்றி எழுதி மறைமுகமாயும், நேர்முகமாயும் எதிர்க்க ஆரம்பித்தன. இவ்வளவு பிரசாரம் செய்யப்பட்டது. இன்னும் செய்யப்படுகிறது. அது என்னை எவ்விதம் பாதித்திருக்குமென்பதை நீங்கள் உணருவது சிரமமல்ல.

இந்த நிலையில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பிரரேபிக்கக் குறிப்பிட்ட காரணங்களில்லை என நீங்கள் கூறுவதில் பிரயோஜனமில்லை. இந்தக் குற்றச்சாட்டைப் பொய்ப்பிப்பது சுலபமானது. தீர்மானவழியில் அதைப் பொய்ப்பிக்க விஷயங்கள் இருக்கின்றன. என் தகப்பனர் பொப்பிலி ராஜாவைப் பார்த்தபோது அவரிடமிருந்து முதல் தடவை மேலே சொல்லப்பட்ட துரோகம் சர் ஷண்முகம் செட்டியாரின் தேர்தலைப்பற்றியதென்றும், அதைப் பற்றிய சமாச்சாரங்களுடன் அவர் பெயர் கலக்கப்படுகிறதென்றும் கூறினர். உடனே என் கௌரவத்தை நிலை நாட்ட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

## சர் ஷண்முகம் கடிதப்போக்கு வரவு.

சர் ஷண்முகம் செட்டியாரை இவ் விஷயமாகக் கேட்டபோது, அதைப் பற்றித் தமக்கு ஒரு பொறுப்பும் கிடையாதென்று கூறினர். தேர்தல் சமீபத்தில் அவர் எழுதிய கடிதங்களில் தெரிவித்தபடியே தான் அவர் அபிப்பிராயமிருந்தது. அந்தக் கடிதங்களிலிருந்து பின் கண்ட பகுதிகள் உங்களுக்குத் திருப்தியை அளிக்கப் போதுமானது.

29-10-34 சென்னை சர் ஷண்முகம் செட்டியாரிடமிருந்து ராஜா அண்ணாமலைச் செட்டியாருக்கு "என் தேர்தலுக்காக நீங்கள் செய்த எல்லாவற்றிற்கும், இந்தத் தேர்தல் விஷயமாக அங்கே இருக்கும் என் சினேகிதர்களுக்கு தாங்கள் காட்டிய அன்பான உபசரணைக்கும் நான் விரைந்து வந்தனம கூறுகிறேன்: பெருமிதமான வோட்டுகளால் நான் தேர்ந்தெடுக்கப்படுவேனென நினைக்கிறேன்.

1-11-34 சென்னை சர். ஷண்முகம் செட்டியாரிடமிருந்து தோழர் வி. வி. வி. டி. வெங்கடாசலம் செட்டியாருக்கு "என் தேர்தல் விஷயமாக நீங்கள் எடுத்துக்கொண்ட தொந்தரவுகளுக்கெல்லாம் அனேக வந்தனம். நான் உங்கள் கடிதத்தையும் கொடு முடிவோட்டரின் வோட்டுச சீட்டையும் வரப்பெற்றேன். கொழும்பிலிருந்தும் கிராமாந்தரங்களிலிருந்தும் வரவேண்டிய வோட்டுகளைச் சேகரிக்க தயவு செய்து ஏற்பாடு செய்யவும். நீங்கள் கஷ்டத்தைக் கவனிக்காமல் உங்களாலானதைச் செய்வீர்களென நான் நினைக்கிறேன்"

2-11-34 தோழர் வி. வி. வி. டி. செட்டியாரின் பதில்:—

"கொழும்பில் இரண்டொருவர் தவிர மீதிப்பேரெல்லாம் உங்களுக்கே வோட்டுக்கொடுத்ததாக எனக்குச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. கொழும்பில் உங்களுக்கு அதிக வோட்டுகள்—

3-11-34 வி. வி. வி. டி. செட்டியாருக்கு சர். ஷண்முகத்தின் பதில்:—உங்கள் 2-ந் தேதி கடிதத்திற்கு அனேக வந்தனம். பொன்னம்பலம்கூட என்னை இன்று காலை பார்த்து நிலைமையை விவரித்தார். சந்தேகமில்லாமல் செட்டி நாட்டில் நடந்த எதிர் பார்க்காத விஷயத்தால் நம் கணக்குகள் கவிழ்ந்து விட்டன. இவைகளெல்லாமிருந்த போதிலும் எனக்கு 100 வோட்டுகள் அதிகமாகக்கிடைக்கும் என்று நம்புகிறேன். கிராமாந்தரங்களிலிருக்கும் சில வோட்டுகளும் சேர்க்கப்படுமென நான் நம்புகிறேன்.

உங்களுடைய சளையா முயற்சியினால் தான் செட்டி நாட்டில் இவ்வளவாவது நடந்ததென என் சிநேகிதர்கள் சொல்வதிலிருந்து தெரிந்துகொண்டேன். நீங்கள் உண்மையாகவும், கஷ்டப்பட்டும் உழைத்திருக்கிறீர்கள். முழு மனதுடன் நான் உங்களுக்கு மறுபடியும் வந்தனமளிக்கிறேன்."

விஷயத்தின் அவசியமும் ஸர். ஷண்முகத்தின் மறுப்பும் தெரிந்த பிறகு செய்யப்பட்ட தவறை எவ்வாறு சரிப்படுத்துவது என சர். ஷண்முகத்துடன் கலக்கப்பட்டது. சர். ஷண்முகம் முதல் மந்திரியைப் பார்ப்பதாகச் சொன்னர். அவர்கள் 2-ந் தேதி சந்தித்து விஷயத்தைப் பற்றி விவாதித்ததாகத் தெரிகிறது. விஷயத்தின் முடிவைக் கூறாமல் ஸர் ஷண்முகம் பட்டணத்தை விட்டுப் போய்விட்டார். இதனல் என் பிதா 4-ந் தேதி இவ்விஷயத்தைப்பற்றி ஸர். ஷண்முகம் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கையும் வெளியிடாவிட்டால், அவர் மறுப்பை ஒரு கடிதத்திலாவது எழுதி ஊர்ஜிதப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார். அவர் 6-ந் தேதியின் பதிலிலிருந்து பின் வரும் பகுதிகளைக் கொடுக்கிறேன்.

"நீங்கள் 4-ந் தேதி எழுதின கடிதம் எனக்குக் கிடைத்தது. நீங்கள் என்னைப்பார்த்த பிறகு நான் பொப்பிலி ராஜாவைக் கண்டு பேசினேன். உங்கள் மீது இந்தியா சட்ட சபைத் தேர்தல் விஷயமாக சிலர் பொய்ப் பிரசாரம் செய்வதாக நீங்கள் புகார் செய்திருந்தீர்கள்.

என்னிடம் நேரில் உங்களுக்கு விரோதமான இந்தப் பிரசாரத்தில் என் பெயர் கலக்கப்பட்டிருக்கிறதாகக்கூறினீர். என்னோடு சம்பாஷித்தபோது நான் அத்தகைய பிரசாரத்திற்கு பொறுப்பேற்க வில்லை என்று கூறினேன். என்னுடைய மறுப்பை நீங்கள் ஊர்ஜிதப்படுத்தும் படி விரும்புகிறீர், நான் அப்படி தயாராகச் செய்கிறேன். நான் சந்தேகமற உங்களுக்குத் தெரிவிக்கிறேன். இந்தியா சட்டசபைத் தேர்தல் விஷயமாக என்னைப் பற்றியாவது வேறெந்த அபேக்ஷகரைப்பற்றியாவது உங்களுக்கு விரோதமாக செய்யப்படும் பிரசாரங்களின் பொறுப்பை நான் மறுக்கிறேன். என் மறுப்பு சந்தேகத்திற்கிடம் கொடுக்காது என நான் நம்புகிறேன். இதற்கிடையில் அதாவது 5-ந் தேதி எனக்கு இந்த கூட்டத்தைப் பற்றி ரிஜிஸ்டர் கடிதம் மூலம் செய்தி கிடைத்தது. நான் அதற்கு முன்னாள் சாயந்திரம் அந்தக் கூட்டத்தைப்பற்றி பத்திரிகைகளில் படித்தேன். அன்றே நான் பொப்பிலி ராஜாசாஹேப்பிற்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பத்திரிகைகளில் துரோகத்தைப்பற்றியும், காட்டிக்கொடுத்ததைப்பற்றியும் வந்தபிரசாரகர்களின் தொடர்ச்சியானதென்றும், எனக்கு விரோதமாக ஏற்பட்டிருக்கும் குற்றச் சாட்டைப்பற்றிய விஷயங்களைத் தெரிவிக்கும்படியும் ஒரு கடிதமும் எழுதினேன். எனக்கு பதிலாக 10-ந்தேதி கக்ஷியின் தலைவர் பின்வருமாறு எழுதினர்.

"சமீபத்தில் நடந்த சட்ட சபைத் தேர்தல் விஷயமாக நடந்த பல விஷயங்களைப்பற்றி வியவகரிப்பது எனக்கு அவசியமென்றுவது விரும்பத்தக்கதென்றுவது தோன்றவில்லை. உங்கள் பிதாவும் நானும் சந்தித்தபோது நடந்தவிஷயத்தைப்பற்றி நீங்கள் கூறும் விவரம் சரியல்ல என்று நான் கூறவேண்டியவனாய் இருக்கிறேன். செட்டிநாட்டில் தேர்தல் விஷயமாக எனக்கேற்பட்ட ஏமாற்றத்தை மாத்திரம் நான் தெரிவித்தேன். அந்த ஏமாற்றத்தை ஸர் ஷண்முகமும் அடைந்திருப்பாரென நான் நம்புகிறேன்.

## ரத்தினசபாபதி கவுண்டர் கடிதம்.

வி. வி. வி. டி. செட்டியாருக்கு தோழர். ரத்னசபாபதி கௌண்டர் அக்டோபர் மாதம் 28-ந் தேதி எழுதிய கடிதத்தில் பின் வருமாறு எழுதுகிறார்:—

"கிராமாந்திரங்களில் நீங்கள் முயற்சி" செய்யாதது பற்றி நான் வருந்துகிறேன். கிராமங்களில் பிரயத்தனப்பட்டிருந்தால் அதிகமான வோட்டுகள் கிடைத்திருக்குமென நினைக்கிறேன். தயவு செய்து ஏதாவது முயற்சி செய்யவும். ஏனெனில் போட்டி பலமாயிருக்கிறது. முடிவு மிகவும் நெருக்கடியாக இருக்குமென நான் நினைக்கிறேன்."

இவைகளெல்லாம் தவிர்த்து திவான்பகதூர் எ. எம். முருகப்ப செட்டியார் வெளியிட்ட முதல்தரமான செய்தியால் ஸர் ஷண்முகத்திற்கு செட்டிநாட்டில் பெருமிதமான வோட்டுகள் கிடைத்ததாகத் தெரிகிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் 28-ந்தேதி இதழில் பின்வரும் செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

"நிலைமை வேறு விதமாயிருக்கிறதென்றும், சர் ஷண்முகத்திற்கு ஏற்கனவே பெருமிதமான வோட்டுகள் கிடைத்து விட்டதென்றும் எனக்கு முதல்தரமான செய்தி கிடைத்திருக்கிறது."

## மேயர் தேர்தல் விஷயம்

ஆராய்ச்சி செய்து பார்த்தால் மேயர் தேர்தலைப்பற்றிய கதை ஆதாரமற்றதெனத் தெரியும். ஏனெனில், நவம்பர் 3-ந்தேதி ஸர் ஷண்முகம் தன் வெற்றியைப்பற்றி உறுதியடைந்த பிறகு கோயம்புத்தூர் போய்விட்டார். டாக்டர் நடேச முதலியாரும் அக்டோபர் 11-ந்தேதியே தாம் முனிசிபல் ஜஸ்டிஸ் பார்ட்டியின் தீர்மானத்தால் பந்தப்படுவதாகக் கூறினர். நவம்பர் 5-ந்தேதி மேயர் தேர்தலுக்குப்பிறகு அவர் செய்த பாராட்டுப் பிரசங்கம் அவர் எண்ணத்தை நன்கு காட்டுகிறது. அக்டோபர் 30-ந் தேதி வரை தோழர் லால்தாஸ் நிற்பதாகக் கூறப்படவேயில்லை. ஆகையால், மேயர் தேர்தல் விஷயம் ஆதாரமற்றது எனத் தெரிய வருகிறது. 7-ந் தேதி தலையங்கத்தில் ஜஸ்டிஸ் பின்வருமாறு கூறுகிறது:—

"அவர் இரண்டாம் தடவையாக அந்தப் பெருமையான ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டதனல் அவருக்குள்ள செல்வாக்கும் நகர சபை கவுன்சிலர்களிடையே அவர் மீதுள்ள நம்பிக்கையும் வெளியாகிறது. அவருக்கு வந்த வோட்டுகள் அவர் முன்பு மேயராயிருந்த போது நகர சபையில் செய்த ஊழியத்திற்காக வந்தவை. நகர பரிபாலனத்தில் அநுபவம் வாய்ந்த ஒருவர் மீது மறுபடியும் ஏற்பட்ட நம்பிக்கையை அது குறிக்கிறது."

ஆனல், நவம்பர் 12ந்தேதி என் செல்வாக்கு அடியோடு மறைந்து போய்விட்டது. 12-ந் தேதி மாலை 4-மணிக்கு ஆசிரியருக்கு நான்தான் தேர்தல் தோல்விக்குக் காரணமென்ற எண்ணம் உதயமாயிருக்கும். துரோகம், காட்டிக் கொடுத்தல் 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' இவைகளால் நான் நியாயமற்ற முறையிலும், வருந்தத்தக்க வழியிலும் கஷ்டப்படுத்தப்பட்டேன்.

## வேண்டாம் என்றல் போய் விடுகிறேன்

உங்கள் நம்பகத்தை நான் இழந்து விட்டிருந்தால் காரணம் கூறாமல் என்னை ஸ்தானத்தை விட்டு நீங்கள் விலக்க சொல்லியிருந்தால் எனக்கு விஷயம் புரிந்திருக்கும். உண்மையில் நீங்கள் மேற் சொல்லப்பட்ட குற்றங்களைக் கொ

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்கக

# ஆந்திரர்--தமிழர் என்று பிரிக்கப்பார்ப்பது.

ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் காரணமாய் வெளியேறி விட்ட தோழர் குமார ராஜா அவர்களுக்காக குமாரராஜா அவர்களை ஆதரிக்க ஆசைப்பட்டவர்களோ அல்லது அவரிடம் கூலி பெற்றவர்களோ ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்க இதுசமயம் தங்களுக்கு வேறு எவ்வித கதியும் இல்லாமல் நிற்கதியாயிருப்பதை முன்னிட்டு மிக இழிவான மார்க்கத்தைக் கைக்கொள்ளத் துணிந்து விட்டார்கள். "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்கின்ற பழமொழிப்படி ஏதாவது ஒரு விஷயத்தில் பசி ஏற்பட்டு விட்டால் மானம், குலம், கல்வி, அறிவு ஆகியவைகளை அவர்களில் பலர் வந்த விலைக்கு விற்றுவிட்டு மிக இழிவான காரியங்களில் சிலர் இறங்கி விட்டதானது மிகவும் வெறுக்கத்தக்கதும், பரிதாபப்படத் தக்கதுமான விஷயமாக ஆகிவிட்டது.

தோழர் குமார ராஜா அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு ஆதாரமான பிரஸ்தாப விஷயம் தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களுடைய இந்திய சட்டசபைத் தேர்தலில் செட்டி நாடு ராஜா சர். அண்ணாமலையார் அவர்களும், அவர்களது குமாரரான முத்தையா அவர்களும் நம்பிக்கைக் குறைவாய் நடந்துகொண்டார்கள் என்பது காரணமாகும். இவ்விஷயம் ஒரு சாதாரணமான விஷயமானாலும் பார்ப்பனர்களைத் தவிர அவர்களது கூலிகளைத் தவிர வேறு எந்தத்தமிழ் மக்களும் ஆம் என்றுசொல்லத்துணியமாட்டார்

தோழர் ஷண்முகம் அவர்கள் வியாபாரிகளுடைய தொகுதியில் நிற்பதற்கு காரணம் செட்டிநாடு ராஜா சர், அவர்களுடைய வாக்குறுதியே தவிர வேறொன்றும் அவ்வளவு பிரதானமாய் இருக்கவில்லை. அந்த வாக்குறுதியானது செட்டிநாடு ராஜா—குமாரராஜா அவர்களால் தோழர் ஷண்முகத்துக்கு மாத்திரமல்லாமல் கட்சித்தலைவரான பொப்பிலி ராஜா அவர்களுக்கும், மற்றும் கட்சிப்பிரமுகர்கள பலருக்கும் நிபந்தனை இல்லாமல் கொடுத்ததொரு வாக்குறுதியாகும். அது மாத்திரமல்லாமல் அவ்வாக்குறுதியானதுதோழர் ஷண்முகம் அவர்களை உறுதியாக நம்பிக்கை கொள்ளச் செய்ததுடன் செட்டியார் சமூகத்தைப் பொருத்தவரை ஓட்டுக்கு வேறு எவ்வித பிரயத்தனமோ முயற்சியோ எடுத்துக் கொள்வதற்கு இல்லாமலும், சந்தேகமோ கவலையோ படுவதற்கு இல்லாமலும் செய்து விட்டது என்பதில் சிறிதும் விவகாரத்திற்கு இடமில்லை.

ஆனால் தோழர் சர் ஷண்முகம் அவர்கள் தேர்தல் தோற்றுப் போய்விட்டது என்பதும் செட்டிநாட்டைப் பொருத்தவரை பகுதிக்கும் குறைவான ஓட்டுகளே சர். ஷண்முகத்துக்குக் கிடைத்திருக்கிறது என்பதும்செட்டிநாட்டு ராஜாவும்,அவரது குமாரரவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இது ஒருபுறமிருக்க தேர்தலின் முக்கிய சமயத்தில் குமாரராஜா அவர்கள் சென்னையிலேயே இருந்து விட்டதும் ராஜா சர் அவர்கள் தேவகோட்டையிலேயேயிருந்து விட்டதும் அவர்களே ஒப்புக்கொள்ளக்கூடிய காரியங்களாகும்.

இந்நிலையில் செட்டிநாடு ராஜா அவர்கள் தேர்தலுக்காக அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு அநுகூலமாய் ருஜுவிடும் விஷயம் இரண்டு அதாவது-

சர். ஷண்முகம் தேர்தலுக்கு செட்டி நாட்டைப் பொருத்தவரை ஏற்பட்ட செலவை தான் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் தனது மருமகனுர் அவர்களை ஓட்டுச் சேகரிக்க அனுப்பினதாகவும் சொல்லப்படும் விஷயங்களே யாகும்.

மூன்றாவதோ தோழர் சர் ஷண்முகம் அவர்கள் செட்டி நாடு ராஜா சர் அவர்களுக்கும், அவரது மருமகனுருக்கும் எழுதிய நன்றியறிதல் கடிதங்களாகும்.

இவற்றைத் தவிர வேறு வழியில் தங்களது வாக்குறுதியை நிறைவேற்றியிருப்பதற்கு எவ்வித சாதகமான சமாதானத்தையும் சொல்லவேயில்லை. சொன்னதாக தெரியவும் இல்லை. ஆதலால் சர் ஷண்முகம் அவர்களும் கட்சித் தலைவர்களும் மற்ற பிரமுகர்களும் கொண்டுள்ள "வாக்குறுதிப் படி நடந்து கொள்ளாததால் மேலால் நம்புவதற்கு முடியாமல் இருக்கின்றது" என்ற எண்ணம் ஏற்பட்டிருப்பதை மாற்றிக்கொள்ள முடியவில்லை.

இதற்காக ஏதாவது ஒரு வழியில் பொது ஜனங்களை உத்தேசித்தாவது சமாதானம் சொல்ல முயற்சிக்காமல் ஆந்திரர் தமிழர் என்கின்ற அடிப்படையின் மேல் கட்சி கட்ட ஆரம்பித்தால் அது யோக்கியமான காரியமாகுமா? என்பதையும், அது வெற்றி பெருமா என்பதையும் குமார ராஜா அவர்களும் ராஜா சர் அவர்களும் ஆழ்ந்த யோசனை செய்து அதை கைவிட்டு வேறு முயற்சியில் ஈடுபட வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

ராஜா சர் அவர்கள் கட்சிக்காக பணம் கொடுத்திருப்பதை அப்படியே ஒப்புக்கொள்ளுவோம் என்றாலும் தோழர் ராமசாமி முதலியார் அவர்கள் தேர்தலில் பொப்பிலி ராஜாவுக்கு தன் கையில் இருந்து 10000 ரூபாயுக்கு மேற்பட்ட செலவு ஏற்பட்டிருக்க குமார ராஜா அவர்கள் 2500 ரூபாய் தான் கொடுத்திருக்கிறார்கள்.

இது அவரது அறிக்கையிலேயே விளங்குகின்றது. இந்த 2500 ரூ ராஜா சர் அவர்களும் குமார ராஜா அவர்களும் இந்தக் கட்சிக்காக இந்த பெரிய முக்கிய பிரச்சினைக்கு உதவியது மாபெரும் காரியம் என்றே வைத்துக் கொண்டாலும் இந்த 2500 விட எத்தனையோ பங்கு அதிகமான தொகையை தோழர் ராமசாமி முதலியாரின் எதிர் அபேட்சகர் விஷயத்திலும் மனமுவந்து ராஜாசர் உதவி இருப்பதாக சொல்லப்படுவதும் அதனால் பொப்பிலி ராஜா அவர்கள் கொடுத்த 10000 ரூபாயும் வேறு சிலர் கொடுத்தரூபாயும் அனேகர் உழைப்பும் வீணாய் போய் விட்டது என்று பகிரங்கமாக சிறு குழந்தைகள் முதல் சென்னையில் சொல்லிக் கொள்ளப்பட்டு வரும் விஷயத்திற்கு என்ன சமாதானம் என்று தெரிய மக்கள் ஆசைப்படமாட்டார்களா என்று கேட்கின்றோம். மொத்தத்தில் ராஜா சர் அண்ணாமலையார் குடும்பம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்காகவோ அல்லது நன்மைக்காகவோ என்று இதுவரை எவ்வளவு ரூபாய் உதவி இருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லுவதை அப்படியே ஒப்புக் கொண்டாலும் அதை விட எத்தனை 10 மடங்கு அதிகமாய் கட்சிக்குவிரோதமானவர்கள் வஞ்சகமானவர்கள் என்னப்பட்ட எதிரிகளானபார்ப்பனர்களுக்கும் அவர்களதுசமூகத்துக்கும் அவர்களது இயக்கங்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள் கொடுத்து வந்து இருக்கிறார்கள் கொடுத்தும் வருகிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

பார்ப்பனர்கள்— பார்ப்பனர் அல்லாதார்கள் என்கின்ற பிரிவுகளையேமிகஇழிவானது-வெறுக்கத்தக்கது என்று சொல்லி வந்த பார்ப்பனர்கள் இன்று ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்காக வெட்டிபுதைப்பதற்கு ஆகதைரியமாய் ஆந்திரர்கள்-தமிழர்கள் என்கின்ற பிரிவினையை ஏற்படுத்திவிட்டு அந்த சாக்கில் பார்ப்பனரல்லாதார்உணர்ச்சியும், முயற்சியும் அழிக்கப்பார்க்கின்றார்கள் என்றால் அது அச்சமூகத்துக்கு எவ்வளவு இழிவானதும் துணிச்சலானதுமான காரியம் என்று யோசிக்கும்படி வேண்டுகின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டபிறகு தமிழர்களைவிட ஆந்திரர்கள் ஒன்றும் அதிகமாக சாதித்துக்கொண்டதாகச் சொல்லிவிட முடியாது.

உதாரணமாக ஆந்திரர் என்கின்ற முறையில் பனகால் ராஜாவுக்கு பரம்பரை ராஜா பட்டம் கிடைத்திருந்தால் தமிழர்என்கிற முறையில் செட்டிநாட்டு ராஜாவுக்கு பரம்பரை ராஜா பட்டம் கிடைத்திருக்கிறது. ஒரு ஆந்திர பனகால் முதல் மந்திரிஆனால் ஒரு தமிழர் டாக்டர் சுப்பராயன் முதல் மந்திரி ஆனார்.

மந்திரிகளில் ஆந்திராவைச்சேர்ந்த 1. ஒரு பனகால், 2. ஒரு சர். பாத்ரோ, 3. ஒரு சர். கே. வி. ரெட்டி, 4. ஒரு முனிசாமி நாயுடு, 5. ஒரு பொப்பிலி ஆகிய ஐந்து பேர் மந்திரி ஆகியிருந்தால் தமிழர்களில் 1. ஒரு சுப்பராயலு ரெட்டியார், 2. ஒரு சர். சிவஞானம் பிள்ளை, 3. ஒரு டாக்டர் சுப்பராயன், 4. ஒரு முத்தைய முதலியார், 5. ஒரு சேதுரத்தினம் ஐயர், 6. ஒரு பி. டி. ராஜன 7. ஒரு குமாரசாமி ரெட்டியார் ஆகிய ஏழு பேர்கள் மந்திரிகளாகி இருக்கிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட பிறகு நிர்வாக சபை கவுன்சில் மெம்பர்களில்கூட ஆந்திரர் என்கின்ற

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.

# பகுத்தறிவு.

ஈரோடு, 1934-௵ டிசம்பர்-மீ 16-உ

## பொப்பிலியும்—செட்டிநாடும்.

செட்டிநாட்டு கோடீஸ்வரரும், பரம்பரை ராஜா பட்டம்பெற்றவரும், தர்மப் பிரபுவுமான ராஜா சர். அண்ணாமலை செட்டியாரின் குமாரர் சென்னை கார்ப்பரேஷன் மேயர் குமார ராஜா என்றழைக்கப்படும் முத்தையா செட்டியார் அவர்கள் மீது ஜஸ்டிஸ் கட்சியார் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றத் துணிந்து அவரிடம் அதாவது முத்தையா செட்டியார் அவர்களிடம் சென்னை சட்டசபைக் கொரடா பதவியையும், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாக சபையின் தலைவர் பதவியையும் ராஜிநாமா பெற்றுவிட்டார்கள்.

இந்தக் காரியமானது இந்தியாவின் சரித்திரத்திலேயே—ஏன் உலக சரித்திரத்திலேயே புதுமையானதும், இதற்கு முன் எவரும் செய்யத் துணியாததும், பார்த்திராததும், கேட்டிராததுமான காரியமென்றே சொல்ல வேண்டும்

செட்டிநாட்டுப் பிரபுவுக்கு அதிகாரம், பதவி, பட்டம், பணம், செல்வாக்கு ஆகியவை எல்லாம் நிறைந்து இருந்தும் கட்சி முறை, கொள்கை முறை, சிநேக முறை என்பவைகள் அல்லாமல் தனிப்பட்ட முறையிலும், செல்வ முறையிலும், பின்பற்றுவோர் முறையிலும் ஏராளமான பலமும், சாய்காலும் இருந்தும் ஒன்றும் பயன்படாமல் கோழிக்குஞ்சை ராஜாளி தூக்கிக்கொண்டு போவதுபோல் ஒரு நொடிக்குள் வேலை ஒப்பேறி விட்டது. அதாவது இரண்டு முக்கியமான பதவியும் காலி செய்யபபடவேண்டியதாய் விட்டது.

இனிமேல் ராஜா சர். அவர்களும், குமாரராஜா அவர்களும் அவர்களது ஆட்களும், அவர்களது பத்திரிகைகளும் பொப்பிலிராஜாவைத் தூக்கிவிடுவதானாலும் சரி இன்னமும் என்ன செய்து கொள்ளுவதானாலும் சரி "நினைத்தார் காரியத்தை முடித்தார்" என்பது போல் ஒரு காரியத்தை அதாவது செட்டிநாட்டு பிரபுக்கள் விஷயத்தை கொசுவை நசுக்குவது போன்ற சுலப முயற்சியில் பொப்பிலி ராஜா முடிவு செய்து விட்டார்.

இதற்காக அவர் ஒரு பிரயாசையும் படவில்லை என்பதோடு ஒருவர் தயவையும் எதிர்பாராமல் செட்டிநாட்டை ஆதரிக்கும் பத்திரிக்கைகளையும், ஆட்களையும் லட்சியம் செய்யாமல் "ஒன்று கட்சியை விட்டுசெட்டிநாடு வெளியேற்றப்பட வேண்டும், இல்லாவிட்டால் பொப்பிலி வெளியேறிவிடவேண்டும்" என்கின்ற முடிவின் வலிமையே ஆயுதமாகக்கொண்டு செட்டிநாட்டுக்கு மங்களம் பாடிவிட்டார்.

எவ்வளவு தந்திகள், எவ்வளவு கடிதங்கள், எவ்வளவு மிரட்டல்கள், எவ்வளவு சிபார்சுகள் ஒன்றையும் கவனிக்காமல் வைரக்குன்று போல் நின்று நினைத்த காரியத்தை முடித்தார்.

இவற்றிற்கெல்லாம் காரணமாய் இருந்தது பொப்பிலி அவர்கள் தன்னை அண்டிநிற்கும் கட்சியின் தலைமை (சர்வாதிகாரி) பதவியை சுண்டுவிரல் நுனியில் வைத்துக்கொண்டு எந்த நிமிஷத்தில் வேண்டுமானாலும் உதரி எறிவதற்கு தைரியத்துடன் தயாராய் இருந்ததும், கட்சித்தலைவர் பதவியால் தான் எவ்வித பெருமையோ, எவ்வித சுயநலமோ அடையாமல் கட்சிக்கு தன்னால் பெருமை அளிக்கப்பட்டதுடன் தனது செல்வத்தையும், செல்வாக்கையும் கட்சிக்கு உதவி வந்த தன்மையுமே இவ்வளவு பெரியதொரு மகத்தான காரியத்தை வெகு அலட்சியமாகவும, சுலபமாகவும் முடித்து விட முடிந்தது.

இந்த முயற்சியில் தோழர் பொப்பிலி ராஜா அவர்கள் தோற்று இருந்தாலும் கூட வீரராகவே விளங்கி இருப்பார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. முதல்மந்திரி பதவியையும் கூட அவர் அவ்வளவு அலக்ஷியமாகவே கருதி இருப்பதாலேயே உத்தியோக தோரணையிலும் பல காரியங்கள் உறுதியோடு செய்யப்படுகின்றதே யொழிய மந்திரி பதவியை கடுகளவாவது லக்ஷியம் செய்து கொண்டு இருந்திருப்பாரேயானால் நாட்களையும், பணங்களையும் எண்ணிக் கொண்டிருப்பதைத்தவிர அவரால் வேறு ஒரு காரியமும் செய்து இருக்க முடியாது.

நிற்க இந்தக் காரியத்தின் பயனாய் இப்போது பெரியதொரு யுத்த முஸ்தீப்புகள் தயாராகிக் கொண்டிருக்கிறதாக தெரிய வருகின்றது.

தோழர் ராஜா சர் அண்ணாமலையார் அவர்கள் மூன்று லக்ஷ ரூபாய் முதல், ஐந்துலக்ஷரூபாய் வரையிலும் செலவு செய்யத் துணிந்து தொகையை எடுத்து வேறாக மஞ்சள் துணியில் முடிந்து வைத்துக்கொண்டு பொப்பிலி ராஜாவை ஒழிப்பதற்கு அல்லது ஒரு கை பார்ப்பதற்கு யுத்தம் தொடங்க பிளானும், எஸ்டிமேட்டும் போட ஆரம்பித்து அடையார் அரண்மனையில் யுத்த ஆபீசு திறந்தாய் விட்டது. மைலாப்பூர் "இஞ்சினீர்" (பார்ப்பன மேதாவி வக்கீல்)களும், சென்னைநகர் "கண்ட்ராக்டர்" (பத்திரிக்கைக்காரர்)களும் செட்டி நாட்டு அடையார் அரண்மனைக்குள் புகுந்து நிரம்பி விட்டார்கள். படைகளுக்கு ஆள்களாக காங்கிரசு தொண்டர்களும், சுயமரியாதைத் தொண்டர்களில் சிலரும், "மூலபலம்" போல் அரண்மனையைச் சுற்றி அணிவகுத்து நின்ற வண்ணமாய் இருக்கின்றார்கள். மகா யுத்தம்போல் ஒரு பெரிய யுத்தம் நடந்து தான் தீரும் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. ஆனால் இதில் யார் வெற்றி பெறுவார் யார் தோல்வி அடைவார் என்பதை இப்போது சுலபத்தில் சொல்லிவிட முடியாது. ஏனெனில் ராஜா சர் அவர்கள் பணத்தை வாரி இறைக்கின்றார். தேசீய—சத்தியாக்கிரக பத்திரிக்கைக் காரர்களை யெல்லாம் ஐந்து நிமிஷத்தில் சரிக்கட்டி அடிமை கொண்டு கால் பெருவிரல் அடியில் வைத்துக்கொண்டு விட்டார்.

அது மாத்திரமல்லாமல் பத்திரிக்கைக்காரர்கள் பெரிதும் பார்ப்பனர்களாய் இருப்பதால் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் சொன்னது போல் "ஜஸ்டிஸ் கட்சியை 500 கஜ ஆழத்தில் புதைத்து விட வேண்டும் என்பதற்கு இணங்க பார்ப்பனர்களுக்குச் சொந்தத்திலேயே ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்து விட வேண்டும் என்கின்ற ஆசையிருப்பதோடு "நல்ல வேட்டை" "கொழுத்த ஆடு" என்பது போல் பெரியதொரு ஆசாமியான ராஜா சர் தங்களுக்குக் கிடைத்து இருப்பதுடன் அவரால் பணமும் கிடைக்கக் கூடியதாய் இருந்தால் அவர்கள் (பத்திரிகைக்காரர்கள்) எவ்வளவு ஆனந்தத்தோடு "பழம் நழுவிப் பாலில் விழுந்தது அதுவும் நழுவி அவர்கள் வாயில் விழுந்தது" போல் ஆனந்தங்கொண்டு இருப்பதில் ஆச்சரியப்பட வேண்டியது ஒன்றுமே இல்லை.

ஆகவே ராஜா சர் அவர்களுக்கு பணம், பத்திரிகை, ஏராளமான பார்ப்பனர்களின் சேவை, மேதாவிப் பார்ப்பனர்களது மூளை ஆகியவைகள் இருப்பதால் அவருடைய தாக்குதலை அவ்வளவு சாதாரணமாக மதித்து விட முடியாது.

இவை ஒரு புறமிருக்க "இனம் இனத்துடன் சேரும்" என்பது போல் தோழர் ராஜா சர் அவர்களைப்போல் இதற்கு முன் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து விலக்கப்பட்டோ, அல்லது அலட்சியமாய் கருதப்பட்டோ, அல்லது கட்சியால் தங்கள் இஷ்டப்பட்ட காரியம் கைகூடாமல் போய் மனச்சலிப்போடு கோபமாயோ இருக்கக்கூடிய மற்றும் பல தோழர்களும் இந்த சமயம் ராஜா சர். அண்ணாமலை அவர்களுக்கு சம்மன் இல்லாமலே உதவி செய்யவும், ராஜா சர். அவர்கள் பணத்திலும், முயற்சியிலும் தாங்கள் பழியைத் தீர்த்துக்கொள்ளவும் கருதி ராஜா சர். அவர்களுடன் Allience ஆய் சேர வெகு பேர் காத்துக்கொண்டும் இருக்கிறார்கள். இது சம்பந்தமாய் நெகோசேஷன் தூதுகள் நடந்துகொண்டும் இருக்கின்றன.

மற்றும் இச்சந்தர்ப்பத்தை மாதம் மும்மாரி பெய்து விளைந்த நல்லதொரு வெள்ளாமை போல் கருதி தக்கபடி அறுப்பு அறுத்து பத்தாயத்தில் கொட்டிக்கொள்ளலாம் என்கின்ற கனவு கண்டு கொண்டிருக்கும் பல பைகாட் அண்ணாத்தை மக்களின் உதவிகளும் செட்டி நாட்டு ராஜாவுக்கு போட்டிமேல் போட்டியாக வலுவில் வந்துகொண்டிருக்கும்.

தோழர் பொப்பிலி ராஜா அவர்களுக்கோ "பொப்பிலி ராஜா அவர்கள் தரிசனமே அமாவாசையையும், பௌர்ணமியையும் ஒரே நாளில் பார்க்க ஆசைப்பட்டவன் கதி போல் இருக்கின்றது" என்பாரும் "பார்க்கக் கிடைத்தாலும ஒன்று இரண்டு பேச்சுக்கு

மேல் பேச சந்தர்ப்பம் கிடைப்பது அதைவிட அரிதான காரியம்" என்பாரும், "பொப்பிலி எவரையும் மதிக்காத, லட்சியம் செய்யாத ஆணவம் படைத்தவர்" என்பாரும் ஆக பலவிதமாய்க் குறை கூறுவோர்களும், சுலபத்தில் பொப்பிலியை நெருங்கித் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியாது என்று கருதிக்கொண்டிருப்பாருமே அவருடன் மிகுதியாயிருக்கிறார்கள்.

பொப்பிலியின் மீது பொறாமைகொண்டவர்களும், துவேஷம் கொண்டவர்களும் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களும் நல்லதொரு சமயம் கிடைக்கவில்லையே என்று பதுங்கிக்கொண்டு இருக்கின்றவர்களும், கூட இருந்தே குளிர் காய்ந்து விடுவோம் என்று அவரை ஒவ்வொரு நிமிஷமும் கிட்ட இருந்துகொண்டே மோசம் செய்யக் கருதிக்கொண்டு இருக்கிறவர்களும் மலிந்தும் இருக்கிறார்கள் என்றாலும் சில உண்மையாளர் உண்டு.

இப்படிப்பட்ட கூட்டத்தை துணையாகவும், சகாயமாகவும் கொண்டுதான் பொப்பிலி அவர்கள் ராஜா சர் அவர்களது தாக்குதலுக்கு மார்பைக் காட்ட வேண்டியவராய் இருக்கிறார் என்றாலும் பொப்பிலிக்கு இருக்கும் பெரியதொரு பின் பலம் என்னவென்றால் வெற்றி தோல்வியின் பயனானதுவெற்றியானாலும், தோல்வியானாலும்(பொப்பிலிக்கும்செட்டிநாட்டுக்கும் இரண்டு பேருக்கும் ஒன்று போல் பாவிக்க முடியாததும்,இரண்டுபேரும்ஒன்றுபோல் பலன் அனுபவிக்கக் கூடாததுமான நிலையில் இருவர்களும் இருப்பதே பொப்பிலிக்கு பின்பலமாகும்.

அதாவது பொப்பிலி தோற்றுப் போனார் என்று வைத்துக் கொண்டாலும்,நல்லதொரு தோல்வியே ஏற்பட்டு விட்டதுஎன்று வைத்துக்கொண்டாலும் பொப்பிலிக்கு முழுகிப் போவதோ, கடுகளவு நஷ்டமோ, கவலையோ ஏற்படக் கூடியதோ ஆன காரியம் ஒன்றுமே இல்லை. பொதுவாழ்வின் பேரால் பொப்பிலிக்கு இனி ஆகவேண்டிய காரியம் எதுவுமே இல்லை, அவருக்கு இன்று தன் சொந்தத்தில் சுயநலத்துக்கு என்று ஆசைப்படவேண்டிய காரியமோ, லட்சியமோகூட எதுவும் இல்லை என்பதாகும்.

ஆதலால் அவரது தோல்வியானது அவருக்கு எவ்வித பாதகத்தையோ, சங்கடத்தையோ விளைவிக்க முடியாது.

ஆனால் தோழர் செட்டிநாடு ராஜா சர். அவர்கள் நிலைமை அப்படியில்லை. ராஜா சர். அவர்களது செல்வம், செல்வாக்கு, புகழ், மன நிம்மதி முதலிய மனிதவாழ்வு சாதனங்கள் ஒவ்வொன்றும் அவர்களுக்கு பொதுவாழ்வில்உள்ளவெற்றியையும்,மதிப்பையும் பொருத்ததாகவே இருக்கின்றது. அவரைச்சுற்றித்திரிபவர்கள், உதவியாளர்கள், ஆப்த நண்பர்கள் ஒவ்வொருவரும் செட்டிநாட்டு ராஜாவால் பிழைப்பதற்கும், அவரை உபயோகப்படுத்திக் கொள்வதற்குமே உள்ளவர்களே பெரும்பான்மையானவர்களாய் இருக்கின்றார்களே ஒழிய ராஜா சர். இடம் அனுதாபமோ, உண்மையான பற்றுதலோ,சுகதுக்கங்களில் பங்குண்டென்று நினைப்பவர்களோ மிகமிக அரிது. ஆகவே பொப்பிலி ராஜா அவர்களது படை "சிறியது" ஆனாலும் அவை சொந்தப்படை. பொப்பிலிக்காக உயிர் விடத்துணிந்த உத்தமப்படை சுயநலம் கருதாமல் ஒத்துழைக்கக்கூடிய படை. செட்டிநாடு அவர்களின் படைகளோ "பெரும்" படையானாலும் அது 100க்கு 99-கூலிப்படை தன் தன் சொந்தக் காரியத்துக்கு ஆக செட்டிநாட்டு ராஜாவை நத்திக்கொண்டு சூழ்ந்திருக்கும் சுயகாரியப்படை நல்ல சமயத்தில் விசம் கூலி அதிகமாய்க் கிடைப்பதாயிருந்தால் தலைவனையே கழுத்தறுக்கத் தகுந்த "உதார குணமுள்ள" துரோகப்படை.

செட்டிமார்நாட்டிலேயே செட்டிநாட்டு ராஜா சர் அவர்களுக்கு தாட்சண்ணியமும்—பயமும் வேறுகதியில்லாமலும் இருக்கின்ற செட்டிமார்கள் "உதவி" அல்லாமல் உண்மையானவர்கள், சுதந்திரமாயுள்ளவர்கள் நல்லெண்ணத்தின் மீதும் உதவிக்கு வரும் படை மிக மிக அரிதாகும்.

இவைகள் எல்லாவற்றையும் விட செட்டி நாட்டுக்கு உதவி பார்ப்பனமூலை, பொப்பிலி ராஜாவுக்கு உதவி அரசாங்க மூலை. பார்ப்பனர்களை நம்பிக் கெட்டவர்களும்,பார்ப்பனர்களால் கெட்டவர்களும் ஆன குடிகளும் ராஜாங்கமும் இவ்வளவு என்று உலகத்துக்கு நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

ஆனால் அரசாங்கமோ இவ்விஷயத்தில் வெகு சுளுவில் யாரையும் கை விட்டு விடாமல் நடுநிலைமையாய் நடந்துகொள்வார்கள்.

மற்றொன்று என்னவென்றால் பொப்பிலி செய்த காரியம் சரியோ, தப்போ எப்படி இருந்தாலும் அது ஜஸ்டிஸ் கக்ஷிக்காக, பார்ப்பனரல்லாதார் மக்கள் நலத்துக்காக என்கின்ற கவசத்தை கொண்டிருக்கின்றது. செட்டிநாடு ராஜாவால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் காரியம் சரியோ, தப்போ உண்மையோ, பொய்யோ எப்படி இருந்தாலும் அது கட்சிக்கு ஆபத்து ஏற்படத் தக்க—பார்ப்பனர் நன்மைக்காக, பார்ப்பனரல்லாதாரைக் காட்டிக்கொடுத்து செய்த இமயமலை போன்ற துரோகம் என்ற கவசத்தைக்கொண்டிருக்கிறது.

பார்ப்பனப் பத்திரிக்கைகள் இப்போது செட்டி நாட்டை ஆதரிப்பதற்காக இந்த ஒரு வாரத்துக்குள் போட்ட கரணங்களே பொப்பிலி ராஜாவின் கூற்றுக்களை மெய்ப்பிக்க தகுந்த கல்லுப்போன்றஆதாரங்களாக விளங்குகின்றன.

இந்த நிலையில் பொப்பிலியை செட்டிநாடு வலுவில் தாக்க யுத்த முஸ்தீபுகளைத் தயார் செய்து வருவது அவ்வளவு போற்றத்தக்கதும், புத்திசாலித்தனமானதுமான காரியம் என்று சொல்ல நம்மால் முடியவில்லை. பார்ப்பனர்களை நம்பிய—பார்ப்பனப்பத்திரிகைகளை நம்பிய—காங்கிரசுப்பார்ப்பனர்களையோ, மிதவாதப்பார்ப்பனர்களையோ நம்பிய பார்ப்பனரல்லாதார் எவரும் இந்த 50 வருஷகாலத்தில் முன்னுக்கு வந்ததாகச்சரித்திரமும் இல்லை சம்பவமும் இல்லை என்பதை செட்டி நாட்டுக்கு வணக்கத்துடன் எச்சரிக்கை செய்கின்றோம்.

ஆதலால் செட்டிநாட்டு ராஜா சர். அவர்களும், குமார ராஜா அவர்களும் நடந்துபோன விஷயத்தையும், யுத்த ஆத்திரத்தையும் மறந்து சில முக்கியஸ்தர்களைக்கொண்ட ஒரு கூட்டத்தை கூட்டி இனி நடக்கவேண்டியது என்ன? எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்து ஒரே கட்சியில் உறுதியாய் நிற்க முடிவு செய்துகொள்வதே தக்க காரியம் என்பதை விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம்.

### மொழிபெயர்ப்பாளர் தேவை.

இங்கிலீஷை தமிழிலும் தமிழை இங்கிலீஷிலும் நன்றாய் மொழிபெயர்க்கத்தெரிந்த ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவை.

விபரத்துக்கு யோக்கிய தாம்சத்துடன் ஆபீசுக்கு எழுதவும்.

## ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களுக்கு ஒரேவார்த்தை.

ஜஸ்டிஸ் கட்சி இந்திய சட்டசபை தேர்தல் அடைந்ததோல்வியால் "குதிரை கீழே தள்ளியது மல்லாமல் குழியும் பறித்தது" என்று சொல்லும் பழமொழி போல் தோல்வி அடைந்ததோடு கட்சிக்கே ஆட்டம் வரும் நிலைமையையும் ஏற்படுத்திக்கொண்டது.

அதாவது கட்சிக்கு உள்ளுக்குள்ளாகவே மகத்தான எதிர்ப்புஏற்பட்டுவிட்டது. தக்கதொரு பணக்காரரை கட்சியில் இருந்து விரட்டிவிட்டதால் பணக்காரர்களை நம்பி வாழும் தொண்டர்களையும் கட்சியில் இருந்து விரட்டிவிட்டதாகத்தான் அர்த்தம்.

"கொள்கை" "கொள்கை" என்று மாத்திரம் கூப்பாடு போடுவது பயனற்ற பேச்சாகும். பணமும், பிரசாரமும் தந்திரமும் உள்ளவர்கள்தான் வெற்றி பெறுவார்களே தவிர வெறும் கொள்கைகளே வெற்றி யளித்து விடாது.

ஆகவே இனி நடக்கப்போகும் காரியத்துக்கு நல்லதொரு கொள்கையும், அதற்குத் தகுந்த பணமும், பிரசாரமும் இல்லாமல் ராஜா சர் அண்ணாமலையாரையும் குமாரராஜாவையும் விரட்டியடித்து விட்ட பெருமையை நினைத்து மகிழ்ந்துகொண்டே இருப்போமானால் அழிப்பாரில்லாமல் கட்சி அழிந்துபோகும் என்பது உறுதி.

இன்று சென்னை சட்டசபைத் தேர்தலுக்குகாங்கிரஸ்காரர்களுடன் போட்டிபோட ஒரு ஆளை நிருத்த ஜஸ்டிஸ் கட்சிக்கு யோக்கியதை இல்லாமல் போய்விட்டது என்றால் கட்சியின் எதிர்கால நிலைமைக்கு யாரையாவது ஜோசியம் கேட்க வேண்டுமா என்று கட்சித்தலைவரை கேட்கின்றோம்.

தோழர் ஈ. வெ. ராமசாமியால் கட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் 4, 5 மாத காலமாக தள்ளிவைத்துக் கொண்டேவரப்படுகிறது. இன்னமும் தேதிபோடாமலும் தள்ளிவைத்து விடலாம் இதனால் ஈ. வெ. ராமசாமியை ஏமாற்றலாம். ஆனால் உலகத்தை ஏமாற்றி விட முடியாது.

இன்றையதினம் ஜஸ்டிஸ்கட்சியின் தேர்தலுக்கு பிரச்சினை இல்லை என்று சொல்லுவதை மறுக்க முடியவில்லை.

இதுவரையில் ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனரல்லாதார்கட்சியாய் இருந்தது. இப்போது அந்த "கெட்ட" பெயரையும் நீக்கிக்கொண்டது. இனிமேல் ஓட்டர்களிடம் என்னசொல்லி ஓட்டுக்கேட்பது என்பதை உணர வேண்டாமா? பணம் ஜஸ்டிஸ் காரிடம் எவ்வளவு இருக்கின்றதோ அவ்வளவு எதிரிகளிடமும், காங்கிரஸினிடமும் இருக்கிறது.

பிரசாரம் ஜஸ்டிஸ்காரரிடம் கிடையவே கிடையாது. காங்கிரசுக்

காரரிடமும், எதிரிகளிடமும் ஏராளமாய் இருக்கிறது. தந்திரங்களுக்கு சொல்லவேண்டியதில்லை.

டிசம்பர் மாதம் 30ந் தேதிக்குள் தோழர் ஈ. வெ. ராமசாமியின் திட்டங்களைப்பற்றி ஒரு முடிவு ஏற்படவில்லையானால் தோழர் ராமசாமிஜஸ்டிஸ்கட்சியில் இருப்பது அவருக்கே வெட்கக்கேடான காரியமாகும். அவர்களது தோழர்களும் இவரை இனி மதிக்கவும் மாட்டார்கள் என்பதை ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்கள் உணர்வார்களாக ஆகவே ஜஸ்டிஸ் கட்சியின் வீரமும், வாழ்வும் செட்டிநாட்டை முறியடித்துவிட்டோம் என்பது அல்லவே அல்ல. அது இனியும்மக்களுக்குஎன்னசெய்யப்போகின்றதுஎன்பதையே பொருத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## நிர்வாக சபையை ஏன் கூட்டவில்லை,

தோழர் குமார ராஜா அவர்கள் மீது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் பார்ட்டி மீட்டிங்கில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மான விஷயமாய் "முதலில் நிர்வாக சபைக் கூட்டம் கூட்டி அதில் ஒரு முடிவு செய்து கொண்டு பின்பு கவுன்சில் பார்ட்டி கூட்டம் கூட்டலாம்" என்று அநேகதந்திகளும்,கடிதங்களும் அனுப்பப்பட்டன. அவைகள் எதையும் கவனிக்காமல் கவுன்சில் பார்ட்டியில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு விட்டது" என்பதாகச் சிலர் குறை கூறுகிறார்கள். இதற்கு சமாதானம் சொல்ல கட்சி கடமைப்பட்டிருக்கிறது.

அச்சமாதானம் என்னவென்றால் ஜஸ்டிஸ் கட்சி நிருவாக சபைக்கு அக்கிராசனர் குமார ராஜா முத்தய்ய செட்டியார் அவர்கள் அல்ல என்பதையும் கவுன்சில் பார்ட்டி (சட்டசபைக் கட்சி கொரடா) விப்புதான் சேர்மென் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டுமாய் கோருகிறோம்.

ஏனெனில் தோழர் குமார ராஜா அவர்கள் கவுன்சில் பார்ட்டி கொரடா என்கின்ற முறையில் தான் நிர்வாக சபைக்கு தலைமை வகிக்கின்றார் ஆதலால் நிர்வாக சபையில் தோழர் முத்தைய செட்டியார் அவர்களுக்கு சொந்த முறையில் அக்கிராசனர் பதவி இல்லை.

அதனால் அவர் சொந்த முறையில் எந்த சபையில் பிரதானப்பட்டவரோ அந்த சபை மூலம் அவரது விஷயம் கவனிக்கப்பட வேண்டியதாயிற்றே ஒழிய அது தான் சட்ட ரீதியான ஒழுங்கு முறையான நியாயமே ஒழிய மற்றபடி நிர்வாக சபையில் இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டால் தோற்றுப் போகும் என்றோ சட்டசபைக்கமிட்டியில் சுலபமாய் பாசாகிவிடலாம் என்றோ கருதி குறுகிய நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அல்ல என்பதே சமாதானமாகும்.

---

## ஈ. வெ. ராமசாமி.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் 8-12-34ந் தேதி இரவு ஈரோட்டை விட்டுப் புரப்பட்டு விருதுநகர், வாடிப்பட்டி, சோழவந்தான் அருப்புக்கோட்டை கீழஈரால், சென்னை முதலிய விடங்களுக்குச் சென்று விட்டு 14-12-34ந் தேதி காலை ஈரோடுவந்து சேர்ந்தார். சுற்றுப்பிரயாண விஷயம் அடுத்த வாரம் வரும்.

---

(9ம் பக்கத்தொடர்ச்சி)

முறையில் ஒரு சர். கே. வி. ரெட்டியார் லா மெம்பராயிருந்தால் தமிழர்களில் 1. ஒரு கே. சீனிவாசய்யங்கார், 2. ஒரு சர். உஸ்மான், 3. ஒரு சர். சி. பி. ராமசாமி ஐயர், 4. ஒரு கே. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரி, 5 ஒரு கிருஷ்ண நாயர், 6. ஒரு பன்னீர் செல்வம் ஆக 6 பேர்கள் தமிழர்கள் நிர்வாக சபை மெம்பராயிருக்கிறார்கள்.

ஹைக்கோர்ட் ஜட்ஜிகளை எடுத்துக்கொண்டாலும் சரி சர்வீஸ் கமிஷனை எடுத்துக்கொண்டாலும் சரி. மற்றும் சர்க்காரால் நியமிக்கப்பட்ட சகல பதவிகள் உத்தியோகங்கள் ஆகியவற்றில் தமிழர்களை எந்தத்துறையிலும் ஆந்திரக்காரர்கள் மிஞ்சிவிடவில்லை என்பதை எவ்வளவு மூடனும் சுலபமாய் உணர முடியும்.

அன்றியும்ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாய் இதுவரை ஒரு ஆந்திரர் கூட கார்பரேஷன் பிரசிடெண்டாகவோ மேயராகவோ ஆனதில்லை.

மேலும் இன்று எந்த தமிழனாவது மனம்துணிந்து தைரியமாய் தோழர் பொப்பிலிராஜா அவர்கள் ஆந்திராக்காரர் என்றாவது இந்த மந்திரிபதவியினால் பணம் சம்பாதிக்கவோ, அல்லது தனது குடும்பத்துக்கோ, எஸ்டேட்டுக்கோ, தனது சொந்தத்துக்கோ, ஏதாவது அனுகூலமோ நன்மையோ செய்து கொள்ளவோ வந்திருக்கிறார் என்று சொல்லக்கூடுமா என்று கேட்கின்றோம். சுயமரியாதைக் கொள்கையைப் பொருத்த வரையில் கூட டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒன்று ராஜா பொப்பிலி இரண்டு ஆகிய இரண்டு மந்திரிகள் தான் அவ்வியக்கத்தில் கலந்து கொண்டதை தெரிவிக்கவோ அல்லது சில கொள்கைகளையாவது ஒப்புக்கொள்ளுகின்றோம் என்று சொல்லவோ தைரியமாய் முன்வந்தார்களே ஒழிய மற்ற எந்த மந்திரியாவது ராஜாவாவது வாயினால் உச்சரிக்கவாவதுஇணங்கினார்களா என்றுகேட்கின்றோம்.

கடப்பாரையை விழுங்கி விட்டு அதை ஜீரணம் செய்ய சுக்குக் கஷாயம் சாப்பிடுவது போல் மகத்தான கெடுதியும், துரோகமும் ஏற்பட்டு விட்டது என்று குற்றம் சாட்ட வந்தால் அதற்கு சரியான சமாதானம் சொல்லுவதை விட்டுவிட்டு ஆந்திரா தமிழர் என்கின்ற கலகத்தையுண்டாக்கி விட்டுஅதை அடக்கிவிடலாம் என்று பார்ப்பது காட்டு வெள்ளத்தைத்தடுப்பதற்கு முறத்தை ஏந்திக்கொண்டு எதிரே நின்றதுபோல ஆகுமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இதற்கு முன் கூட ஒன்று இரண்டுதடவை இந்த முயற்சி பார்ப்பனர்களால் கிளப்பி விடப்பட்டு கடைசியாக பார்ப்பனர்கள் முழுத்தோல்வி அடைந்தார்கள்.

அதாவது குரு குல போராட்டம் என்பதில் சேரமாதேவி ஆச்சிரமத்தில் பார்ப்பனப் பிள்ளைகளுக்கு உள்ளே சாப்பாடும் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளுக்கு வெளியே வைத்துச் சாப்பாடும் போட்டு பொதுப் பணத்தில் நடத்தி வந்த குரு குல ஆச்சிரமத்தைப் பற்றி தோழர்கள் வரதராஜுலுவும், ஈ. வெ. ராமசாமியும் கிளர்ச்சி செய்து வந்த காலத்தில் "தமிழ் நாட்டுவிஷயத்தைப்பற்றி ஆந்திர தேசத்தாரான ஒரு நாயுடுவும், கர்நாடக தேசத்தாரான ஒரு நாயக்கரும் கிளர்ச்சி செய்வது நமக்கு வெட்கமாக இல்லையா? ஆதலால் அவர்களது கிளர்ச்சியைஆதரிக்கக்கூடாது" என்று காலஞ்சென்ற தேச பக்தர் வி. வி. எஸ். அய்யர் அவர்களே கிளப்பி விட்டார்கள்.

காங்கிரஸ் தொண்டர்கள் சிலர் இக் கிளர்ச்சிக்கு உதவியும் செய்தார்கள் இவ் விஷயம் தோழர் திரு. வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும் அப்படி இருந்தும் குரு குலம் அடியோடு அழிந்ததே தவிர ஆந்திரர் தமிழர் பிரச்னை சிறிது கூட பயன்படவில்லை. அது போலவே மற்றொரு சமயமும் காங்கிரஸ் கமிட்டியில் கிளப்பப்பட்டு தோழர் திரு வி. கல்யாண சுந்திர முதலியார் அவர்களே அதைக் கண்டித்து வெற்றி பெற்றார்.

ஆகையால் தமிழ் மக்கள் என்று தங்களை சொல்லிக் கொள்கிறவர்கள் இம் மாதிரியான பயனற்றதும் விஷமத்தனமானதுமான ஆந்திரர் தமிழர் என்ற தேசாபிமானப் புரட்டின் மேல் தங்கள் வெற்றிக்கு வழி தேடி அவமானமடையாமல் பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற விஷயத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து அதில் வெற்றி பெற உழைக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கின்றோம்.

---

## அடுத்த வாரம்.

பல ஊர்களிலிருந்து வந்த செய்திகளை இவ்வாரப் பத்திரிகையில் இடமில்லாததால் அடுத்தவாரம் பிரசுரிக்கப்படும்.

---

## விஸ்வகுல—மரண சடங்கில் சீர்திருத்தம்.

சமூக சீர்திருத்த வீரரும், திருநெல்வேலி விஸ்வகர்ம மகாநாட்டு பொக்கிஷதாரும், குடி அரசு ஆரம்ப கால முதல் சந்தாதாருமாகிய தோழர் எ. குமாரசாமி ஆசாரி அவர்களின் தந்தையார் ஆறுமுகஆசாரி அவர்கள் சென்ற 24-11-34ந்தேதி சனிக்கிழமை பகல் 12மணிக்கு சூரன்குடியில் தமது இல்லத்தில் 73-வயதில் மரணமானார். யாதொருசடங்கன்றியில் தகனம்செய்யப்பட்டதோடு 1-12-34ந்தேதி பத்தாவது தினத்தன்று சுற்றத்தார்களும், சீர்திருத்த பிரமுகர்களும் வந்திருந்தார்கள். சாப்பாட்டுக்கு மேல் நடந்த பொதுக்கூட்டத்தில் விஸ்வகர்ம சமூகத்தார் மரண காலங்களில் நடத்தி வரும் அர்த்தமற்ற சடங்குகளை கண்டித்தும், அறிவிற்குப் பொருத்தமுள்ள முறையில் டை விசேடத்தை நடத்த வேண்டுமென்றும் பேசி இன்று வழிகாட்டிய தோழர் எ. குமாரசாமி அவர்களைப்பாராட்டிப்பேசினார்கள்.

(நமது நிருபர்)

---

## மரணம்.

திருக்கோஷ்டியூர் டாக்டர் நா. நமச்சிவாயம் அவர்கள் குமாரத்தி 8-12-34ல் காலஞ்சென்று விட்டார் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

(8 ம் பக்கத்தொடர்ச்சி)

ண்டு நடப்பதாயிருந்தால் உங்களுடன் வேலை செய்கிறவனாகிய என்னுடன் நியாயமான வழிகளில் நடக்க வேண்டும்,

விசாரித்து நீதி செலுத்துங்கள்.

நீங்கள் நியாயமான வழிகளில் நடக்கவாவது இவ்விஷயத்தைப்பற்றிப் பக்ஷபாதமில்லாததோர் விசாரணை நடத்த சந்தர்ப்பமளிக்கக் கூடாதா. அல்லது பொறுப்பில்லாத அறிக்கையின் பேரில் நீங்கள் நடவடிக்கைகள் ஏற்படுத்தப் போகிறீர்களா; இந்தப்பிரேரணையைக் குறித்து என்ன முடிவு ஏற்படுகிறதென்பதைப்பற்றி யோசிக்காமல், என் பேரில் ஏற்பட்ட குற்றச்சாட்டு முழுதும் ஆதாரமற்றது என்றும் அர்த்தமில்லாததென்றும் நீங்கள் அங்கீகரிப்பதாயிருந்தால் எனக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய நீங்களும் கட்சித் தலைவர்களும் சந்தேகமில்லாத அறிக்கையொன்றில் நீங்கள் மேல் குறிக்கப்பட்ட குற்றச்சாட்டைப்பற்றிச் சந்தேகத்தின் பேரில் வேலை செய்யவில்லை எனத் தெரிவிக்க வேண்டும். என்னுடைய முதல் சிகிச்சை உங்கள் கையில் இருக்கிறது. நான் அதை நம்பிக்கையுடன் நாடுகிறேன். பத்திரிகை வாயிலாக ஏற்பட்ட அறிக்கைகளினால் என் மீது பொது மக்களிடையே அதிருப்தி விழ ஹேதுவாயிருக்கும். ஆதாரமற்ற குற்றச்சாட்டை மறுப்பதே நீங்கள் எனக்களிக்கும் பரிஹாரமாகும். இப்படியிருக்க, இந்த சாதாரணமான நியாயமான பரிஹாரத்தைப் பெற நான் இதுவரை செய்த முயற்சியெல்லாம் பலனளிக்கவில்லை. குற்றங்கள் இன்னும் குறிக்கப்படவேயில்லை. நான் கட்சித் தலைவரிடம் எதிர் பார்த்த உதவி வரவில்லை. இந்த நிலையில் நிர்வாகக் கமிட்டியின் அக்கிராசனர் பதவியையும் பிரதம கொரடா பதவியையும் நான் ராஜிநாமாச் செய்ய வேண்டியவனாயிருக்கிறேன். என் கடமைகளை நிறைவேற்றுவதில் என்னிடமன்பாயிருந்த நிர்வாகக் கமிட்டியாருக்கும் சட்டசபையிலுள்ள என் கட்சி சிநேகிதர்களுக்கும் என் வந்தனத்தை யளிக்கிறேன். நான் உங்களுன் முன்சொன்ன சில உண்மைகளால் என் நிலைமை தெளிவாக விளங்கியிருக்குமென நான் நம்புகிறேன்."

இது படிக்கப்பட்ட பின்னர் பொப்பிலிராஜா பேசுகையில்குமாரராஜா ஸர். ஷண்முகஞ்செட்டியாரின் கடிதத்தில்ஒரு பாகத்தையே படித்திருக்கிறாரென்றும் ஸர். ஷண்முகஞ்செட்டியாரின் சரியான அபிப்பிராயமென்னவென்பது தெரியவேண்டுமானால் அக்கடிதத்தின் மற்ற பாகங்களையும் படிக்க வேண்டுமென்றும், கூறினர். ஷண்முகஞ்செட்டியார் கடைசியாக செட்டிநாடு ராஜாவுக்கு எழுதிய பின்வரும் கடிதத்தைப் படித்தார். அதாவது:—

"இத்தேர்தலில் சிறந்த சேவை செய்தவர்களுக்கு நீங்கள் நன்றி தெரிவித்திருக்க, அவர்களைத் தூஷிக்க உங்கள் அபேக்ஷையும் இத்தேர்தல் போராட்டமும் உபயோகிக்கப் படுவதில், நீங்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்பதாக" த்தாங்கள் கடிதத்தில் எழுதியிருக்கிறீர்கள். தாங்கள் இவ்விதம் அதிசயமான ஒரு யோசனை கூறியிருப்பதுபற்றி எனக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது. ஒருவர் தான் செய்ததுதவறு என ஏற்பட்டால்தான் தவறுக்காக வருத்தம்தெரிவிக்கலாம். இந்தபிரஸ்தாபவிஷயத்தில்தங்களைப்பற்றிச் செய்யப்படும் பிரசாரத்தில் எனக்கு எவ்விதப் பொறுப்புமில்லையென்று நான் கூறியிருக்கும் பொழுது வேறு யாரோ செய்யும் காரியத்திற்கு நான் ஏன் வருத்தம் தெரிவிக்கவேண்டுமென்பது தெரியவில்லை. இது சம்பந்தமான எவ்விஷயத்திலும் நான் வருத்தம் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லையென்பது சற்று யோசித்துப்பார்த்தால்தங்களுக்கேஏற்படக்கூடும்.

மற்றவர்கள் தங்களைப்பற்றிச் செய்யும் பிரசாரம் சம்பந்தமாக எனது நிலைமையை நான் தெளிவுபடுத்திவிட்டேன். அத்துடன் நிஷ்கபடமாகநான் ஒன்றுகூறவேண்டியிருக்கிறதுஎனது தேர்தலில் செட்டிநாடு பிரதேசத்தில் எனக்கேற்பட்ட ஆதரவைக்கொண்டு நான் திருப்தியடைந்து விட்டேனென்று நான் சொல்லுவதானால் அது வஞ்சகவார்த்தையேயாகும். இந்தப் பிரதேசத்தில் எனக்குக் கிடைத்த ஆதரவில் நான் மிகுந்த ஏமாற்ற மடைந்திருக்கிறேனென்பதை நான் திட்டமாகக்கூறவேண்டியிருக்கிறது. தேர்தலுக்கு முன்னரும் தேர்தல் பிரசாரகாலததிலும் நான் எதிர்பார்த்ததற்கும் நான் முடிவாகப் பெற்ற ஓட்டுக்களுக்கும் மிகுந்த ஏற்றத்தாழ்வேறபட்டிருக்கிறது. சென்ற ஜூன் மாதத்தில் நிபந்தனையின்றி சந்தேகமறத் தாங்கள் அளித்த வாக்குறுதியினால் செட்டிநாடு பிரதேசத்தில் எனக்குப் பூரா ஆதரவேற்படுமென நம்பினேன். இந்த கட்டுப்பாடான ஆதரவுகிடைக்குமென்ற எண்ணம்தான் இத்தொகுதியில் அபேக்ஷகராக நிற்கக்காரணமாக விருந்தது. நான் தான் அதிக நம்பிக்கை கொண்டு விட்டேனா அல்லது வேறு காரணங்கள்குறுக்கிட்டனவாவென்பதை இப்பொழுது கூறுவதற்கில்லை. இதன்பிறகுநான் மிகுந்தஏமாற்றமடைந்தேனென்பதில் சந்தேகமில்லை. இத்தேர்தலிலேற்பட்ட தோல்வி எனக்கும், எனது எதிர்கால வாழ்வுக்கும் எவ்வளவு பாதக முண்டுபண்ணிவிட்டதென்பதை யோசிக்கும் பொழுது எனது ஏமாற்றம் மிகவும் கடுமையாக விருக்குமென்பதை தாங்களே ஒப்புக்கொள்ளக் கூடும்."

நம்பிக்கையில்லாப் பிரேரணை

தற்காலமுள்ள பிரதம கொறடாவிடம் இக்கக்ஷிக்கு நம்பிக்கையில்லையென்றதீர்மானத்தை வெங்கடகிரி குமாரராஜா பிரேரேபித்துப்பேசியதாவது:-

செட்டிநாடுகுமாரராஜா பிரதம கொறடாவாக விருந்து வருவது விரும்பத்தக்கதல்லவென்பது சட்டசபைக் கட்சியினரின் அபிப்பிராயமாகும். மிகவருத்தத்துடனேயே இத்தீர்மானத்தை நான் பிரேரிக்கிறேன். ஆனால் கொறடா பதவியில் மாறுதல் ஏற்படவேண்டுவது கக்ஷி நன்மையை உத்தேசித்து அவசியமாகிறது. செட்டிநாடு குமாரராஜா கொறடா பதவியை ராஜிநாமாச்செய்வதாக அறிவித்தபடியால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான காரணங்களை யெடுத்துரைக்க வேண்டுவது அவசியமில்லை.

ஸர். ஏ. பி. பாத்ரோ.

தீர்மானத்தை ஆமோதித்துப் பேசியதாவது:—செட்டிநாடுகுமாரராஜா வெகு ஜாக்கிரதையாகத் தயாரித்துள்ள அறிக்கை எனக்கு மிகுந்த ஆச்சர்யத்தை யுண்டுபண்ணியிருக்கிறது. ஏனெனில் இங்கு இப்பிரேரணை மீது விவாதிக்க வேண்டாமென்று கருதப்பட்ட விஷயங்களை அவரே அந்த அறிக்கையில் எடுத்துப் பேசிவிட்டார். இந்தியா சட்ட சபைத் தேர்தலைப்பற்றியும், மேயர் தேர்தலைப்பற்றியும் குமாரராஜா குறிப்பிட்டிருக்கிறார். மிகுந்த விவாதத்திறகுப்பின் இத்தேர்தல்களைப்பற்றிக் குறிப்பிட வேண்டுவதில்லையென பிரபல மெம்பர்கள் ஒரு முடிவுக்கு வந்திருந்தனர். ஆனால் தமது நீண்ட அறிக்கையில் குமாரராஜா இவற்றைப் பற்றியே குறிப்பிட்டிருக்கிறார். இதில்முன்யோசனையுடனும், நிதானத்துடனும் நடந்துகொண்டிருக்கலாம். ஆனால் பிரஸ்தாப மேற்பட்டு விட்டபடியால் நானும் அதைக் குறிப்பிடவேண்டியதாகிறது.

மேயராகத் தெரிந்தெடுக்கப் படுவதில் கக்ஷி தமக்குப் பூராவாக ஆதரவளித்திருக்கிறதென்பதை தோழர் முத்தையா செட்டியார் ஒப்புக்கொள்ள வேண்டும். அவர் அங்கத்தினர் பதவி முடிய ஐந்து மாதமிருக்கும் பொழுதே முதல் மந்திரி நெறிதவறிப்போய் அவரை மீண்டும் அங்கத்தினராக நியமித்தார். இது ஒரு பெரிய காரியமல்லவா? கக்ஷியில் மிகவும் முதியவராயிருக்கும் ஒருவரை விட்டு இவரை ஆதரித்தது கக்ஷி செய்த பெரிய தியாகமல்லவா? சென்ற ஜூன் மாதத்தில் செட்டிநாடு ராஜா பொப்பிலி ராஜாவையும், ஸர். ஆர். கே. சண்முகஞ்செட்டியாரையும் கண்டு செட்டிநாடு ஓட்டுகளைப்பற்றி உங்களுக்கு பயமே வேண்டாம். எல்லாம் சரியாகவிருக்கும் என்று சொன்னார். ஆனால் முடிவில் சரியாயில்லாமற்போய்விட்டதுசெட்டிநாட்டிலிருந்து கிடைத்த ஆதரவு தமக்கு பெருத்த ஏமாற்றமாக ஆயிற்றென்று ஸர் சண்முகஞ்செட்டியாரே செட்டி நாடு ராஜாவுக்கு எழுதியிருக்கிறார். இதில் எதையும் திட்டமாக ருஜூச் செய்வது சாத்தியமில்லை. இம் மாதிரி விஷயங்களில் ருஜூச் செய்வதென்பது மிகவும் கஷ்டமாகும். சில சந்தர்பபங்களைக் கொண்டு இத் தேர்தலைப் பார்த்தால் சில முடிவுகளுக்கு வரவேண்டியிருக்கிறது.

ஆரம்பத்தில் நான் கூறியதுபோல் இத் தேர்தலைப் பற்றிக் கூறவேண்டுமென்பது எனது எண்ணமல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் வேறு காரணம் கொண்டும் ஆதரிக்கிறேன். பிரதம கொறடா தமது அலுவல்களைச் சரிவரக் கவனிக்கவில்லையென்றும், சட்ட சபையில் ஓட்டெடுக்கும்பொழுது பல சமயங்களில் அவர் இல்லையென்றும் பிரதம கொறடாவின் செய்கையினால் சில சமயங்களில் அங்கத்தினர்கள் எப்படி ஓட்செய்வதெனறே தெரியாமலிருக்கின்றனரென்றும் மந்திரிகளின் காரியதரிசிகள் அங்கத்தினர்களிடம் போய் ஓட்செய்யும் வகையை அறிவிக்க வேண்டியிருக்கிறதென்றும் நான் பல தடவைகளில் கட்சித் தலைவரிடம் புகார் செய்திருக்கிறேன். சட்ட சபையில் அந்த வேலை மிக ஏமாற்றமுண்டு பண்ணுவதாகவே யிருக்கிறது. கொறடாவின் முக்கிய கடமை அங்கத்தினர்களுக்கு அவ்வப்பொழுது விஷயங்களைச் சொல்லி ஓட்டுக் காலத்தில் அவர்களுடன் நெருங்கிப் பழக வேண்டியதாகும்.

இது குமார ராஜாவால் செய்யப்படவில்லை. அவர் இன்னும் பல முக்கிய அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அவர் இவ் வேலையை விட்டுவிடுமாறு செய்வது நலமாகும்.

இத் தீர்மானத்தை ஆதரிப்பதில் எனக்குச் சொந்தக் கருத்து எதுவுமில்லை. செட்டிநாடு ராஜாவும், குமார ராஜாவும் எனது சிறந்த நண்பர்கள். ஆனால், இக் கட்சியின் ஆரம்ப முதல் நான் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் இக் கட்சியின் நன்மையை உத்தேசித்தும், கட்சியின் ஒற்றுமை, கட்டுப்பாடு ஆகியவற்றை உத்தேசித்தும் சபையினர் இத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

டாக்டர் நடேச முதலியார்

பிறகு ஆதரித்துப் பேசுகையில் மேயர் தேர்தல் சம்பந்தமான விஷயங்களை எடுத்துரைத்துவிட்டு மேலும் கூறியதாவது:—நவம்பர் 5-ந் தேதி குமார ராஜாவின் மேயர் தேர்தலைக் குறித்து நான் பாராட்டிப் பேசியிருப்பதாக அவர் கூறுகிறார். இது சரியில்லை. இத்தகைய தேர்தலில் அவரைப் பாராட்டக் கூடாதென நான் ஜாக்கிரதையாகவேயிருக்கிறேன். பொதுஜன அபிமானம் பெற்றிருப்பதாகவும், ஜனங்கள் நம்பிக்கையைப் பெற்றிருப்பதாகவும் செட்டி நாடு குமார ராஜா கூறுகிறார். ஆனால், சென்னை நகரிலுள்ள உணர்ச்சியை நன்கு கவனித்தவர்களுக்கு நான் மேயராக வேண்டுமென்றே அவர்கள் எண்ணினரென்பது தெரியவரும். கட்சியின் முடிவை மதித்து அக் கட்சியிலிருக்கும் வரையில் நான் அதற்கெதிராக நிற்கக் கூடாதென நினைத்தேன். எனது சொந்த நண்பர்கள் பலர் வற்புறுத்திக் கூறியும் நான் நிற்க இஷ்டப்படவில்லை. கட்சியை விட்டு வெளியேறுமாறு சில நண்பர்கள் என்னிடம் கூறினர். ஆனல், கட்சியை ஆரம்பித்தவர்களில் ஒருவராகவிருந்து இவ்வளவு வருஷங்களாக அதில் விசுவாசத்துடனிருந்த நான் அவ்விதஞ் செய்யமாட்டேனெனக் கூறி விட்டேன். ஜஸ்டிஸ் முனிசிபல் கட்சிக் கூட்டத்தில் என்னை ஒரு தினத்திற்காவது அல்லது 5-ந் தேதியன்று ஒருமணிக்காவது மேயராகத் தெரிந்தெடுங்கள். இதனால் நகரவோட்டர்களுக்குத் திருப்தி யேற்படும் என்று நான் சொன்னேன். கூட்டம் முடிவடைந்ததும் நான் ராஜி நாமாச் செய்து விடுகிறேன். அடுத்த கூட்டத்திற்குச் செட்டிநாடு குமாரராஜா மேயராகவிருந்து புதிய கவர்னருக்கு வரவேற்பு அளிக்கலாமெனக்கூட சொன்னேன். ஆனல், அந்த யோசனை கூட ஏற்கப்படவில்லை. செட்டிநாடு குமாரராஜா தமது செல்வாக்கை என்னிடம் உபயோகித்து விட்டாரென்றும், அதனல் தான் நான் சபையில் அவருக்கெதிராகப் போட்டியாக நிற்கவில்லையென்றும் ஜனங்கள் சொல்ல வாரம்பித்தார்கள். கட்சியின் தீர்மானத்தை மதித்தும் சபையில் நானுள்பட சேர்ந்து ஒரு சம்பிரதாயத்தை யேற்படுத்தியிருப்பதால் அதை மதித்தும் நான் சபையில் எனது அபேக்ஷையை வெளியிடவில்லை. மற்ற எந்த செல்வாக்குக்குட்பட்டும் அவ்விதம் செய்யவில்லை. மேயர் தேர்தலின் பயனாக நகரில் ஏராளமான ஓட்டர்கள் சாதாரணமாக ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட் செய்யவேண்டுமென எண்ணினாலும் அவ்விதஞ்செய்யாமல் எதிராகவும் ஓட் செய்தனரெனக் கருதப்படுகிறது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் ஆதரிப்பதற்குச் சொந்தக் கருத்தெதுவுமில்லை. கட்சியின் சிறந்த நன்மையை உத்தேசித்து வலுவானஒருவரைப்பிரதம கொறடாவாக வேற்படுத்தவேண்டுமென்பதே எனது கருத்தாகும்.

போப்பிலி ராஜா.

பிறகு பேசியதாவது:—இச்சமயத்தில் நான் சில வார்த்தைகள் பேசவேண்டுமென்பதாக நீங்கள் எதிர்பார்க்கலாம். பிரமத கொறடாவிடம் நம்பிக்கையில்லையென இப்பொழுது பிரேரணை கட்சிப் பிரமுகர்களால் பிரேரிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டுமிருக்கிறது. சென்னை சட்ட சபையில் பிரதம கொறடாவின் வேலை திருப்திகரமாக விருக்கவில்லையென எனக்குச்சிறிது காலமாகவே புகார் வந்துகொண்டிருக்கிறது. கட்சியின் நன்மையை உத்தேசித்துக் கொறடாபதவியில் மாறுதல் ஏற்படவேண்டுமென்பது கட்சி அங்கத்தினர்களிடையே அபிப்பிராயமிருக்கிறதென்பதை நான் தயக்கமின்றிக் கூறக்கூடும். கட்சித்தலைவர் பதவியாகிய பொறுப்பு எனக் கேற்பட்டிருக்கிறது. எனது அனைத்தையும் கட்சிக் களித்திருக்கிறேனென்பது உங்களுக்குத் தெரிந்ததே. எனக்கும் செட்டிநாடு குமாரராஜாவுக்கும் எவ்விதச்சொந்தத் தகராறுமில்லை யென்பதை நான் தனியே எடுத்துக்கூறத் தேவையில்லை.

குமார ராஜாவின் கிரமமான காலம் முடிவடையுமுன்னர் அவர் மீண்டும் கார்ப்போரேஷன் அங்கத்தினராக நியமிக்கப்பட்டது. நான் வழியைவிட்டுப்போய்தான் குமாரராஜாவை நான் நியமித்தேனென்பதில் சந்தேகமில்லை. எனது செய்கைக்கான பூரணபொறுப்பையும் நான்ஏற்றுக்கொள்ளுகிறேன். எனது இலாகா நிர்வாகத்திலும் எனது பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் சொந்த நன்மையை நான் கவனிக்கவில்லை. குமாரராஜாவை மீண்டும் நியமித்ததனல் கட்சியின் நன்மைக்கெதிராக நான் நடக்கவில்லை யென்றும் நான் கூறுவேன். தேர்தல் முடிவுக்குப்பின் எனது செய்கை கட்சி நன்மைக்குக் காரணமாயிற்றுவென்பதுபற்றி நானொன்றும் கூறுவதற்கில்லை. சிறந்த நோக்கத்துடனேயே கட்சியின் நன்மையைக் கருதித்தான் நான் நடந்துகொள்ளுகிறேனென்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கொறடாவிடம் நம்பிக்கையில்லையென்பதானதீர்மானத்தைக்கொண்டு வரும்படியான நிர்ப்பந்தம் சில அங்கத்தினர்களுக்கேற்பட்டிருக்கிறது. கட்சி நன்மையையுத்தேசித்து இப்பதவியில் மாறுதலுண்டுபண்ணவேண்டுவது அவசியம் விரும்பத்தக்கதென்று அவர்கள் நினைப்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

இந்தியா சட்டசபைத் தேர்தலைப்பற்றிப் பிரஸ்தாபஞ் செய்யப்பட்டது. செட்டிநாடு ராஜா சந்தேகமற அளித்த ஆதரவில் ஸர். ஷண்முகஞ்செட்டியார் எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தாரென்பதும், கடைசியில் செட்டிநாட்டில் எவ்வளவு பலத்த ஏமாற்றமேற்பட் பட்டிருக்கிறதென்பதும் நீங்கள் அறிந்ததே. மொத்தத்தில் கட்சியின் மனதை யுணர்ந்த வரையில் கொறடா வேலையில் மாறுதலிருக்க வேண்டுமென்பதாகப்பலமான ஒரு எண்ண மிருக்கிறதென்று எனக்குத் தெரிகிறது. ஆகவே இப்பிரேரணையை நீங்கள் ஆதரிக்க வேண்டுமென்பதாகக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

கொறடாபதவியையும் நிர்வாக சபைத்தலைவர் பதவியையும் குமாரராஜா ராஜிநாமாச்செய்த பின்னர் இப்பிரேரணையின் மீது மேற்கொண்டு விவாதம் நடக்க வேண்டுமாவென்பது பற்றிச் சிறிது விவாதம் நடந்தது. ராஜிநாமாச் செய்து விட்டதாக குமாரராஜா கூறிவிட்டபடியால் அதை அங்கீகரிக்கலாமென்பதாக வெங்கடகிரி குமாரராஜா சொன்னர். இதை தோழர் எ. வி. பானேஜி ராவ் ஆதரித்தார்.

செட்டிநாடு குமாரராஜா கொறடா பதவியும், கட்சி நிர்வாக சபைத்தலைவர் பதவியையும், ராஜிநாமாச் செய்வதை அங்கீகரிப்பதான தீர்மானத்தை பொப்பிலி ராஜா ஓட்டுக்கு விட்டார். இது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

திவான் பகதூர் எ. அப்பாதுரைப்பிள்ளை கொறடாவாக விருப்பதென்ற பொப்பிலி ராஜாவின் யோசனை அங்கீகரிக்கப் பட்டது.

கமிஷியை நிர்மாணிப்பதுபற்றி சிறிது விவாதம் நடந்த பின் கூட்டம் கலைந்தது.

சு. மி. மொழிபெயர்ப்பு.

## கடன் குறைப்பு.

ஓசங்கா பாத்திலுள்ள ஒரு பிரபல மிராசுதாரரும் பாங்கருமாகிய தோழர் சேத்காசிராம் என்பவர் தனதுமூத்த சகோதரர் தோழர்சேத்நான் ஹெலால்ஜி அவர்கள் இறந்த ஞாபகார்த்தமாக தன்னுடைய லேவாதேவிக்காரர்களிடத்தில் ரூ 98,000 குறைத்திருப்பதாகவும், அத்துடன் இறந்தவரது உத்ரகிரியை சடங்கு சம்மந்தமாக லக்ஷம் ரூபாயிக்கு அதிகமாகவே தர்மம் செய்திருப்பதாகவும் அறிவிக்கிறார்.

## காலஞ்சென்றவி.தியாகராய முதலியார்.

காலஞ்சென்ற தோழர் வி. தியாகராய முதலியார் அவர்கட்கு ஈமவழிபாடு ஆற்றும் நாள்நாளது 16-12-34 ஞாயிற்றுக்கிழமை வாலாஜாபாத்தில் நடைபெறும். அது சமயம் தோழர்கள் வித்வான் பி. கண்ணப்ப முதலியார், மணிகோட்டீஸ்வர முதலியார், வித்வான் பி. எஸ். மாணிக்கவாசக முதலியார், எஸ். சச்சிதானந் தம்பிள்ளை டி. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் பேசுவார்கள்.

## சென்னை சட்டசபை உபதேர்தல்

சென்னை சட்ட சபையில் தோழர் சாமி வெங்கிடாசலம் செட்டியார் அவர்களால் ராஜிநாமாசெய்யப்பட்டஸ்தானத்திற்கு நாமினேசன் மெம்பர்கள் பதிவு செய்யப்பட்டன. காங்கிரஸ் சார்பாக டாக்டர் பி. எஸ். மல்லையா அவர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்சார்பாகதோழர் ஜி. முனிசாமி பிள்ளை அவர்களும் ஷை ஸ்தானத்தை அபேக்ஷித்து இருக்கிறார்கள். நாளைய தினம் நாமினேசன் மெம்பர்கள் பரிசீலனை செய்யப்படும்.

## மோதிரம் மாற்றுவது மூடநம்பிக்கை.

லண்டன் நகரத்தில் சமீபத்தில் நடந்த இரண்டொரு கல்யாணங்களில் மணமகன் மோதிரம் மாற்றிக் கொள்வது கூட மூடநம்பிக்கையில் சேர்ந்தது என்று கருதி மணவினையின் போது மணமகன் மோதிரம் மாற்றிக்கொள்ள சம்மதிக்க மாட்டேன் என்று சொல்லி விட்டாராம்.

"நாங்கள் ஒருவரை ஒருவர் வாழ்க்கைத்துணைவர்களாக ஏற்றுக் கொண்டோம். என்று சொல்லி இருவரும் கையொப்பமிட்டு பிறகு மோதிரம் மாற்றிக் கொள்வது எதற்காக" என்று அந்தமணமக்கள் கல்யாணப் பதிவுரிஜிஸ்டராரை கேட்டார்கள். அதன்மேல் கல்யாணப்பதிவுரிஜிஸ்டராரும்பாதிரியும் ஒன்றும் பேசாமல் கல்யாணத்தை பதிந்து கொண்டார்களாம். இந்த விஷயம் சென்ற வாரத்திய கிரானிக்கல் வாரப்பத்திரிகையில் காணப்படுவதுடன் தம்பதிகளின் உருவப் படங்களும் அதில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. நம நாட்டில் நடத்தும் சுயமரியாதைத்திருமணங்களில் தாலிகட்டவில்லையே என்று அழுவாரும் விளக்கு ப்பற்றவைக்கவில்லையேஎன்று அழுவாரும் சாணி உருண்டை பிடித்து வைத்து தேங்காய் பழம் உடைக்கவில்லையே என்று அழுவாரும், பார்ப்பான் காலில் விழுந்து அம்மிக்கல்லில் முட்டிக்கொள்ள வில்லையே என்று அழுவாரும் இதற்குஎன்னபதில்சொல்வார்கள் என்று அறிய ஆசைப்படுகின்றோம்,

ஆகவே இனி கல்யாணம் என்றால் ஒவ்வொருவரும் ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டியதை தான் முக்கிய காரியமாய் கருத வேண்டும். இதை விட ஜாக்கிரதையான முறையில் கல்யாணஞ்செய்து கொள்ளவேண்டுமானால் மணமக்கள் இருவருக்கும் டாக்டர் சர்டிகேட் பெற வேண்டும் ஆகிய இந்த இரண்டு காரியங்களைத் தவிர கல்யாணக் காரியத்தில் வேறு எந்தக் காரியமும் கலந்து கொள்ளாமலிருக்கும்படியாய்த்துக் கொள்ளுவதுதான் தற்கால நிலைமைக்கு ஏற்ற சுயமரியாதைக் கல்யாணமாகும்.

அந்தப்படி சகிக்காமல் "அதாவது வேண்டாமா? இதாவது வேண்டாமா?" என்று சொல்லிக்கொண்டு செய்யப்படும் கல்யாணங்கள் எதுவும் அஞ்ஞானக் கல்யாணமும், புராணமரியாதைக் கலியாண முமேயாகும் என்பது நமது அபிப்பிராயம்.

பந்துக்களையோ நண்பர்களையோ அழைப்பதும், அவர்களுக்கு மரியாதை செய்வதும் வீண்செலவு என்று சொல்லுகின்றோமே தவிர அவற்றை மூடநம்பிக்கை என்று சொல்ல வரவில்லை. ஆனாலும் அது ஆடம்பரங்களில் கொண்டுவந்து விட்டு கடைசியாக பணச்செலவு, நிரேகப்பிரயாசைகாலக்கேடு முதலியவைகளுக்கு அடிமையாக்கிவைத்து விடுகின்றதுடன் இந்த ஆடம்பரங்கள் மக்களை போட்டியில் கொண்டு வந்து விட்டு விடுகின்றது என்றே பயப்படுகின்றோம்.

## கொளும்பு.

### ஜனனம் குணசீலன்.

சுயமரியாதை சமதர்ம இயக்கத் தொண்டாற்றுபவரும் சிவந்திப்பட்டி பகுத்தறிவு வாலிபர் சங்கத்தலைவருமாகியதோழர் எஸ். வி. பாலகணபதி அவர்கள் துணைவி தோழர் மூக்கம்மாள் அவர்களுக்கு 1934-ஆம் அக்டோபர்மீ 26உ ஆண்மகவு ஜனனமானது 26வது நாள் திருநாமம். அழைப்பை முன்னிட்டு 10-11-34 சனிக்கிழமை இரவு 9-30 கொளும்பு ஆமத்தலையன் தோழர் ஆர். மோஜஸ் அவர்கள் இல்லத்தில் மேல்கண்டவிருந்துநடைபெற்றது. பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள். சில தோழர்களால் குணசிலனென்ற பெயருக்கு பரிசு வழங்கப்பட்டது. அவ்வமயம் விசேஷ கூட்டம். எஸ். வி. பாலகணபதி அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. பலர் பேசினர்கள். தலைவர்முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்தது. (இதைமுன்னிட்டு நமது பத்திரிகைக்கு தோழர் ஈ. வெ. பாலகணபதி அவர்களால் ஒரு ரூபாய் நன்கொடைகொடுக்கப்பட்டது.)

## நீடாமங்கலம் பஞ்சாயத்து போர்டு தேர்தல்.

8-11-34ல் நீடாமங்கலம் பஞ்சாயத்துப் போர்டுக்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு, ஷை போர்டின் கூட்டம் கூடிற்று. தோழர் ஏ. ஆறுமுகம் (மன்னார்குடி சுயமரியாதை மகாநாட்டு வரவேற்புத் தலைவரும், தாலூகா சுயமரியாதை சங்கத் தலைவருமாக இருப்பவர்) அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப் பெற்றார். எல்லா மெம்பர்களாலும் ஏகோபித்து தோழர் வி. ரெத்னம் பிள்ளை அவர்கள் உபதலைவராக ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## சனாதனிகள் கூட்டத்தில் சமதர்மகர்ஜனை.

### கேள்விகளுக்கு பதில் சொல்ல வாய்தா.

2-12-34ந் தேதி பகல் இரண்டு மணிக்கு தேவகோட்டை சனாதன இளைஞர்சங்கத்தின் சார்பாகடிப்டி இன்ஸ்பெக்டர் வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் தலைமையில் சீனிவாச வித்தியாசாலையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் இவ்வூர் சமதர்ம வாலிபசமாஜத்தின் காரியதரிசி தோழர் ரா. விஸ்வநாதன் அவர்கள், கடவுளும் மதமும் என்பது பற்றி ஓர் அரிய பிரசங்கம் செய்தார். அப்பொழுது பல கேள்விகள் சனாதனிகளுக்கு ரா. விஸ்வநாதன் அவர்கள் விடுத்ததற்கு சனாதனிகள் சார்பில் உபாத்தியாயர் எஸ். சுப்பிரமணியஅய்யர் அவர்கள் பதில் சொல்லுவதாக ஒப்புக்கொண்டு ஒருவாரம் தவணைகேட்டிருக்கிறார். கேள்விகளின் விபரம் பின் வருமாறு:—

(1) மனிதன் கடவுளை சிருஷ்டித்தானா? கடவுள் மனிதனை சிருஷ்டித்தாரா?

(2) கடவுள் எப்படி உலகத்தை சிருஷ்டித்தார்?

(3) எல்லோருக்கும் ஒரு கடவுளா? அல்லது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கடவுளா?

(4) இவ்வுலகம் ஒரே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதா? அல்லது பல கடவுள்களால் சிருஷ்டிக்கப்பட்டதா?

(5) அப்படி சிருஷ்டித்தது ஒரு தடவையா? அல்லது பல தடவையா?

(6) கடவுளுக்கு நாமரூப நிறங்கள் உண்டா?

(7) கடவுள் என்றால் என்ன?

(8) கடவுளுக்கு முன் வேதமா? அல்லது வேதத்திற்கு முன் கடவுளா?

(9) கடவுளைக்கண்டவர் யார்?

மதத்தைப்பற்றி கேட்கப்பட்ட கேள்விகளில்முக்கியமானவைகள்:—

(1) மதம்எப்பொழுது? யாரால்? எதற்காக உண்டாக்கப்பட்டது?

(2) மதத்தினால் மக்கள் அடைந்த நன்மை என்ன?

(3) மனித முன்னேற்றத்திற்கு மதம் அவசியம் தானா?

(4) மதத்திற்காகமனிதனா? மனிதனுக்காக மதமா?

(5) அறிவு பிரதானமா? மதம் பிரதானமா?

(6) மதத்தினால் அன்பு, ஜீவகாருண்யம் சகோதரத்துவம், உலகசமாதானம் இவைகளை நிறுவ முடியுமா?

(7) மதம் இல்லாவிடில்மனிதன் பிழைக்க முடியாதா?

(8) மதத்தின் மூலம் கடவுளைப் பார்க்க முடியுமா? அல்லது அறிய முடியுமா? அல்லது உணர முடியுமா? அல்லது ஆராய முடியுமா? அல்லது ஊகிக்கத்தான் முடியுமா?

(9) மதத்தில் இருக்கும் சட்டதிட்டங்கள் மனித சமூகத்திற்கு நன்மையபயக்கக்கூடியது தானா? அது விஞ்ஞானசாஸ்திரங்களுக்கு ஒத்தது தானா?

மேற்கண்ட கேள்விகளுக்கு பதில் சொல்லும் முறையில் எஸ். சுப்பிரமணயஅய்யரும் இன்னும் இதரர்களும் 10-12-34 ஞாயிற்றுக்கிழமையன்று உபந்நியாசம் நடைபெறு மென்றெரிய வருகிறது.

மேல்கண்ட கேள்விகளினால் சனாதனிகளிடையே பரபரப்பு உண்டாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

மேல்படி சனாதன இளைஞர் சங்கக்காரியதரிசி வி. ராஜகோபாலய்யர் அவர்கள் செய்த விஷமத்தனமானபத்திரிகைப் பிரசாரத்தை கண்டித்து கேள்விகள் ஷை சங்கத்தில் தோழர் சுப்பிரமண்யன் போன்றவர்களால்கேட்கப்பட்டது.

சனாதனிகள் கூட்டத்தில் சமதர்மிகள் பிரசாரம் செய்தது இதுவே முதல் தடவையாகும்.

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்

### நிர்வாகிகள் தேர்தல்.

ஷை இளைஞர் சார்பில் 9-12-34 ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு 65|66 நாட்டு பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள மன்றத்தின் காரியாலயத்தில் தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி. அவர்கள் தலைமையில் மூன்றாவதாண்டு (1934-35) நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கும் பொருட்டு வருடாந்திர அங்கத்தினர் பொதுக்கூட்டம் நடந்தது. பல தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

முதலில் ஒரு புகைப் படம் (போட்டோ) எடுக்கப்பட்டது. பிறகு சிற்றுண்டி விருந்து நடந்த பிறகு கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:—சி. டி. நாயகம்

துணைத் தலைவர்கள்:— எஸ். குஞ்சிதம், பி. ஏ. எல். டி., சே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்,

காரியதரிசி:—எம். எஸ். முத்து

பொக்கிஷதார்:— பி. சத்தியமூர்த்தி

நிர்வாக அங்கத்தினர்கள்.

தோழர்கள் எஸ். ரங்கநாதன், சி. தங்கராஜ், டி. சம்பந்தம், டி. ராதா கிருஷ்ணன், பி. என். குருசாமி, டி. என். ராமன்.

கடைசியாக காரியதரிசி தோழர் எம். எஸ். முத்து அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு மாலை 6மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது. என காரியதரிசி தோழர் எம். எஸ். முத்து எழுதுகிறார்.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

கர்களுக்கு, இந்தியாவில் தாழ்த்தப் பட்டவர்களது விஷயம் மிகப் பெரும் பிரச்னையாகத் தோன்றுகிறது. ஆனால், நீக்ரோக்களை அவர்கள் நடத்தும் விதம் அவ்வளவு முக்கியமல்ல. ராம்ஸே மாக்டனால்டு தொழிற் கட்சியைச் சார்ந்த பிரதம மந்திரியாக இருந்தபொழுது நிலத்தீர்வைகளைச் சுமத்தினார்.

ஆனால் அதே வரிகளை தேசீயப் பிரதம மந்திரியான ராம்ஸே மாக்டனால்டு ரத்து செய்தார். பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு சட்டசபையே இந்தியாவின் அரசியலமைப்பைத் தீர்மானிக்க வேண்டுமென்று காந்திஜி வற்புறுத்துகின்றார்; ஆனால்இந்திய சமஸ்தானப் பிரஜைகளுக்கு, அவர்களுடைய அரசியல் அந்தஸ்தை வரையறுப்பதில் பேச்சுரிமை கிடையாது. பகுத்தறிவுப் போக்கினால் ஏற்படும் பொருத்தமுடைய தன்மை அரசியல் வாதிகளிடையே மிக அபூர்வமானதாகையால், இதை அனுஷ்டான சாத்தியமற்றதென அவர்கள் பரிகசிக்கின்றார்கள்:—

அதாவது கடவுள், ஆத்மா, கர்மம், சுயேச்சை முதலிய விஷயங்களில் எந்த விதமான விவாதத்துக்கும் இடமேயில்லை. இத்தகையவிஷயங்களில் விரோதமான அபிப்பிராயங்கள் கொண்டிருப்பவரை சமீபகாலம் வரை உலகம் முழுவதிலுமே பல கொடுந் தீமைகளுக்குட்படுத்தி வந்தது.

இயன்றமட்டும் சகல விஷயங்களிலும் சுயேச்சையான அபிப்பிராயத்தைக் கொள்ளுவதே கடமையாகுமென நான் வற்புறுத்தி வந்திருக்கின்றேன். ஆனால், அதே சமயத்தில் இந்த உரிமை மற்றவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். தனக்கு மட்டும் உரிமை வேண்டுமென்று மற்றவர்கட்கு உரிமை மறுப்பவன் பகுத்தறிவு வாதியே அல்ல. தனது முடிவு பகுத்தறிவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதென ஒருவன் கருதினால், அதை அவன் கைக்கொள்வதற்கும், பரப்புவதற்கும் வசதியளிக்கப்படுகின்றதென்றும், எந்த விஷயத்திலும் சரியான முடிவு ஒன்றுமட்டுமே யிருக்க முடியுமென்றும், ஆதலால் தவறான கருத்தைப் பரப்ப இடமளிப்பதாகுமென்றும், எதிர்க்கக் கூடும். எந்த விஷயத்தின் மீதும் அதிக அக்கரை கொண்டுள்ளவர்களுக்கு இந்த உணர்ச்சி ஏற்படுவதுண்டு.

உண்மையான நாஜி யொருவன் தனது தேசத்தின் முன்னேற்றத்துக்குத் தனது கட்சியின் திட்டமே சரியான திட்டமென உறுதியாக நம்பிக்கொண்டிருக்கின்றான். ஆகையால், இதற்கு விரோதமான கொள்கைகளைப் பரப்புவதைத் தடுக்க சகல விதமான நடவடிக்கைகளையுங் கையாளச் சித்தமாகின்றான். இந்த விதமான போக்கானது விபரீதமானதாகும். எந்த வித அபிப்பிராயத்துக்கும் வருமுன், ஒரு சில உண்மைகளையே வைத்துக்கொண்டு அவற்றைக்கொண்டு ஒருவன் தனது தீர்ப்பை ஏற்படுத்துகின்றான். ஆனால் ஒருவனுக்கு சகல உண்மைகளையும் தெரிந்திருக்க முடியாது.

ஆகவே பொருத்தமான உண்மைகளை மட்டும் இயன்ற அளவு வைத்துக்கொண்டு பரிசீலனை செய்ய முடியும். மேலும் பொருத்த மற்றவையாகத்தோன்றும் விஷயங்கள் விஷயத்திற்குமிக சம்பந்தபட்டவையாக இருப்பதுண்டு. ஆகவே பயிற்சியுடைய ஒருவன் தான், தனது கற்பனா சக்தியால் பொருத்த முள்ளவை இவை, பொருத்த மற்றவை இவை யென ஒதுக்கமுடியும். ஆனால் சகல வழிகளிலும் பரிசீலனை செய்தாய் விட்டது என யாருக்கும் முற்றும் திட்டப்படுத்தி விட முடியாது. ஒரு பகுத்தறிவு வாதி இந்த நிலையோடு திருப்திப்பட்டு விட வேண்டியது; ஏனெனில் வேறு வழியில்லை. தங்களது பகுத்தறிவை முழுவதும் கைவிட்டு விட்டு, வெளியிலிருந்து யோசனை கர்த்தாக்களுடைய உதவியை நாடுபவர்களது விஷயம் வேறு. இதனால் தான் பெரும்பாலானவர்கள், பகுத்தறிவுக்கொள்கைகளையோ அல்லது மத விஷயத்தில் அதிக தாராளக்கொள்கைகளையோ உடையவர்களாயிருந்தும் ஒன்றில் முழு மௌட்டீகத்துக்கோ அல்லது மதகுரு, தீர்க்க தரிசி அல்லது சர்வாதிகாரியுடைய சிஷ்யர்களாக வோபோவதற்குக்காரணம் இதுதான் போலும். மற்றமிருகங்களுக்கும் தனக்கும் உள்ள வித்தியாசம் பகுத்தறிவு தான்என்றுகருதும்பகுத்தறிவு வாதி மேற்சொன்ன நிலைமையை அடைய முடியாது. ஏனெனில், மனிதவர்க்கத்தினுடைய முன்னேற்றத்துக்கு எண்ணத்தின் சுதந்திரம் மிகவும் அவசியமென அவன் கருதுகிறான்.

இதர அபிப்பிராயங்களுக்கும் ஒரு பகுத்தறிவு வாதிஇடங்கொடுக்கவேண்டுமென்பது மேற்சொன்னவற்றிலிருந்து விளங்கும். விவாதத்தின் மூலம் பிறரும் தனது கொள்கைகளை ஒப்புக்கொள்ளும் படி செய்வதும், மற்றவர்களுடைய வாதங்கள் பகுத்தறிவுக்குப் பொருத்தமானவையாகத் தோன்றும் பொழுது தனது கொள்கைகளைச் சீர்தூக்கிப்பார்ப்பதும் அவனது கடமையாகும். ஆனால் பலாத்காரமுறையினால் தனது கொள்கைகளைப் பிரசாரஞ் செய்ய இடமில்லை. சமீபகாலத்தில் இத்தகைய பலாத்காரப்பிரசாரம் நடை முறையில் வந்து கொண்டிருக்கிறது. ஜர்மனியில் பெரிய புத்தகசாலைகளிலுள்ள, நாஜிக் கொள்கைக்கு முரணான புத்தகங்களையெல்லாம் எடுத்துச் சுட்டு விட்டார்கள். அத்தகைய புத்தகங்களை வைத்திருப்பதே சட்ட விரோதமானதெனக் கொள்ளப்படுகிறது. எதிரிடையான கருத்துக்களை முளையிலேயே கொன்று விடுவதைப்போன்று கொடிய குற்றம் வேறில்லை யென்று தான் எனக்குத்தோன்றுகிறது. ஒரு நல்ல புத்தகத்தைக் கொல்வது ஒரு மனிதனையே கொல்வதற்கொப்பாகு மென மில்டன் கூறியுள்ளார். இத்தகைய செய்கையினால் நஷ்டமடைகிறவர்கள் ஜர்மனியர்தான். ஆனால், பழைய ஜர்மன் மேதாவிகளது நூல்களினாலேயே மனித சமூகம் அதிக முன்னேற்றம்அடைந்திருக்கிறது.ஆகவே, இதனால் மனித சமூகத்துக்கும் பெரு நஷ்டந்தான் என்பதில் ஐயமில்லை. புதிய கருத்துக்கள் முதலில் ஒரு சிலருடைய மனதில் தான் கிளம்பும் இவை பரவுவதற்கு நெடுங்காலம் பிடிக்கும். இவற்றில் சில வேரூன்றிமனிதசமூகத்திற்கு நன்மைபயக்கும். இத்தகைய சிறந்த கருத்துக்கள் பண்டைக்காலத்தில் இம்மாதிரி முளையிலேயே கிள்ளப்பட்டதால் பல நூற்றாண்டுகளாக மனித முன்னேற்றம் தடைப்பட்டது. அச்சிடும் முறையை 600 வருஷங்கட்கு முன் முளையிலேயே கொன்றிருந்தால் எவ்வாறு இருக்குமென்பதைக்கவனியுங்கள்.குளோரபாரத்(மயக்க மருந்து) தை உபயோகிப்பது கூட மதவிரோதமெனக் கருதினார்கள். ஏனெனில், இவ்வுலகில் மனிதன் துன்பம் அனுபவிக்கவே பிறந்திருக்கின்றானென்றும், துன்பத்தை நீக்க முயற்சிப்பது கடவுளின் கட்டளையை மீறுவதாகு மென்றும் கருதப்பட்டது. புதுக்கருத்துக்களை முளையிலேயே கொன்றிருந்தால் விஞ்ஞானத்திலோ, மருந்திலோ புதிய விஷயங்களெதுவும் கண்டுபிடித்திருக்க முடியாது.

(தொடரும்)

(4ம் பக்கத்தொடர்ச்சி)

எந்த மறுப்பவரை கடவுள் தண்டிப்பார்.

ச. வா:—ஆனால் சுவிசேஷத்தைப் படித்திராதவர்களுக்கு, அதன் மகத்துவத்தை அறிவிக்கும் பொருட்டு உங்கள் சர்ச்சும், மற்றும் பல கிறிஸ்தவ சர்ச்சுகளும் பிரசாரகர்களை அனுப்பவில்லையா?

கி. பா:—ஆம். நமது மதப்பிரசாரகர்களின் வேலை புனிதமானதாகும்.

ச. வா:—எங்ஙனமேனும் தப்பிச் செல்பவர்களுக்கு இழிவை உண்டு பண்ணும் சந்தர்ப்பத்தை அதனால் அவர்கள் கையாள வில்லையா?

இச்சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவ பாதிரி நம்பிக்கையை இழந்து மெதுவா கக்கம்பி நீட்டினர்.

(குறிப்பு:— மேலே கொடுத்துள்ள சம்பாஷணை தோழர் பிராட்லாவுக்கும், கிறிஸ்தவ பாதிரிகளுக்கும் நடந்ததாகும். அதிலிருந்து மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள. மதத்தரகர்களின் இறுமாப்பும், நேர்மையற்ற தன்மையும், மூட நம்பிக்கையும் மேற்கூறிய சம்பாஷணையை ஆழ்ந்து படிப்போருக்கு நன்கு விளங்கும். மக்கள் நலத்திற்காகவே உலகில் தோன்றியிருப்பதாகக் கூறிக்கொள்ளும் சோம்பேறிகள் எங்ஙனம் மக்களை ஏமாற்றுகிறார்களென்பது பொது ஜனங்களுக்கு நன்கு தெரிய வேண்டும். அதற்கு மக்கள் மதங்களின் யோக்கியதைகளை தெளிவாக உணர வேண்டும். பிரபல மதங்களாகிய இந்து மதம், இஸ்லாம் மதம், கிறிஸ்தவ மதம் ஆகியவைகளின் பித்தலாட்டங்களையும், சூழ்ச்சிகளையும், குறைபாடுகளையும் மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு பல புத்தம் புது புத்தகங்களும், கட்டுரைகளும், துண்டுப்பிரசுரங்களும் வெளிவரவேண்டும். மக்கள் உள்ளத்தில் பலமாக வேரூன்றியிருக்கும் மத வேர்கள் கல்லி எறியப்பட வேண்டுமாயின் இடைவிடாது பிரசாரம் செய்ய வேண்டும். மரணத்தை மகிழ்வுடன் வரவேற்கும் இளைஞர்கள் அப்பணியை ஏற்க வேண்டும். நாஸ்திகத் தீ நாடு முழுதும் கொழுந்து விட்டெரிய வேண்டும். மக்களைப் பீடித்துள்ள அறியாமை, அச்சம், ஐயம், மத வெறி, ஜாதித்திமிர், கடவுள் பித்து முதலியன பகுத்தறிவைக்கண்டு பறந்தோட வேண்டும். மக்களனைவரும் சமம் என்னும் உணர்ச்சி நாட்டில் பரவ வேண்டும். எங்கும் இன்பமும், மனச்சாந்தியும் குடிகொள்ள வேண்டும். கடவுள்—மதம் முதலிய தொத்து நோயால் நிமிடந்தோறும்-மடியும் மக்கள் காக்கப்பட வேண்டும். அத்தொத்து நோயை நீக்கும் மருந்து எது? அதுதான் நாஸ்திகம்.

தோழர்களே! ஆழ்ந்த நித்திரையிருந்து விரைவில் துயிலெழுங்கள். உங்களைச் சூழ்ந்துள்ள பேய்களாகிய கடவுள்—மதம் முதலியவற்றைச் சுட்டெரியுங்கள். மனிதனாக உலகில் வாழுங்கள்—மனிதனாக மடியுங்கள். நாஸ்திகம்—அல்லது—மரணம் என்னும் முடிவுடன் போராடுங்கள். எடுத்த காரியம் யாவினும் வெற்றிதான்!)

ஒழிக கடவுள் வெறி!
ஓங்குக நாஸ்திகம்!!

## பெரியகுளம் தாலூகா கம்ம வாலிபர் மகாநாடு, நாகலாபுரம்.

பெரியகுளம் தாலூகா கண்டமநாயக்கனூர் நாகலாபுரத்தில் 28-11-34ல், பெரிய குளம் கம்ம வாலிபர் மகாநாட்டின் முதலாவது ஆலோசனைக் கூட்டமும் காரியக் கமிட்டிக் கூட்டமும் பிரசாரக் கூட்டமும் நடைபெற்றது. இதில் பெண் மக்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டத்திற்கு பாரதி ஆசிரியர் தோழர் ரா. நாராயணசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் முகவுரையாக மகாநாட்டின் அவசியத்தைப் பற்றிக் கூறினார்கள் பின் பலர் பல விஷயங்களைப் பற்றிப் பேசிய பின் தலைவர் முடிவுரை கூற வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

தை நன்றாவிளக்கிற்று. அவர்களில் மிகப் பெரிய கியாதி பெற்றவர்களையெல்லாம் அதில் கையெழுத்துப் போடும்படி கேட்டிருப்பார்கள்என்று நாம் நிச்சயிக்கலாம். அவர்கள் ஏன் கையெழுத்திட மறுத்தார்கள் என்பதைப்பற்றி வேறு புத்தகத்தில் பேசுவோம்.

ஆதிகர்த்தா கொள்கையினர் இவ்விளம்பரத்தை வெறுத்தார்கள். அவர்கள் வெறுத்தது ஒரு வாறு சரியானது தான். விஞ்ஞானிமதம் ஆதிகர்த்தா கொள்கையினர் மதத்திற்கு வித்தியாசப் பட்டிருக்கையில், விஞ்ஞானம் மதத்திற்கு ஒத்திருக்கிறது என்று ஆதிகர்த்தா கொள்கையினருக்கு உறுதி சொல்வதில் என்ன பலன்? உலகத்திலுள்ள எந்த விஞ்ஞானியும் "ஜீனிஸிஸ்" என்னும் முதல் புத்தக விஷயம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறது என்று ஒப்புக்கொள்ள மாட்டான். ஆயினும் புஸ்தகம் ருசியுள்ளதாகத்தானிருக்கிறது. கிறிஸ்து மதம் விஞ்ஞானத்திற்குப் பொருந்தத் தயாரிக்கப்பட்டிருப்பதாக நம்பப்பட்டது.

இந்த அமெரிக்கா விஞ்ஞானிகள் சரியாக எதை மதம் என்று கொண்டிருக்கிறார்களோ யாரும் அறியார்கள். புரொபசர் ஆஸ்பர்ன் தான் கிறிஸ்தவன் என்கிறார். புரொபசர் பூப்பின் தான் செர்வியன் வைதீகக் கோவிலைச் சேர்ந்தவனாகக்கூறுகிறார். இதனால் அவர்கள் கிறிஸ்துவின் அற்புத ஜனனத்தையும், சமாதான மரணத்தையும், அவர் மறுபடி உயிர்த்தெழுந்ததையும் ஒத்துக்கொள்ளுகிறவர்களாவார்களா? ஒருக்காலும் ஆகார்கள்.

விஞ்ஞானம் கிறிஸ்துவின் நீதிக்கு ஒத்திருக்கிறது என்று ஜனங்களுக்குச் சொல்லுவதில் என்ன பலன்? இயற்கையாகவே விஞ்ஞானத்திற்கு அதில் வேலையில்லை. ஆதிகர்த்தா கொள்கையினர் தங்களை இவர்கள் ஏமாற்றமுயற்சிப்பதாகச்சந்தேகிக்கிறார்கள். அவர்கள் உண்மையில் பேருக்குத்தான் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று நினைக்கிறார்கள். அவர்களை மனிதர்கள் மதப்பற்றுள்ள கிறிஸ்தவர்கள் என்று நினைக்க வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள். ஆதி கர்த்தா கொள்கையினர் நினைப்பதில் பிசகு இருக்கிறது என்றுநான் நிச்சயமாய்க்கூற மாட்டேன்.

ஒருவன் கிறிஸ்துவின் நீதியைஒப்புக்கொண்டு விட்டதனால் மட்டும்கிறிஸ்தவனாகிவிடமாட்டான். கிறிஸ்துவுக்கு மட்டும் பிரத்தியேகமான எந்த ஒழுக்கமும் கிடையாது. கிறிஸ்து மதம் மறைந்து நாஸ்திகம் வருவதானாலும், கிறிஸ்து மதக்கோட்பாடுகள் புதிய கொள்கைக்கு ஒத்துப்போக முயற்சி செய்யப்பட்டாலன்றி அது பூர்த்தியாகாது. இந்த நவீனம் மதத்தைக் காப்பாற்றிவிடுமோ? மதக்கொள்கைகளுக்குப் புதிய அர்த்தம் கற்பித்து அவைகளைப் படிக்கும்படி அனுமதித்து விட்டால் மறுபடியும் லட்சக்கணக்கானவர்களை கிறிஸ்து மதத்தில் சேர்க்க முடியுமா?

இதற்கு முன் நடந்திருப்பதையெல்லாம் கவனித்து நாம் முடிவு செய்ய வேண்டும். வார்த்தைகளின் புது அர்த்தத்தால் நவீனம் பைபிளைத் தெய்வீக நூலாகக்கருதுகிறது. பழைய ஏற்பாட்டின் ஆதி அத்தியாயங்கள் பேபிலோனியர்களிடமிருந்து நேராகவோ மறைவாகவோ கடன் வாங்கப்பட்ட கட்டுக்கதைகளேயென அது ஒப்புக்கொள்ளுகிறது. டியுடெரோனோமி, அரசர்கள், நீதிபதிகள் முதலியவர்களைப் பற்றி எழுதப்பட்ட கற்பனா சரித்திரங்கள் பிழைகள் நிறைந்தனவென்றும் அது ஒப்புக்கொள்ளுகிறது. விஞ்ஞானத்தையும் கற்பிப்பது பைபிளின் வேலையல்லவென்பதை அது ஒப்புக்கொள்ளுகிறது. கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முந்தி பழைய ஏற்பாடு தொகுக்கப்பட்டது என்றும் அது கட்டுக்கதைகள் நிறைந்தது என்றும் அது ஒப்புக்கொள்ளுகிறது. தீர்க்கதரிசனங்கள் தீர்க்க தரிசனங்களாக இருந்ததில்லையென்றும், அற்புதங்கள் அற்புதங்களாயிருக்கவில்லை யென்றும், அது கூறுகிறது. புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் மரணத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகே எழுதப்பட்டதாக அது ஒத்துக்கொள்ளுகிறது. அதை ஒரு சரித்திரக்காரன் உண்மையானதாக மதிக்கமாட்டான் என்றும் அது ஒத்துக்கொள்ளுகிறது.

நம் தற்கால தலை முறையை நாம் ஏளனம் செய்ய முடியாது. நம்மை யதார்த்தமாக இருக்கும்படி கற்பிக்க விரும்புகிறவர்கள் எளிய ஆங்கிலத்தில் விஷயங்களை விளக்க வேண்டும். ஆதாம் ஏவாளைப் பற்றியும், ஈடன் தோட்டத்தைப் பற்றியும், வீழ்ச்சியைப்பற்றியும், பிரளயத்தைப் பற்றியும், உள்ள விஷயங்கள் வேண்டாம் என்று சொல்லப்படுகிறது. ஆதிபாவம் என்பதும் பிராயச் சித்தம் என்பதும் என்னவென்று எளிய ஆங்கிலத்தில் விளக்கப்பட வேண்டும். ஆதாமோடே எல்லாரும் இறந்தார்கள் என்றால் எல்லாமனிதர்களும் கிறிஸ்துவால் விடுதலை பெறவில்லை. புதிய ஏற்பாடு கிறிஸ்து மரணத்திற்குப் பின் எழுதப்பட்டதென்றால், கிறிஸ்து தன் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை நாம் நம்ப நியாயமில்லை.

கிறிஸ்து மதம் மறைந்துவிட வேண்டுமென்று நாம் நினைப்பதால் நம் நிலைமை எப்படி யிருக்கிறதென்பதைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். சில மதப் பிரசாரகர்கள் இவ் விஷயங்களை விட்டு விட்டதாகச் சொல்லுகிறார்கள். பாதிரிகளையும் வழக்கங்களையும் அதை விளக்கும்படி கேட்டால் அவர்கள் வருத்தத்துடன் விளங்கா வார்த்தைகளைச் சொல்லிவிட்டுச் சும்மா இருந்து விடுகிறார்கள். அது தற்காலிகச் சிறிய தந்திரம் தான். அவர்கள் அழுத்தமாகக் கூறுவதில்லை. ராஜ தந்திரம் ஏதேச்சாதிகாரத்திற்கும், விடுதலைக்கும் இடையே யுள்ளது. இவ் விஷயங்களைப் பற்றிப் பேச சீக்கிரமே சுதந்தரம் பெறுவோம். அப்போது கிறிஸ்து மதம் காப்பாற்றப்படும்.

சுவர்க்கம் அல்லது நரகம், பிராயச்சித்தம் அல்லது உயிர்த்தெழுதல் கன்னிப்பிரசவம் அல்லது அற்புதங்கள், கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மை முதலியவைகளில்லாத கிறிஸ்து மதத்தைப்பார்ப்போம். அது ஒழுக்க அபிவிருத்தி ஸ்தாபனமாகும். இங்கு கிறிஸ்துவின் சம்பந்தம் மிகவும் குறைவு.

இவைகளைப் பார்க்கும்போது கிறிஸ்து மதம் மறைந்ததுபோலத் தோன்றுகிறது. ஆனால் நாம் உண்மையை மறைக்கக் கூடாது. ஒழுக்க விதிகளும், கடவுளும், ஒரு தீர்க்கதரிசியும் மீந்திருக்கும். தீர்க்கதரிசி கிறிஸ்துவானபடியால் அது கிறிஸ்து மதமென்றே சொல்லப்படும். ஆனால் அது பலமுடையதாயிருக்குமா? இனி வரும் காலத்தில் நம்முடைய துஷ்ட ஜனங்களால் என்ன சாதிக்க முடியுமென்பதைப் பற்றி நான் நினைக்கவில்லை. விஞ்ஞானம், சரித்திரம் சமுதாய நூல், தத்துவ சாஸ்திரம் முதலியவைகளும், பெரும்பாலான படிப்பாளிகளால் அங்கீகரிக்கப்பட்ட விஷயங்களும் என்ன கற்பிக்கும் என்று தான் நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

புதிய கிறிஸ்து மதத்தின் ஒவ்வொருவரியும், ஒவ்வொரு வார்த்தையும் பழைய மதத்தைப்போலவே விவகாரத்திற்குறியதாகவே இருக்கிறது. நீதிச் சட்டங்கள் விவாதிக்கப்படுகின்றன. தற்காலத்தவர்கள் அசல் கிறிஸ்துமத விஷயங்களாகத் தோன்றுகிறவைகளை யெல்லாம் மறுக்கிறார்கள். ஒரு கன்னத்தில் அடிப்பவருக்கு மறு கன்னத்தைக் காட்டல், பகைவர்களை நேசித்தல், ஏழைகளுக்குத் தானஞ் செய்தல், முதலியவை கிறிஸ்து மதத்திற்கே உரிய உபதேசமல்ல. மற்ற விஷயங்களும் கிறிஸ்து மதம் சம்பந்தமற்றே இருக்கின்றன.

அவைகளில் அநேகம் ஒப்புக்கொள்ளப்பட்டதில்லை, இனியும் பொதுவாய் ஒப்புக்கொள்ளப்படாது. இதுவரையில் ஜனங்கள் காதல், பாவம் சம்பந்தமான கிறிஸ்தவச் சட்டங்களை அங்கீகரித்ததுபோலப் பாவனை செய்திருக்கிறார்கள். அப் பாவத்திற்கு வாக்கால் மன்னிப்புக் கேட்காவிட்டால் அது குற்றமாகக் கருதப்பட்டது. அதை இப்போது பகிரங்கமாய் எதிர்க்கிறார்கள். கிறிஸ்தவர்கள் தொகையில் பாதிக்கதிகமானவர்களும், மிகுந்த செல்வாக்குடைய நூலாசிரியர்களும், நமது காலத்துக் கலைஞர்களும் அதை மறுக்கிறார்கள். இனியும் அதை யாரும் ஒத்துக்கொள்ளப் போவதில்லை. தற்காலத்தவர் ஒவ்வொருவரும் அறிந்தே யிருக்கிறார்கள்.

பின்பு தீர்க்கதரிசி கிறிஸ்து இருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவர் எப்போதாவது இருந்தாராவென்றே தற்கால இலக்கிய ஆராய்ச்சியில் சந்தேகம் தோன்றியிருக்கிறது. ஒருவேளை அவர் இருந்திருக்கலாமென்றும் நான் நினைக்கிறேன். ஆனால் அது பெரிய சரித்திர சம்பந்தமான தீர்மானம். அதை யாரும் ருசுப்படுத்த முடியாது.

எப்படி யிருந்தாலும் இருபதாவது நூற்றாண்டிலுள்ள நான் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்த கலிலியோவின் அபிப்பிராயங்களை ஏன் கேட்க வேண்டும்? கோடானகோடி வருஷங்களான கிரகங்களின் ஆயுள் நம்முன் இருந்து வருவதாக நம்பும் நாம், உலகத்தின் முடிவு காலம் நெருங்கி விட்டதாக நினைக்கும் ஒரு தீர்க்கதரிசியின் சமுதாய உதவியை நாம் ஏன் நாடவேண்டும்? நமது தலைமுறையினர் கேட்பது அது தான். இத்தகைய பலமற்ற அஸ்திவாரத்தின் மேல் கிறிஸ்து மதம் உலகத்தை ஜெயித்து விடும் என்ற பெரிய நம்பிக்கை நிலைக்க முடியாது.

புதிய கிறிஸ்து மதத்தின் மற்றொருமுக்கியமான விஷயம்கடவுளைப்பற்றியது. அதுமற்றெல்லாவிஷயங்களையும் விடமிகுந்த விவகாரத்திற்குரியது.இதையே ஒரு முடிந்த கருத்தாகக் கொள்ள வேண்டாம். நான் தற்கால உலகத்தைப்பற்றிப் பேசுகிறேன். அதன் கருத்துகளையும் பழக்கங்களையும் கடிதத்தில் எழுதுகிறேன். அப்படிச் செய்தால் கிறிஸ்து மதம் அவைகளை வென்று உயிருடன் இருக்க என்ன நம்பிக்கையைக் கொள்ளும் என்பதைக் காண்போம். எல்லா மதத்திலும் கடவுள் விஷயம் மிகுந்த விவகாரத்திற்குட்பட்டது. தத்துவ சாஸ்திரிகள், அதைப்பற்றிய முதிர்ந்த ஞானமுடையவர்கள், ஆகிய எல்லாரும், நாம் எந்த விதமான கடவுளை நம்பவேண்டும். ஏன் அப்படி நம்பவேண்டும் என்று எழுந்த பிரச்சினையால் தம்முள் மிகவும் மாறுபட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நம்ப மறுக்கிறார்கள்.

மேலும் இவ்விடத்தில் விஞ்ஞானம் சரித்திரம் முதலியவைகளின் முழுத்தத்துவங்களையும் தெரிந்துகொள்ளுகிறோம்.

விஞ்ஞானம் சரித்திரம் முதலியவைகளின் முழு நெருக்கடி என்று நான் சொல்லவில்லை. விஞ்ஞானத்திற்கோ, சரித்திரத்திற்கோ கடவுளைப்பற்றிப் பேச வேண்டிய வேலையில்லை. அநேக விஞ்ஞானிகள் ஆதிகர்த்தா கொள்கையினரைப் போலவே ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். அவர்கள் விஞ்ஞானம் மதத்திற்கு மாறுபட்டதல்லவென்று வெகு டம்பமாய்க் கூறுகிறார்கள், விஞ்ஞானத்தைப் பிரபலப்படுத்த வேண்டுமென்கிறவர்களும், விஞ்ஞானத்தை அர்த்தமின்றிப் பின் பற்றுகிறவர்களும்தான்

அப்படிச் சொல்லுகிறார்கள் என்று அவர்கள் சில சமயங்களில் கூட்டிக் கூறுகிறார்கள். ஆனால் மதப்பிரசாரகர்களுக்கு விஞ்ஞானத்தைப் பற்றிப் பேச உரிமை இல்லாதது போல நல்ல மனிதர்களுக்கு மதத்தைப்பற்றிப் பேச உரிமையில்லை. மதப்பிரசங்கி விஞ்ஞானத்தை அறிந்திருக்கும் குறைந்த அளவே அவர்களும் மதத்தைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். மற்றவர்களைப் போலவே அவர்களும் தாங்கள் மதப்பற்றுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளஉரிமையுடையவர்கள்தான். ஆனால் அவர்கள் அதைப் படித்திருப்பதற்குச் சாட்சியம் ஒன்றுமில்லாததால் விஷயம் ருசுப்படுவதில்லை. ஒவ்வொருவரும் மதப்பற்றுள்ளவராயிருக்க வேண்டுமென்று சொல்லப் புகுந்தால் அது முரட்டுத்தனமேயாகும். நான் மதத்தைப் பூரணமாகவும், முறையாகவும் படித்தறிய பல மாதங்கள் செலவு செய்தேன். புரொபசர் ஆஸ்பர்ன், புரொபசர் மில்லிகன், புரொபசர் பூப்பின், ஆகியவர்கள் சில மணி நேரங்களே அதற்காகச் செலவு செய்தார்கள்.

இவர்கள் விஞ்ஞானம் மதத்திற்கு விரோதமானதல்லவென்று சொன்னால், இவர்கள் தவறு செய்தவர்களாகிறார்கள். ஏனென்றால் இந்த விஞ்ஞானிகள் விஞ்ஞானம் மதத்திற்குச் சம்பந்தப்பட்டதல்ல வென்கிறார்கள். ஆயினும் விஞ்ஞானத்தால் அறியப்பட்ட விஷயங்கள் மத நம்பிக்கைகளுக்கு ஒத்தே இருக்கின்றன வென்னும் அபிப்பிராயத்தை அவர்கள் வெளியிடுகின்றார்கள். அதுவிஷயத்தில் அவர்களுக்கு ஒன்றும் அதிகாரமில்லை. மதப்பிரசங்கிக்கு விஞ்ஞானத்தில் எவ்வளவு தெரியுமோ அவ்வளவே விஞ்ஞானிக்கும் மதவிஷயந்தெரியும்.

விஞ்ஞானம் கடவுள் சம்பந்தமானதல்ல. அது நித்தியத்தைப்பற்றியதுமல்ல. மனிதனுடைய பரிணமமும், அவன் வாழ்க்கையின் பரிணமமும் விஞ்ஞானத்தில் சம்பந்தப்பட்டதா வென்பது பெரியவர்களின் கேள்வி. விஞ்ஞானிகளில் பெரும்பான்மையோர் அங்ஙனம் நினைக்கவில்லை. ஆனால் அவ்விஷயம் ஒவ்வொருவராலும் தனக்குத்தானே முடிவு செய்து கொள்ளப்படத் தக்கது. அதைப்பற்றிப் பிறகு பேசுவோம். மனிதனுடைய சரித்திரமும், அவனுடைய வாழ்க்கைச் சரித்திரமும் பயங்கரமானவையாயும், மூர்க்கத்தனமுள்ளவையாயும், மிகுந்த தவறுள்ளவையாயும், இரத்தமும் கண்ணீரும் பட்ட கறையுள்ளவையாயுமிருப்பதின் காரணமாகக் கடவுளின் நம்பிக்கை கன்னிப்பிரசவ நம்பிக்கையை விட அதிகமான விவகாரத்திற்குரியதாக இருக்கிறது. ஆயிரம் மக்களில் 999 பேர் எந்த நியாயங்களின் பேரில் கடவுளை நம்புகிறார்களோ, அந்த நியாயங்களை நவீன தத்துவ சாஸ்திரம் பொதுவாய் மறுக்கிறது. (தொடரும்)

## சேலம்ஜில்லா ஓமலூர் தாலுக்கா ஆதிதிராவிட மாணவர் சங்கம்.

2-12-34 மாலை 1மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட ஷை கூட்டமானது தாரமங்கலம்போர்டுஹையர் எலிமெண்டரிபாடசாலைக் கட்டிடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் ஓமலூர் ரேஞ்சு ஸ்கூல்களின் டிப்டி இன்ஸ்பெக்டர் தோழர் ஆர். வைத்தியநாதஅய்யர்பி. ஏ. எல். டி.சங்கத்தைத்திறந்துவைத்தார். சேலம்ஜில்லா கல்விசபைதலைவரும் ஜில்லாபோர்டு மெம்பருமான தோழர் ராவ்சாஹிப் எஸ். பி.ராஜமாணிக்கபண்டாரம் அவர்கள் தலைமைவகித்தார்கள். கூட்டத்திற்கு அநேக ஆசிரியர்களும் பெரியோர்களும்மாணவர்களும்வந்திருந்தனர். தலைவர்களுக்கு அவர்களால் வரவேற்புபத்திரம் வாசிக்கப்பட்டது. அதன் பின் திறப்பாளர் ஆர். வைத்திய நாதய்யர் அவர்கள் பேசியதாவது:—

மாணவர்களே, பெரியோர்களே நீங்கள் எனக்கு அளித்த உபசாரத்திற்கு நன்றி உள்ளவனுக இருக்கிறேன் அதில் பொதுபாடசாலைகளில் சேர்ப்பதில்லை யென்றும், பறையன் என்ற இழிவைக் கொண்டு தனிப்பட ஒதுக்கிவைக்கிறார்கள் என்றும் முறையிட்டுள்ளீர்கள் அதை கேட்கும் போதே மனம் துடிக்கின்றது. இன்னும் இத்தாலூகாவில் அந்த கஷ்டம் இருந்து வருகிற தென்பதை யறிந்து விசனிக்கிறேன். நான் இங்கு வந்த 1 வருஷ காலத்தில் உங்களுக்காகச் செய்துகொண்டிருக்கும் வேலைகள் உங்களுக்கும், உங்கள் தலைவர்களுக்கும் தெரியுமென நினைக்கிறேன் நான் பார்வையிடும் ஒவ்வொரு பாடசாலையிலும்உங்கள்பிள்ளைகளைத் தான் முதலில் பரீக்ஷிக்கிறேன். இல்லையேல் சேரிக்கு சென்று பிள்ளைகளை அழைத்து வந்து சேர்த்தும் வருகிறேன். சேடப்பட்டி பாடசாலையில் நடந்த சம்பவங்களைப்பார்த்தால் உங்களுக்குஉண்மை விளங்கும். சர்க்கார் அமைத்திருக்கும் விதிப்பிரகாரம் எந்த பாடசாலைகளிலும் உங்களை சேர்க்க வேண்டுமென்றும், அப்படி சேர்க்காத பாடசாலைகளை உங்கள் தெருக்களுக்கு மாற்றிக்கொடுக்கும் படிக்கும் சிபார்சு செய்து வருகிறேன். மாணவர்களாகிய உங்களுக்கு ஏற்படும் குறைகளைப்பற்றி உங்கள் தலைவர் எ. சின்னசாமி அவர்கள் மூலமாகவோ அல்லது நேராகவோ தெரிவித்தால் உங்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய சித்தமாயிருக்கிறேன் எனப் பேசிமுடித்தார். அதன் பின் தலைவர் அவர்கள் பேசியதாவது:—

உங்கள் வேண்டுகோளின்படி உங்களை பார்க்க நேர்ந்தது எனது பாக்கியமே. நீங்கள்வாசித்துக்கொடுத்த வரவேற்புப் பத்திரத்திற்காக வந்தனமளிக்கிறேன்.

இன்று மாணவர்கள் என்றுஅழைக்கப்படும் நீங்கள் சர்க்கார் அதிகாரிகாரிகளாகவும் ஓர் காலத்தில் அரசராக ஆனாலும் ஆகலாம். இதற்கு கல்வியே அஸ்திவாரமாகும். நான் தாலூக்காபோர்டு பிரசிடெண்டாயிருந்த காலத்தும், ஆதிதிராவிட ஆரம்பக்கல்விக்காக அரும்பாடு பட்டிருக்கிறேன். நீங்கள்என்னைக் கேட்காமலேநானே உங்களுக்கென வேலை செய்து உங்களை முன்னுக்குக் கொண்டுவர பூரண எண்ணமுடையவனாயிருக்கிறேன்.

இக் காலத்தில் சர்க்கார் அதிகாரிகளும் அநேக தலைவர்களும் உங்களுக்காகப் பாடுபட்டு வருகிற இச்சமயத்திலேயே நீங்கள் முன்னுக்கு வர பிரயத்தனம் செய்துகொள்ளவேண்டியது உங்கள் கடமை எனப் பேசி முடித்தார்.

அதன் பின், சேடப்பட்டி ஸ்கூல் மாஸ்டர் பி. வீரய்யா அவர்கள் சுகாதாரம் என்பதுபற்றி பேசினார். அதன் பின் தாழ்த்தப்பட்டார் தலைவரும், பஞ்சாயத்து ஸ்கூல்களின் ஹானரெரிவிசிட்டரும், சப் ஜெயில் விசிட்டருமான தோழர் எ. சின்னசாமி அவர்களுக்கு ஷை மாணவர்களால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பெற்று அவர் சமூக முன்னேற்றத்தைப் பற்றி விரிவாகப் பேசினார். பின்னர் ஆதிதிராவிட ஆரம்பக் கல்வி முன்னேற்றத்தைக் கருதி 13 தீர்மானங்கள் ஏக மனதாய் தீர்மானிக்கப்பட்டு மாலை 5மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது என தோழர் எஸ். சித்தன் எழுதுகிறார்.

---

## உத்தமபாளையம் பஞ்சாயத்து போர்டு மீட்டிங்கு

ஆதி-இந்துவுக்கு அநுதாபம்.

29-11-34ந் தேதி போர்டு மீட்டிங் குஹாலில் பிரஸிடெண்டு, ஜனாப். செ. முகமது மீரான்ராவுத்தரவர்கள் தலைமையில் கூடியது.

இந்நகரில் சிசுசுகவாரம் நடத்துவதற்கு மெம்பர்களில் ஐவரைகமிட்டியாக நியமித்தும், அதன் சிலவுக்கு ரூபாய் நூறு சாங்ஷன் செய்தும், சமீபத்தில் காலஞ்சென்ற மாஜி மெம்பர் தோழர் க. பெருமாள் மாதாரிஅவர்களின் அகால மரணத்தைப்பற்றி அநுதாப தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---


## சிறுவர் அறிவுக்கதிர்

வெளியாகி விட்டது.

பாடசாலை மாணவர் மாணவிகளுக்கு ஒரு சிறந்த மாதாந்தரப் பத்திரிகை.

வருஷசந்தா உள் நாடு 0-10-0

" வெளி நாடு 1-0-0

K. J. வேதமுத்து,
தமிழ்ப் பண்டிதர் L. M.
போதனு முறைப் பாடசாலை
ஈரோடு S. I. R.



## மணமகள் தேவை.

25, வயதுடையவரும், பாண்டிய வேளாளர் வகுப்பைச் சார்ந்தவரும், ஹையர்கிரேடு பாஸ் செய்து உபாத்தியாயர் வேலையில் ரூ. 25 பெற்று வருபவரும், மாநிறமும், திடகாத்திர சரீரமுமுள்ள வாலிபருக்குமணமகள் தேவை.

மணமகள்:—20வயதிற்கு மேற்படாதவராயும், ஹையர் கிரேடு, அல்லது லோயர்கிரேடு பாஸ் செய்து, உபாத்தியாயினி வேலையிலிருந்து வருபவராயும், அல்லது உபாத்தியாயினி வேலைக்கு லாயக்குள்ளவராயும், அழகுள்ளவராயும், கன்னி, அல்லது விதவையாகினும் சரி.

விருப்பமுள்ளவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு 0-1-3 தபால் தலைகளுடன் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

ச. ம. சி, பரமசிவம்,
காரியதரிசி. த. நா. பு. ம. சங்கம்,
22, பாளையம் பஜார், திருச்சி
உறையூர் P. O.,



## "சஞ்சீவி சத்து"

மனிதர் தலைமுதல் கால்வரைவரும் சகல நோய்க்கும் திவ்யாமிர்தம் போன்றது. இதனால் காது நோய், பல்வலி, விஷப்புண்கள், விஷத்தடிப்பு, காலரா, பிளேக், அஜீர்ணபேதி, மாந்தம், பசியில்லாமை, வயிற்றுவலி, இருமல், மயக்கம், ஜுரம், மார்சளி, ஜலப்பு இன்னும் அனேக நோய்கள் மணிநேரத்தில் சொஸ்தமாகும். எல்லோரும் உபயோகிக்கலாம். வாங்கி உபயோகித்து உண்மையை உணருவின்! புட்டி விலை அணு 8.

பண்டிட் வி,கே. கண்ணுபிள்ளை,
மலபார் மெடிகல் ஹால்,
218, தங்கசாலை வீதி, சென்னை.



## ஏஜண்டுகள் தேவை.

நமது 'பகுத்தறிவு" வாரப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு

1. பொன்மலை
2. சாக்கோட்டை
3. திண்டுக்கல்
4. சென்னை
5. கோலார் தங்கவயல்.
6. பொரையார்
7. கோட்டார்
8. சிவகங்கை

முதலிய இடங்களில் டிபாசிட் கட்டக்கூடியஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்த கொள்ளலாம்.

மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பெர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

### மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

### கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில்உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின்தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும்விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு)

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்க வலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணா 4

### குடி அரசு' கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், குடி அரசில்எழுதிய தலையங்கங்களையும், பலமகாநாடுகளில்பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி சேனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும் பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 3.

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்தள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)
விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும் விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.
விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.
விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.
அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால், மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.
விலை அணா 2.

## பர்னர்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னர்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது. விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

இது மநுதர்ம சாஸ்திரம் என்பதில் உள்ள சூட்சிகளையும், கொடுமைகளையும் விளக்குவது. விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

பண்டிதர் மகாவித்வான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. இதில் அகத்தியர் என்பதாக ஒருவர் இருந்ததாகச்சொல்லுவது உண்மை அல்ல என்றும் அந்தப்படி ஒரு அகத்தியர் இருந்திருக்க முடியாது என்றும் தமிழ் சங்கங்கள் என்று சொல்லப்படுபவை கூட இருந்திருக்க முடியாது என்றும் சரித்திர ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டதாகும். விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

இது வடலூர் ராமலிங்க சுவாமி என்பவரால் சமதர்மத்தை ஆதரித்துப்பாடிய பாட்டுகள். விலை அணா 2.

## விவாக விடுதலை.

தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., அட்வகேட் அவர்களால் எழுதப்பட்டது. இது நமது "இந்து"ப் பெண்களுக்கு விவாக விடுதலையின் அவசியத்தை வலியுறுத்துவதுடன் அது சம்மந்தமான சாஸ்திரஏற்பாடுகளையும், சட்டங்களையும் விளக்குவதுமாகும். மிகவும் ஆராய்ச்சித்திறம் கொண்டது. தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் மேல் நாட்டுப் பிரயாண உருவப்படமும், மதிப்புரையும் கொண்டது. விலை அணா 0—4—0

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.